Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 108 • 03.09.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா



உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60

தீபம் எப்பொழும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## என்னை குறிவைத்து நடந்ததே அமைச்சரவை மாற்றம்

கொந்தளிக்கும் டெனிஸ்வரன்

## ஸ்கான் ரிப்போர்ட் வவுனியா மாவட்டம்

## கடலில் மூழ்கிய மாணவர்கள்: நடந்தது என்ன?

## ஒரு மொடர்ன் சாமியும் நூற்றியைம்பது சீடப்பெண்களும்

## திருமணம் செய்வதாக வாக்களித்தார் ஹக்கீம்

குமாரியின் வாக்குமூலம்



# விக்னேஸ்வரன்

# தர்மனா? துரியோதனனா?

NCT
TRANSPORTERS



No.350,Navalar Road, Jaffan
0212223509
0212227904

உங்கள் பொருட்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கும்
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் மற்றும் கிளிநொச்சிக்கும்
குறைந்த செலவில் எடுத்து செல்ல...

N C T TRANSPORTERS.
Jaffan-Kilinochchi -Colombo
No-71,wolfendhal street
Colombo -13
0112336186



NO 1 TOPAZ

# TOPAZ

No. 01 Shop in Jaffna




திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீயல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்




ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்




மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna Tel 021 222 4743 Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road Jaffna Tel 021 222 4643 Email : topazagn@gmail.com | No 195, Power House Road Jaffna Tel 021 222 4933 021 221 9933 |



# தீபம் குடும்பத்துடன் இணைந்து பணியாற்ற விருப்பமா?

தமிழின் முதல் தர வார இதழ் தீபத்துடன் இணைந்து பணியாற்ற துடிப்பான இளைஞர்கள், யுவதிகளை வரவேற்கின்றோம்

பின்வரும் பதவிகளில் கடமையாற்ற விரும்புவர்கள் இன்றே விண்ணபியுங்கள்

| பதவிகள் | எண்ணிகை |
|---|---|
| நிர்வாக உத்தியோகத்தர். | (1) |
| மாவட்ட இணைப்பாளர்கள். | (6) |
| சந்தைப்படுத்தல் முகாமையளார் | (1) |
| சந்தைப்படுத்தல்உத்தியோகத்தர்கள் | (6) |


(மாவட்டத்திற்கு ஒருவர் என்ற வகையில் தேர்வு முக தேர்வு இடம் பெறும்)


அலுவலக உதவியாளர் (1)

கிழக்கு மாகணத்தில் கடமையாற்ற விரும்புவர்களுக்கு மட்டகளப்பில் இடம்பெறும்.

13/09/2017 திகதிக்கு முன்
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகப் பணிப்பாளர் (தீபம் வார மலர்)
நோர்சி மீடியா(பிறைவேற்) லிமிற்றட், 989/1 பருத்தித்துறை வீதி கல்வியங்காடு,
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561

யாழ் புகையிரத
நிலையத்துக்கு அருகாமையில்
சகல வசதிகளுடனும்
அதி உயர்தர
வலம்புரி ஹோட்டல்.





Green Grass

**The Valampuri** 148/10 Railway Station Rd, Jaffna 40000 Phone: 021 2 220111


# TILKO

## JAFFNA CITY HOTEL

TILKO hotels

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7291
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com
Mob : 077 780 393, 0777 696 443







# கடலில் மூழ்கிய ஆறு உயிர்கள்

## மண்டைதீவு கடலில் நடந்த சோகம்

யாழ்ப்பாணத்தின் அமைதியைக் குலைத்திருந்த மண்டைதீவில் இறந்த ஆறு மாணவர்களின் இறப்புச் சம்பவம் கடந்தசெவ்வாய்க்கிழமை இடம் பெற்றிருந்தது. இச்சம்பவம் மதியம் ஒன்றரை மணியளவில் இடம்பெற்றிருந்தது. க.பொ.த உயர்தர பரீட்சையை எழுதிய மாணவர்கள் சிலர், உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் சிலருடன் க.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் மாணவன் ஒருவனின் பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு மண்டைதீவிற்கு சென்றிருக்கிறார்கள்.

வெவ்வேறு பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த இவர்கள் யாவரும் நண்பர்கள். உயிரிழந்த மாணவர்களான இவர்களில் ஒருவர் கொக்குவில் பிரம்படி வீதியைச் சேர்ந்த தேவகுமார் தனுரதன்(வயது20) க.பொ.த உயர்தர பரீட்சையின் கணிதபாடப்பிரிவில் இரண்டாம் தடவையாக தோற்றியவர். மூன்று மாணவர்கள் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள். சின்னத்தம்பி நாகசு லோஜன் (வயது17), நந்தன் ரஜீவ் (வயது18), ஜெயசாந்தன் தினேஸ்(வயது17) இவர்கள் யாழ்.பரியோவான் கல்லூரியில் தொழிநுட்பப் பிரிவில் உயர்தரம் கற்றுக் கொண்டிருப்பவர்கள். ஏனைய மாணவர்களில்ஒருவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த தனுசன்(வயது18). இவர் க.பொ.த. உயர்தரம் யாழ்.மத்தியகல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருப்பவர். மற்றையவர் நல்லூரைச் சேர்ந்த கோணேஸ்வரன் பிரவீன் (வயது20). இவர் உயர்தரப்பரீட்சைக்கு கலைப்பிரிவில் இரண்டாம் தடவையாக தோற்றியவர். இவர்கள் வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள், வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இருப்பினும் நண்பர்கள் இறந்தவர்களில் இருவர் மாத்திரமே உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாக தோற்றியவர்கள். ஏனைய மாணவர்கள் இவ்வருடம் மற்றும் அடுத்த வருடம் பரீட்சைக்கு தோற்ற இருந்தவர்கள்.

வயதால் வேறுபட்ட இவர்கள் கிரிக்கெட் விளையாடச் செல்லும் இடங்களில் வெவ்வேறு நண்பர்களின் வாயிலாக அறிமுகமாகி நண்பர்களாகி நீண்டகாலமாக ஒன்றாகப் பழகியவர்கள். சம்பவதினமான கடந்த திங்கட்கிழமை (28) ஜெயசாந்தன் தினேஸின் பிறந்தநாளை வித்தியாசமாக கொண்டாட நண்பர்கள் விரும்பினார்கள். இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்தஇடம்மண்டைதீவு.பதின்னான்கு நண்பர்கள் புறப்பட்டு சென்றனர்.

மண்டைதீவுக்கு சென்ற இவர்கள் கடலிற்கு அருகாமையில் அமர்ந்து பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இருவர்கடலில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த பழைய படகொன்றில் ஏறி கடலில் செல்லமுயன்றனர். இதன்போது மேலும் ஐந்து நண்பர்கள் படகில் ஏறினார்கள். ஏழு பெரும் படகில் பயணப்பட ஆரம்பித்தார்கள். வழக்கத்தைவிட சம்பவதினமன்று கடல் சற்று உக்கிரமாகத் தான் இருந்திருக்கின்றது.

கரையிலிருந்து வெகுதூரம் வந்த பின்னர் திடீரென படகு சரிந்துவிட்டது. படகில் இருந்த ஆறு மாணவர்களிற்கு நீந்தத் தெரிந்திருக்கவில்லை. படகு சரிந்ததை கரையில் இருந்த மாணவர்கள் அவதானித்துள்ளனர். உடனே கரையிலிருந்த இன்னொரு படகில் புறப்பட்டு அவர்களிற்கு உதவ சென்றனர். ஆனால் அவர்கள் பயணித்த படகில் ஓட்டை காணப்பட்டதால் அந்த படகும் கரையிலேயே மூழ்கியது. அவர்கள் எவ்வித ஆபத்துமின்றி கரைக்கு வந்தார்கள்.

கடலின் மத்தியில் மூழ்கிய படகில் இருந்தவர்களில் நீச்சல் தெரிந்த ஒருமாணவன் மட்டும் நீந்தி கரைசேர்ந்தான். கரையில் இருந்த மாணவர்கள் தமக்கு தெரிந்த குருநகர் மீனவர்களிற்கு தொலைபேசியில் தகவலைத் தெரிவித்தனர். தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு குருநகர் மீனவர்கள் விரைந்தனர். இதேவேளை அருகில் இருந்த கடற்படையினருக்கும் கரையிலிருந்த மாணவர்கள் தகவலைத் தெரிவித்தார்கள். குறகிய நேரத்தில் சம்பவ இடத்திற்கு சென்ற குருநகர் மீனவர்கள் எவ்வித பாதுகாப்பு அங்கியும் இன்றி கடலில் இறங்கி மூழ்கிய மாணவர்களில் ஐவரை மீட்டெடுத்தனர். எனினும், அப்பொழுது அவர்கள் இறந்திருந்தனர்.

ஐந்து மாணவர்கள் குருநகர் மீனவர்களினால் சடலமாக மீட்கப்பட்டதை தொடர்ந்து கடற்படையினரின் நிண்ட நேரதேடுதலின் இறுதியில் மற்றவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலங்கள் யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு மறுநாள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இறந்த மாணவர்களின் உடல்களில் மதுவாடை அடித்ததாக கூறப்படுகிறது. வித்தியாசமான பிறந்தநாளை கொண்டாடும் எண்ணத்துடன் கடற்கரைக்கு சென்ற மாணவர்கள் மது அருந்தியிருக்கலாம். இயற்கையாகவே உலகத்தில் படைக்கப்படும்எல்லா உயிரினங்களிற்கும் நீச்சல் தெரியும். மனிதனிற்கு மட்டுமே பழக்கத்தினால் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. நீச்சல் தெரியாத மாணவர்கள் உற்சாகமாக நண்பர்களுடன் கடலிற்கு சென்றபோது இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது."உடற்கூற்று பரிசோதனைக்காக மாணவர்களின் உடற்பாகங்கள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. •பரிசோதனையின் முடிவிலேயே மாணவர்கள் மது அருந்தியிருந்தார்களா என்பது தெரியவரும் என யாழ் போதனாவைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

நண்பர்களுடன் அடிக்கும் கும்மாளம் எல்லைமீறுவது கூடாதென்பதை இளைய சமூகம் புரிந்துகொள்வதில்லை. இத்தனை வருடம் பார்த்து பார்த்து வளர்த்த பெற்றோருக்கு இந்த சம்பவம் ஒரு பேரிடிதான். இந்த துரதிஸ்டவசமாக சம்பவம் ஒரு பாடமாக அமைய வேண்டும். குறிப்பாக உயர்தர பரீட்சை முடிந்ததும், மாணவர்கள் நிலைமறந்து கொண்டாட்டங்களில் ஈடுபடுவதில் அவதானமாக இருக்க வேண்டும்.



**பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, இருவர் கடலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பழைய படகொன்றில் ஏறி கடலில் செல்லமுயன்றனர். இதன்போது மேலும் ஐந்து நண்பர்கள் படகில் ஏறினார்கள். வழக்கத்தைவிட சம்பவதினமன்று கடல் சற்று உக்கிரமாகத் தான் இருந்திருக்கின்றது.**

# செய்யாத திட்டங்களிற்கும் உரிமைகோரும் ஹிஸ்புல்லாஹ்: முதலமைச்சர் பதிலடி!

## முட்டுக்கட்டையை மீறியே ஓட்டமாவடி காணிகளை பெற்றதாக கூறுகிறார்

**ஏறாவூர், செப்.03**

ஓட்டமாவடி பிரதேசத்தில் வீடமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரதேச அரசியல்வாதியொருவர் முட்டுக்கட்டை வகித்ததாகவும், அவரது தடையை மீறி ஒரு வாரத்தில் அந்த காணியை மீட்டெடுத்ததாகவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார். ஏறாவூர் மிச் நகர் பிரதான வீதி மற்றும் வடிகான் வீதி ஆகியவற்றை கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டபோதே இதனை தெரிவித்தார்.

முதலமைச்சரின் 40 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த புனரமைப்பு பணிகள் நடக்கவுள்ளன. இங்கு அவர் மேலும் உரையாற்றியபோது ஓட்டமாவடி பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் ஏழை மக்களிற்கு 50 வீடுகள் வழங்கப்பட்டபோதும், அவற்றை நிர்மாணிக்க காணி இல்லாதததால் அந்த திட்டம் திரும்பிச்செல்லும் நிலைக்கு சென்றது. வீடுகள் நிர்மாணிக்க வேண்டிய காணியை அரசியல்வாதியொருவர் தடுத்து வைத்திருந்ததால் இந்த பிரச்சனை ஏற்பட்டது. எனது தற்துணிவு அதிகாரத்தை பயன்படுத்தி இரண்டு வாரங்களில் அதனை பெற்று மக்களிடம் வழங்க நடவடிக்கை எடுத்தேன்.

பின்னர் வெட்கமின்றி காலையில் அதே காணிக்கு சென்று அடிக்கல் நாட்டிய கேவலமான சம்பவமும் நடந்தது. நாங்கள் மக்கள் காணிகளை கைப்பற்றி அபிவிருத்தி பணிகளை செய்யவில்லை.

கடந்தவாரம் ஏறாவூரில் ஆடைத்தொழிற்சாலையொன்றை திறந்து வைத்தேன். அந்த ஆடைத்தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எனது தாயார் வாழ்ந்த இடமாகும். இருந்தாலும், நமது பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளிற்கு பணிப்பெண்களாக சென்று கஸ்ரப்படக்கூடாதென்ற எனது இலட்சியத்தை நிறைவேற்ற எதை வேண்டுமானாலும் இழக்க தயாராக இருக்கிறேன்.

அதேபோன்று ஜனாதிபதியினால்திறந்து வைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை எனது சொந்த நிதியில் வாங்கிக் கொடுத்தேன். ஆகவே நாம் மக்கள் நிலங்களை கையகப்படுத்தி, எமது நெருங்கியவர்கள் பினாமிகளுக்கு வழங்காமல் எமது காணிகளையே வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முயல்கிறோம்.

கடந்த முப்பது வருடங்களாக அரசியல் செய்கிறவர், ஒரு இராஜாங்க அமைச்சராக இருக்கிறவர் காத்தான்குடி நகரசபை கட்டிடத்தை தான் கட்டியதாக ஊடகங்களுக்கு அறிக்கைவிட்டு திரிகிறார். முப்பது ஆண்டு அரசியலில் இருக்கும் அவருக்கு தெரியும், மத்திய அரசின் ஒரு பணியை முடிப்பதென்றால் பல்வேறு கடிதத்தலைப்புக்கள் இருக்கும். நகரசபை கட்டிடத்தை தான் நிர்மாணித்ததற்கு ஆதாரமான ஒரு கடிதத்தை காட்டுமாறு நான் சவால் விடுக்கிறேன்.

காத்தான்குடி நகரசபை கட்டிடமோ ஏறாவூர் பிரதேசசபை கட்டிடமோ யாரின் முயற்சியினாலும் ஆரம்பிக்கப்பட்டதல்ல. அவை நெல்சிப் எனப்படும் வடக்குகிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகவே அவை நிர்மாணிக்கப்பட்டன. நெல்சிப் திட்டத்தால் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளிலும் உள்ளூராட்சி மன்றங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அங்கிருக்கும் அரசியல்வாதிகள் யாராவது அதற்கு உரிமை கோரினார்களா? நீங்கள் மாத்திரம் எப்படி உரிமைகொண்டாட முடியும்?

அத்துடன் இன்று நெடுந்தெருக்கள் சம்பந்தமாக உரிமைகோர வருகிறார்கள். நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன். முடிந்தால் நெடுந்தெருக்கள் திட்டத்தில் ஒன்றையாவது நிறுத்திக்காட்டுங்கள்.

முப்பது வருடங்களாக இராஜாங்க அமைச்சராக இருக்கும் இவரால் முப்பது வருடத்தில் காத்தான்குடியில் மாத்திரமல்ல மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கினீர்கள் என்ற பட்டியலை காட்டுங்கள். கடந்த இரண்டு வருடத்தில் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கினேன் என்ற பட்டியலை நான் காட்டுகிறேன். மக்களை ஏமாற்றி, சுயலாப அரசியலை முன்னெடுக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

# அட்டாளைசேனை முட்டாள்களின் பிரதேசமா?

## மு.கா உயர்பீட உறுப்பினர் எஸ்.எல்.எம்.பளீல் குமுறல்

**அட்டாளைசேனை, செப்.03**

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு தேசிப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதாக காலா காலமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வாக்குறுதியளித்துவிட்டு, அப்பட்டமாக மீறி வருவதாக, மு.காங்கிரசின் உயர்பீட உறுப்பினரும், கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்பாளருமான எஸ்.எல்.எம். பளீல் பி.ஏ. தெரிவித்துள்ளார்.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியினை அட்டாளைச்சேனைக்கு வழங்குவேன் என்கிற மு.கா. தலைமையின் வாக்குறுதிகள் வெறும் பம்மாத்தும், பெறுமதியற்ற வாய்ச்சாடல்களும்தானா எனவும் அவர் கேள்ளியெழுப்பியுள்ளார்.

மேலும், அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் ஆரம்பித்து வைத்த அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் மு.கா. தலைவர் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் ஆகியவை தொடர்பிலும், பளீல் பி.ஏ. தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்திலேயே, மேற்படி விடயங்களை பளீர் பி.ஏ. குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் பதிவு செய்கையில்;

அட்டாளையின் வரலாறு 30 வருட அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களைக் கொண்டது. இருந்தும், பொத்துவில் தொட்டு புல்மோட்டை வரையும் முகாவினால் வழங்கப்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி எனும் அதிகாரம், ஏன் அட்டாளைச்சேனை மக்களுக்கு தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது? அதனால் அட்டாளைச்சேனை மக்கள் அடைந்துள்ள ஆதங்கமும் விரக்தியும் விளங்குமா?

களியோடைக்கு அப்பால் தொடர்ந்தும் வாக்களித்து, பொத்துவில் வரையும் கைவிடப்பட்டுள்ள சுமார் 65 ஆயிரம் மக்களுக்கு தேவைகளும் அபிலாசைகளுமில்லையா? அவர்களின் பிள்ளைகளும் சந்ததிகளும் அரசியல் அநாதைகளா? அட்டாளைச்சேனை என்பது ஏமாளிகளையும், முட்டாள்களையும் கொண்ட பிரதேசமா?

தொடர்ந்தும் அம்பாறை . மாவட்டத்தின் பெரிய ஊர்கள் மற்றும் தொகுதிகளின் மேய்ச்சல் தரையாகத்தான் அட்டாளைச்சேனை மக்கள் இருக்க வேண்டுமா? கடந்த 2015 பொதுத் தேர்தலில் இப்பிரதேச மக்களின் தொடர் தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றால்தான் சம்மாந்துறையின் மானமும் மரியாதையும், முகாவின் தேசிய மட்டத்திலான பேரம் பேசலும் பாதுகாக்கப் பட்டது என்பது புரியவில்லையா?

மேலும், அட்டாளைச்சேனை ஊர்மக்கள் வழங்கிய பணம் மூலம் 13 அடி நிலத்தை கொள்வனவு செய்து, அதனை அட்டாளைச்சேனை வைத்தியசாலையின் வீதியோடு இணைத்து அகலமாக்கியமை, சரித்திரம் காணாத அபிவிருத்தி மழையா?

நாங்களும் முஸ்லிம் காங்கிரசின் போராளிகள்தான். அதற்காக எல்லாவற்றையும் நியாயம் என்று கூறி, குருட்டுத்தனமாக வாதிட முடியாது. அட்டாளைச்சேனைக்கு வாக்களிக்கப்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தாமதமடையும் ஒவ்வொரு கணமும், மு.கா.வின் சரிவை யாரும் தடுக்க முடியாது என்ற யதார்த்தம் புரியவில்லையா?

கடந்த 27ஆம் திகதி அட்டாளைச்சேனையில் தலைவர் கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் முகா. ஆதரவாளர்கள் குறைந்து காணப்பட்டமையின காணவில்லையா? இம்மண்ணில் நாம் இதுவரையும் கட்டிக்காத்த முஸ்லிம் காங்கிரஸ், அழிந்து போவதை பொறுப்பீர்களா?" என்று குறிப்பிட்டுள்ளார்.



# பெண்களின் ஆடையால் சர்ச்சை!

**மாத்தறை, செப்.03**

மாத்தறை சீனிகம விகாரையில் இடம்பெற்ற பெரஹரா ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஐந்து 'பெண்கள் அணிந்திருந்த ஆடையால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. பெண்களின் ஆடை பௌத்த மதத்தை அவமதிக்கும் விதமான அமைந்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன. இதனையடுத்து, சிங்கள ஊடகங்களிலும் பேசுபொருளாக மாறியுள்ளது.

இந்த பெண்கள் பௌத்த மதத்திற்குரிய கொடியை ஒத்தவகையில் ஆடை அணிந்திருந்தனர். பௌத்தர்களின் முக்கிய மத நிகழ்வொன்றில், மத நிந்தனைக்குரிய விதத்தில் எப்படி ஆடை அணியலாமென்பதே இப்போது எழுந்துள்ள சர்ச்சை. சீனிகம விகாரைக்குள் உள்வீட்டு பிரச்சனைகள் உள்ளன, இதன் எதிரொலியாகவே பெண்கள் அப்படி ஆடை அணிய வேண்டிய சூழல் உருவானதென்ற கருத்து உள்ளூரில் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்திற்கு மறுநாள் நடந்த பெரஹர ஊர்வலத்தில் தவறு சரி செய்யப்பட்டிருந்தது. குறித்த பெண்கள் வேறு பொருத்தமான ஆடைகளை அணிந்திருந்தனர்.

## கருக்கலைப்பு அவசியம்!

இலங்கையில் கருக்கலைப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முயற்சித்து கொண்டிருக்கிறது. இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையின் சமூக, அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மைல் கல்லாக அமையும். கலாசாரம், பண்பாடு உள்ளிட்ட மனிதவாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் உலகத்திற்கு முன்னுதாரணமாக திகழும் நாடு என மதத்தலைவர்களும், ஆட்சியாளர்களும் குறிப்பிட்டு வரும் தேசத்தில் இந்த சட்டம் நடைமுறைக்கு வருமாயின் நிஜமாகவே பிராந்தியத்தில் முன்னுதாரணம் மிக்க தேசமாக இலங்கை இருக்கும்.

ஒரு கருவிற்கும் தாயிற்கும் இருக்கும் உறவு புனிதமானது. சட்டங்களாலோ வேறு எதனாலோஅளவிட முடியாத ஆழமுடையது. ஒரு கருவை சட்டம் பாதுகாப்பதை விட அதிகமாக தாய் பாதுகாக்கிறார். கருவை பாதுகாப்பதில் சட்டத்தின் அதிகாரபூர்வ பங்களிப்பைவிட, தாயின் உணர்வுபூர்வ பங்களிப்பு அதிகம்.

ஆனால் துயரம் என்னவெனில், எல்லா கருக்களிற்கும் இந்த வரம் கிடைப்பதில்லை. பல்வேறு காரணங்களால் கருக்கலைப்பில் ஈடுபடுபவர்கள் உள்ளனர். இப்படியான மிகச்சிறிய விகித கருக்களிற்குத்தான் அதிகாரபூர்வ சட்டத்தின் பாதுகாப்பு அவசியமாகிறது. என்னதான் கருக்கலைப்பிற்கெதிரான சட்டங்கள் இருந்தாலும், இலங்கையில் நாளாந்தம் சுமார் 650 கருக்கலைப்புக்கள் நடப்பதாக புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. ஆக, நாளாந்தம் 650 கருக்களை சட்டத்தால் பாதுகாக்க முடியாமல் போகிறது.

மறுவளமாக, தாயின் கவனயீனத்தால் ஏற்படும் கருச்சிதைவுகள் இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் இல்லை. அது குறித்த தெளிவான புள்ளிவிபரங்கள் இல்லையென்றபோதும், இது பெருந்தொகையாக இருக்க வாய்ப்பில்லை. இந்த இரண்டு புள்ளிவிபரங்களும் எதை குறிக்கிறதென்றால், ஒரு கரு வரமாக இருக்கலாமே தவிர சாபமாக இருக்கக்கூடாது. அப்படியொரு சாபத்தை எந்த பெண்ணும் சுமக்கவிரும்புவதில்லை. இலங்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ள கருக்கலைப்பு சட்டத்தின்படி இரண்டு காரணங்களிற்காக கருவை கலைக்கலாம். ஒன்று, பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்ணொருவரின் கரு. இரண்டு, மரபணு பிறழ்விற்குள்ளான கரு.

இந்த இரண்டில் ஒரு விதமாக பெண்ணுக்கு கருவை சுமக்க வேண்டி ஏற்பட்டால், அது உவப்பான கருவாக இருக்காது. வயிற்றில் இருக்கும் சுமையாகவே இருக்கும். பாலியல் வன்முறையால் ஒரு சிறுமி கருவை சுமக்க வேண்டியேற்பட்டால், அந்த கருவை பிரசவிக்க வலியுறுத்துவது நீதியின் பெயரால் நடக்கும் இன்னொரு அநீதியாகவும் இருக்கலாம். தாய்மைக்குரிய முதிர்ச்சியை பெறாத சிறு பெண்களின் உடலின் மீது நடத்தப்படும் தாக்குதல்தான் இது.

அந்த கருவே அவரது சம்மதம் அல்லது தெளிவில்லாமல் ஏற்பட்டதுதான். அதை வலுக்கட்டாயமாக பிரசவிக்க கோருவது அநீதியானது. அதுபோல மரபணு பிறழ்விற்குள்ளான கருக்களை பிரசவிப்பதால் ஏற்படும் துயரங்கள் அளவிட முடியாதவை.


இலங்கையில் நடக்கும் சட்டவிரோத கருக்கலைப்புக்கள் அனைத்தும் மேலே சொன்ன இரண்டு காரணங்களிற்காக நடப்பதல்ல. மிகமிக சிறிய வீதமாகவே இந்த காரணம் உள்ளது. ஆனால், இந்த இரண்டு காரணங்களின் நிமித்தமாக கருவை கலைக்க சட்டம் இற்றப்படுவது, சட்டவிரோத கருக்கலைப்பின் "சட்டவிரோத" தன்மையை அதிகரிக்கும். சமூகத்தில் இது தொடர்பான விழிப்புணர்வு ஏற்படும். கருக்கலைப்பிற்கு அனுமதியளிப்பது சமூகப்பிறழ்விற்கு வழிவகுக்குமென ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. உண்மையில் இது சிறுபிள்ளைத்தனமானது. இரண்டு மூன்று தசாப்தங்களிற்கு முன்னான மனநிலையிது. இன்றைய நவீன உலகத்தில் சமூகப்பிறழ்வுகள் எல்லாம் கருக்கலைப்பில்தான் முடிகிறதென நினைப்பது பத்தாம்பசளித்தனம்.

கருக்கலைப்பு தொடர்பாக சில தசாப்தங்களின் முன்னரே மேற்கத்தைய நாடுகளில் விரிவான விவாதங்கள் நடந்துவிட்டன. இலங்கை இப்பொழுதுதான் அந்த இடத்தை வந்தடைந்திருக்கிறது. எனினும், இலங்கைக்குள் இந்த சட்டத்திற்கு எதிர்ப்பு கிளம்பாமலில்லை. இது கலாசரம், மதம் ஆகிய இரண்டு முனைகளில்தான் அதிக உணர்திறனை கொண்டது. இந்த முனைகளில் இருந்து நிச்சயம் எதிர்ப்பு வரும் என எதிர்பார்க்கப்பட்டதுதான். முதலில் கத்தோலிக்க ஆயர்கள் இந்த சட்டத்தை எதிர்ப்பதாக அறிவித்துள்ளனர்.

கத்தோலிக்கம் உள்ளிட்ட எல்லா மதங்களும் இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆண்களின் மதங்கள்தான். மதமும் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதல்ல. மதம் தன்னுள் உள்ள பலவீனமான கூறுகளை புதுப்பித்துக்கொள்வதற்கு முன்னர் சமூகம் புதுப்பித்து கொள்வதுதான் மானிட வரலாறே. எல்லா மதங்களின் பரிணாம வளர்ச்சியையும் அவதானித்தால் இது புரியும். இப்பொழுது கருக்கலைப்பு சட்டத்திற்கு எதிராக எழுந்துள்ள, எழப்போகும் கருத்துக்களை இப்படித்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆண்களால் செய்யப்படும் ஆட்சியில், ஆண்களால் கட்டுப்படுத்தப்படும் மத நிறுவனங்களில் பெண்களின் உரிமைகளை நிலைநிறுத்துவது மிக சிரமம். அதை அவர்கள் புரிந்துகொள்வதும் கடினம். ஆனால் எதிர்பாராதவிதமாக இலங்கையின் தற்போதைய அரசு கருக்கலைப்பு சட்டத்தை கையிலெடுத்துள்ளது. மேலைத்தேய அனுசரிப்பு இதன் பின்னணியில் இருந்தாலும், யார் குற்றினாலும் அரசியாகட்டும். கருக்கலைப்பு சட்டம் இலங்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க முன்னகர்வாக நிச்சயம் இருக்கும்.

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0214927562
அலுவலகம்: 0214927561
விநியோகம்: 0214927542
விளம்பரம்: 0768255560
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com




# இருப்பவர்கள் இருந்தால்...

மணியம்மை

கடந்த வாரம் தென்மராட்சியை சேர்ந்த யுவதியொருவர் தனது சகோதரியின் வீட்டில் தற்கொலை செய்துகொண்டிருந்தார். தற்கொலையென்பதே தவறான முடிவுதான். அதில் இரண்டு கருத்தில்லை. ஆனால், காலம்காலமாக பெண்களை வதைக்கும் சீதனக்கொடுமையால் இந்த பெண் தவறான முடிவை எடுத்துள்ளார் என்ற போது, நிச்சயமாக மனிதர்களாக நாம் எல்லோரும் வெட்கப்பட வேண்டும். சீதனம் மாதிரியான பெரும் சீரழிவுகளை கொண்ட ஒரு சமூகத்தின் அங்கமாக நாமும் இருக்கிறோம் என்பது நிச்சயம் வெட்கக்கோடானது.

தமிழர்கள் மத்தியில் வேரோடியுள்ள மிக கேவலமான வழக்கமிது. சீதனம் மனித உறவுகளை வியாபாரமாக்குகிறது என்றபோதும் யாருக்கும் இது குறித்து வெட்கமில்லை. மாறாக சீதனம் வாங்குவதை பெருமைக்குரிய ஒன்றாகவே இந்த சமூகம் கட்டியமைத்திருக்கிறது. எவ்வளவிற்கு எவ்வளவு சீதனத் தொகை அதிகரிக்கிறதோ, அவ்வளவிற்கு சமூக அந்தஸ்து அதிகரிக்கும் என சிந்திக்கும் விசித்திர சமூகம் நமது.

சீதனம் வாங்காத கொள்கையுடையவர்கள் இந்த சமூகத்தில் இருக்கிறார்கள் என்பதோ, சீதனம் ஒரு அவமானகரமான விடயம் என்பதோ சமூகத்தின் பெரும்பாலானவர்களிற்கு தெரியாது. யாராவது ஒருவர் சீதனம் வாங்கவில்லையென்றால், அவர் ஏதோ பிரச்சனையுடையவர் என்றுதான் தமிழர்கள் சிந்திப்பார்கள். தமிழர்களின் சிந்தனை ஆற்றல் அவ்வளவுதான்!

கல்வி, கலாசாரம், பண்பாட்டில் தலை நிமிர்ந்து நிற்கிறோம்... அறிவாளிகளின் கூடாரம் என்ற பகட்டுக்களிற்கு யாழ்ப்பாணத்தில் குறைவில்லை. நமது பல வழக்கங்களிற்கும் நமது வீண் பெருமைகளிற்குமிடையில் எந்த தொடர்புமில்லையென்பதே யதார்த்தம். நமது வாழ்க்கைமுறை, பாரம்பரியத்தில் பிற்போக்குத்தனங்களை அதிகமாக வைத்துக் கொண்டு, அறிவார்ந்த சமூகம் என சொல்வது எவ்வளவு பெரிய முரண்?

சீதனம் ஒரு சமூகக்கொடுமையென்பதை விடுதலைப்புலிகளும் உணர்ந்திருந்தார்கள். இன்று எடுத்ததற்கெல்லாம், இருப்பவர்கள் இருந்தால் இப்படி ஆகுமா என சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் பலர். இருப்பவர்கள் இருந்த போதுதான் சீதனம் தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டது. மணக்கொடை தடைச்சட்டம் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி மணமகள் வீட்டில் வலுக்கட்டாயமாக சீதனம் கோருவது தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டிருந்தது.

அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல் பாலசிங்கம், தமிழ் சமூகத்தில் பெண்கள் மீதான நெருக்குவாரங்களை பற்றி உடையாத விலங்குகள் என்ற தொடர் எழுதியிருந்தார். இதில் சீதனம், அதன் விளைவுகள் பற்றி விரிவாக எழுதியிருந்தார்.

தமிழர்களின் பொதுவான இயல்பே எதிலும் தமக்கு தேவையானதை மட்டுமே எடுத்துக்கொள்வது. விடுதலைப்புலிகள் போராடியபோது, அதனால் விளைந்த அத்தனை அம்சங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த கருத்தியலை தமது வாழ்வுடன் பொருத்த தயாராக இல்லை. இன்றும், இருப்பவர்கள் இருந்தால் என பாதி கண்ணைமூடி பழைய நினைவுக்கு செல்லும் எத்தனைபேர், சமூகவாழ்வில் புலிகள் கடைப்பிடித்த முற்போக்கான அம்சங்களை கடைப்பிடிக்க தயாராக இருக்கின்றனர்? புலிகள் நடைமுறைப்படுத்திய கொள்கைகளை பின்பற்ற தயாரில்லாதவர்கள், பின்னர் புலிகளை சொல்லி எதற்கு தற்புகழ்ச்சி கொள்வான்?

இன்று தமிழ்தேசியம் பேசும் யாருமே சமூகமாற்றம் பற்றி பேசுவதில்லை. சமூக மாற்றம் பற்றி பேசுவது தமிழ்தேசியத்திற்கு எதிரானது என்பதை போன்ற அலர்ஜிதான் பெரும்பாலான தேசியவாதிகளிற்கு. சமூகமாற்றம் சாத்தியமில்லாத தேசிய விடுதலை முழுமையான விடுதலையல்ல என்ற போதிய புரிதலும் நமது தலைவர்கள் யாரிடமும் இல்லை. இந்தவகையான ஒற்றைப்படை சிந்தனையுள்ள தலைவர்களால் தமிழ் தேசியமென்பது கடைந்தெடுக்கப்பட்ட பிற்போக்குத்தனங்களின் கூடாரம் என்று ஆகிவிட்டது.

சமூக மாற்றம் குறித்த எந்த பிரக்ஞையும் நமது அரசியல்கட்சிகளிடம் கிடையாது. சமூகவலைத்தளங்களின் வளர்ச்சிக்கு பின்னர் கருத்து சொல்லும், போராட்ட குணத்தை வெளிப்படுததும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. நமது சூழலில் இளைஞர்கள் கருத்து சொல்லும்,செயற்பாட்டாளர்களாக வயதுக்கு வருவதென்பது கட்சிகள் சார்ந்து கருத்து சொல்வது ஒன்றுதான். இவ்வகையானவர்களின் அதிகபட்ச செயற்பாடே, தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பற்றிய மோதல்களில் ஈடுபடுவதுதான்.

இவர்களை வழிநடத்தும் கட்சிகளிற்கும் சமூக மாற்றம் பற்றிய பிரக்ஞை கிடையாது... கட்சிகளை பின்தொடரும் இவர்களிற்கும் கிடையாது. தமிழ் சமூகத்தின் மிகப்பெரிய பலவீனங்களில் ஒன்று இது.

நம்மாழ்வார்

மகாபாரதத்தில் அஸ்தினாபுரத்தின் ஆட்சிப்பொறுப்பை துரியோதனனிடம் வழங்குவான் திருத்ராட்டிரன். துரியோதனின் ஆட்சியில் சாந்தனுவின் வம்சமே சிதறிவிடுகிறது. இறுதியில் பெரும் போர் நிகழ்ந்து எண்ணற்ற உயிரிழப்புக்களுடன் திருதராட்டிரனின் வம்சமே அழிந்து விடுகிறது. ஆட்சிஅதிகாரத்தில் இருப்பவர்களின் பொறுப்புணர்வே தேசத்தையும், ஆட்சியையும், மக்களையும், அரசியலையும் பாதுகாக்கிறது. பொறுப்பற்ற ஆட்சி அனைத்தையும் சிதைத்து அந்த தேசத்தையே மீளெழ முடியாத பாதாளத்தில் தள்ளிவிடுகிறது.

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் அரசியல் முடிவுகளை அவதானிக்கும்போது ஏனோ துரியோதனின் நினைவே தவிர்க்க முடியாமல் எழுந்து கொண்டிருக்கிறது. வடமாகாணசபைக்குள், தமிழ்தேசிய கூட்டமைப்புக்குள், தமிழர் அரசியலுக்குள் கடந்த நான்காண்டுகளில் களும், குறைகளும் இருந்தனதான். பலகட்சிகளின் கூட்டு அமைப்பில் அப்படியிருப்பது வழக்கம்தான். இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால், இந்த மனத்தாங்கல்கள் காதும்காதும் வைத்த மாதிரித்தான் இருந்தது.

வடமாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக விக்னேஸ்வரன் களமிறக்கப்பட்டபோதேதமிழ்தேசிய அரசியலில் ஒரு தெளிவான கருத்துநிலை பிளவு ஏற்பட்டது. விக்னேஸ்வரனை களமிறக்குவதன் மூலம்வடக்குதமிழர்களின் போர்க்குணத்தை (உண்மையில் தமிழர்களிற்கு அப்படியொரு குணவியல்பே கிடையாது. வாக்களித்தவர்களை கண்டறிய முடியாதென்ற துணிச்சலில் தேர்தலில் எதிர்ப்பரசியல் செய்கிறார்கள்) தணியவைத்து, அரசியல் தீர்வில் சமரசங்களிற்கு உடன்படத்தக்க கொழும்புமைய சிந்தனையுடைய ஒருவரிடம் வட மாகாண நிர்வாகத்தை கையளிப்பதே கூட்டமைப்பின் எண்ணமாக இருந்தது. கிட்டத்தட்ட சம்பந்தரை போன்றஎதிரியாக அவரை கருதிய சுரேஷ் பிரேமச்சந்திரன் அவரை தலைமைதாங்க வருமாறு அழைக்குமளவிற்கு காட்சிமாற்றங்கள் நடந்தன. எவ்வளவிற்கெவ்வளவு விக்னேஸ்வரனின் உருமாற்றம் நிகழ்ந்ததோ அவ்வளவிற்கவ்வளவு கூட்டமைப்பின் தலைமை மீதான விமர்சனத்தளத்தை ஒரு பகுதியினர் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

அதாவது தமிழ்தேசிய கூட்டமைப்பில் இருந்து விடுதலைப்புலி ஆதரவாளர்களை அகற்றுவதன் மூலம், அதிதீவிர தமிழ் தேசியத்தின் காரத்தை சற்று குறைக்கலாமென கூட்டமைப்பின் தலைமை கருதியது. விட்டுக்கொடுப்புடன் கூடிய இனங்களிற்கிடையிலான இணக்கப்பாட்டுக்கு இந்த தன்மை அவசியமென அவர்கள் கருதினார்கள். ஆனால் இந்த எதிர்பார்ப்பிற்குள் விக்னேஸ்வரன் அகப்படவில்லை. அதிதீவிரம் பேசுபவர்களிற்கு தலைமைதாங்குபவராக இரண்டு வருடங்களில் மாறினார். அரங்கிலிருந்து குழப்பங்களோ, கூட்டணி குழப்பங்களோ எதுவும் அவரை இடையீடு செய்யவில்லை. கட்சியின் பாதுகாப்பு ஓட்டுக்குள் இருந்தபடி கட்சியை எதிர்த்தார்.

ஆனால் இப்பொழுது நிலைமை அப்படியல்ல.விக்னேஸ்வரன்கிட்டத்தட்ட கட்சி பாதுகாப்பு ஓட்டைவிட்டு முழுமையாக வெளியேறிவிட்டார். இப்பொழுது தான் வெறும்தரையில் காலூன்றி நிற்கிறார். தமிழ் தேசிய அரசியலில் மூன்று வருடங்களாக மெல்லமெல்ல ஏற்பட்டு வந்த கருத்துநிலை பிளவில், விக்னேஸ்வரன் பாதுகாத்த கருத்துநிலை அணியினர் அவருடன் நிற்கிறார்கள். இது விக்னேஸ்வரனின் மைதானம்.விக்னேஸ்வனே நடுவர். விக்னேஸ்வரனே ஒரு தரப்பு போட்டியாளர். ஆடுபவரும் விக்னேஸ்வரனே ஆட்டுவிப்பவரும் விக்னேஸ்வரனே.

இந்த ஆட்டத்தை விக்னேஸ்வரன் எப்படி ஆடுகிறார்?

விக்னேஸ்வரனின் அரசியல் முடிவுகள் சாதுரியமானவையல்ல. கூட்டணி




# விக்னேஸ்வரன் தர்மனா? துரியோதனனா?

விக்னேஸ்வரன் ஏற்படுத்திய தாக்கங்கள், மாற்றங்கள் என்பவற்றை பட்டியலிட்டு, அவை எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதை அவதானித்தால் விக்னேஸ்வரன் என்பவர் துரியோதனனா, தர்மனா என்ற முடிவிற்கு வரலாம்.

2013இல் இரா.சம்பந்தன் தலைமையிலான அணியினர் க.வி. விக்னேஸ்வரனை அரசியலுக்கு அழைத்து வந்த சமயத்தில் இலங்கையில் இனநெருக்கடிக்கான தீர்வு வாய்ப்புக்கள் என்பது கிட்டத்தட்ட இல்லையென்ற நிலைதானிருந்தது. விடாக்கண்டன் கொடாக்கண்டனாக மகிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச குடும்பம் அரசியல், இராணுவ, பொருளாதார வழிமுறைகளில் ஈழத்தமிழர்களை சுற்றிவளைத்து தாக்கிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் அரசியல் வழிமுறையே தமிழர்களை ஓரணியில் திரட்டி, எதிர்ப்பரசியல் முனையொன்றை உருவாக்கி வைத்திருந்தது. அந்த முனையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைதாங்கி சென்றது.

அப்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் சின்னச்சின்ன மனத்தாங்கல்

இதை தொடர்ந்து, தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் முதலாவது பெரிய பகிரங்க சர்ச்சை உருவானது. ஜனாதிபதி முன்னிலையில் விக்னேஸ்வரன் பதவியேற்க, ஒரு தொகுதியினர் வீரசிங்கம் மண்டபத்தில் பதவியேற்றனர். இதை புறக்கணித்து இன்னொரு தொகுதியினர் வேறுவேறு இடங்களில் பதவியேற்றனர். அமைச்சு பதவி பங்கீட்டில் கட்சிகளிற்கிடையில் பெரியளவில் மோதல்கள் ஏற்பட்டன. இந்த விமர்சனங்கள் எல்லாமே சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் மீதே விழுந்தன.

தான் எந்த நோக்கத்திற்காக அரசியலுக்கு அழைத்து வரப்பட்டேனோ அதனை நிறைவேற்றுபவராக விக்னேஸ்வரன் இருக்கவில்லை. மாகாணசபைக்குள்ளால் அரசியலிற்குள் நுழைந்த பின், அவரது பயணம் யூ ரேர்ன் அடித்து விட்டது.

விக்னேஸ்வரனின் யூ ரேர்ன் தமிழர் அரசியலில் முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது. இதுவரை கொழும்பு தமிழர், மஹிந்தவின் சம்பந்தியென விமர்சிக்கப்பட்டு வந்தவர் மெதுமெதுவாக தேசிய வீரராகினார். அவரை கடுமையாக எதிர்த்த, காணாமல் போய்கொண்டிருந்த அதிதீவிரம் பேசுபவர்கள் எல்லோரும் அவரின் பின்னால் அணிதிரண்டு, தமிழ் தேசிய அரசியலில் தெளிவான இரண்டு கருத்துநிலை பிளவை தோற்றுவித்துள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், மற்றும் உதிரியாக செயற்படும் பலர் வலியுறுத்தும் விட்டுக்கொடுப்பற்ற, தீவிர அரசியல்தன்மையை செயலிழக்க விடாமல் பாதுகாத்தார் என்ற பெருமை விக்னேஸ்வரனிற்கு உண்டு. ஆனால் அவர் அரசியலிற்கு புதியவர். இராஜதந்திர அணுகுமுறைகளை இப்பொழுதுதான் கற்றுவருகிறார். எந்தமேடையில் எதை பேசுவதென்ற முழுமையான அனுபவத்தை கொண்டிராதவர். மனிதர்களை எப்படி கையாள்வதென்ற கலையில் பலவீனமானவர். உயர்நீதிமன்ற நீதிபதி. மதவாதி. இவையெல்லாம் சேர அவரது அரசியல் பாத்திரத்தை இப்பொழுது பலவீனமாக்கி வருகிறது.

எதிர்ப்பரசியல் களத்தில் அவர் ஒரு நட்சத்திரமாக திடீரென துருத்திக்கொண்டு எழுந்தார். அதில் சிரமங்கள் இருக்கவில்லை. மாகாணசபை நிர்வாகமோ, கட்சி கட்சிகளையோ, தன்னுடன் உள்ள உறுப்பினர்களையோ தக்கவைத்து கொள்ளும் முதிர்ச்சியும் அவரிடமில்லை. அவர் தன்னையொரு நீதிபதியாக, உயர்ந்த இடத்தில் இருப்பவராக கருதுகிறார். சில முடிவுகளை மின்னஞ்சல் மூலம் உறுப்பினர்களிற்கு அறிவிப்பது மட்டுமே அவரது அதிகபட்ச கலந்துரையாடல். தூய அரசியல் நடத்துவதாக நினைத்துக் கொண்டாலும், அதன் விளைவுகள் எதிர்மறையாகவே இருக்கின்றன. மாகாண நிர்வாகமும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் இரட்டை குதிரைகள் போல. இவை இரண்டின் அடிநாதமாக விளங்குவது தமிழ்தேசியம். ஆனால் முதலமைச்சரிற்கு இரட்டைகுதிரை சவாரி சரிவரவில்லை. மாகாண நிர்வாகத்தை போல, அதனுடன் தொடர்புபட்ட கட்சிகளையும் கட்டுப்படுத்தலாமென அவர் நினைக்கிறார்.

அவரது முடிவுகளால் கூட்டமைப்பிற்குள்ளும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் அதிகபட்ச

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# “என்னை குறிவைத்துத்தான் அமைச்சரவை மாற்றம் நடந்தது”

## கொந்தளிக்கிறார் டெனிஸ்வரன்

சரவணபவ ஆனந்தன் திருசெந்தூரன்

வடக்கு அரசியல் களத்தில் இன்றைய திகதியில் அதிக சர்ச்சைக்குரியவராக இருக்கிறார் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன். அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய முதலமைச்சருக்கு எதிராகவும் கட்சி அங்கத்துவத்தை இடைநிறுத்திய ரெலோ கட்சிக்கு எதிராகவும் இரட்டை போர்வாளை சுழற்றிக் கொண்டிருக்கிறார்.

அமைச்சு பதவியில் இருந்து நீக்கியதற்கெதிராக நீதிமன்றத்தை நாடும் பணியில் பரபரப்பாக இருந்தவரை சந்தித்து பல்வேறு விடயங்கள் பற்றி பேசினோம்.

**தீபம் : அமைச்சர் பதவியில் இல்லாத டெனிஸ்வரன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

**டெனிஸ்வரன்:** முதலமைச்சரின் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளிற்கு எதிராக நீதிமன்றத்தை நாடப்போகிறேன். இதுதவிர, எனது வழக்கமான மக்கள் பணிகள் தொடர்கின்றன. அமைச்சராக இருந்தபோது போராளிகளிற்காக ஆரம்பித்த வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். இவை பற்றி திட்டமிட்டு கொண்டிருக்கிறேன்.

**தீபம்: உங்களை அமைச்சர் பதவியில்இருந்து நீக்கியதற்குஎதிராகநீதிமன்றத்திற்கு செல்லவுள்ளதாக கூறியிருந்தீர்கள். அப்படியானதிட்டமெதுவும்இப்போதும் உள்ளதா?**

**டெனிஸ்வரன்:** ஆம். சட்டநடவடிக்கைக்காகத்தான் கொழும்பில் சில நாட்கள் தங்கியிருந்தேன். இப்பொழுது நீதிமன்றத்தில் முறையிட்டுள்ளேன்.

**தீபம்: இறுதியாக முழு அமைச்சரவையையும் சீரமைப்பதென்ற முடிவைத்தான் முதலமைச்சர் எடுத்திருந்தார். அதாவது உங்கள் மீதோ சத்தியலிங்கத்தின் மீதோ ஊழல் குற்றச்சாட்டுகளால் விசாரணைகளிற்கு சமூகமளிக்காததால் நீக்கப்படவில்லை. அப்படியிருந்தபோதும் ஏன் அமைச்சர் பதவியை விட்டு விலக மறுத்தீர்கள்?**

**டெனிஸ்வரன்:** முதலமைச்சர் அமைச்சர்களை மாற்றுவதானால் ஆளுனருக்கு அறிவித்து மாற்றியிருக்கலாம். அவர் அதை செய்யவில்லை. முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டபோது மற்றைய அமைச்சர்களின் மீதும் எழுத்து மூலமான ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருக்கிறதென விசாரணைக்குழுவை அமைத்தார். விசாரணைக்குழு பற்றி முதலமைச்சர் மாகாணசபையில் தெரிவித்த போது அதை வரவேற்று விசாரணைக்குழுவை உடன் அமைக்க கோரியது நான் மட்டும்தான். விசாரணைக்குழுவின் அறிக்கையிலும் என் மீது குற்றம்சாட்டவில்லை. ஆனாலும் என் மீது ஊழல் குற்றச்சாட்டை வைத்து விடுமுறையில் அனுப்ப முயன்றதுதான் பிரச்சனையின் மூலம். என்னை நீக்குவதற்கு தகுந்த காரணம் சொல்ல வேண்டும்.

கட்சியும் தமக்கு தேவையானவர்களை அமைச்சராக்க என்னிடம் ராஜினாமா கடிதத்தை கேட்டார்கள். என்னை நீக்குவதற்காகத்தான் அமைச்சர் வாரியம் மாற்றம் என முதலமைச்சரோடு சேர்ந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்தார்கள். இன்று என்னை தூக்கி எறிந்திருக்கிறார்கள். அமைச்சரவை மாற்றமென்பது இதயசுத்தியோடு ஆரம்பிக்கப்பட்டதல்ல. என்னை குறிவைத்து ஆரம்பிக்கப்பட்டது.

**தீபம்: உங்களது விடாப்பிடியான மறுப்பு அமைச்சு பதவி மீது உங்களிற்கு ஆர்வமுள்ளதென்ற அபிப்பிராயத்தை மக்களிடம் ஏற்படுத்தாதென நினைக்கிறீர்களா?**


**டெனிஸ்வரன்:** இல்லை. மக்கள் என்னுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசியில் பேசுகிறார்கள். விடயத்தை அவர்கள் விளங்கி வைத்திருக்கிறார்கள். முதலமைச்சரும், கட்சியும் சேர்ந்து செய்யும் அரசியல் பழிவாங்கல் என்பதை அவர்கள் புரிந்துவைத்துள்ளனர்.

இந்த அமைச்சு பதவியை வேறு யாருக்கும் வழங்குவதென்றால் விட்டுத்தர தயாராக இருக்கிறேன் என்பதை ஏற்கனவே கட்சிக்கு கூறியிருக்கிறேன். ஆனால் ஊழல் செய்தவர்களுடன் என்னையும் சேர்த்து விடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

**தீபம்: இப்பொழுது நீங்கள் எந்தக் கட்சியில் இருக்கிறீர்கள்?**

**டெனிஸ்வரன்:** நான் இப்பொழுதும் கூறுகிறேன், ரெலோ என்னை முறைப்படி கட்சி உறுப்பினராக இணைக்கவில்லை. கட்சி இப்பொழுது மாறுபட்ட கருத்துக்களை சொல்கிறது. 2013இன் பின்னர்தான் எனக்கும் ரெலோவிற்கும் தொடர்பு ஏற்பட்டது. ரெலோவிற்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் போட்டியிட்டது மாத்திரமே எனக்கும்ரெலோவிற்குமிடையிலான தொடர்பு. ரெலோவின் ஆயுதமேந்திய போராளியாகவோ, உறுப்புரிமை பெற்றவராகவோ இல்லை. ஆனால் தேர்தலின் பின்னர் கட்சியில்

தொடர்ச்சி 9-ம் பக்கம்...



ஜூன் 17ம் திகதி அமைச்சர்களிடம் தன்னிலை விளக்கம் கோரப்படும் என கூறிய முதலமைச்சர், அதையெல்லாம் கேளாமல் முன்னரே தான் எழுதி வந்ததை வாசித்தார். இதன்மூலம் புரிகிறது இது திட்டமிட்ட நடவடிக்கை என்பது.

மாகாணசபை உருவாகியபோது அமைச்சர் பதவி தனது அண்ணனிற்கு தேவை, தம்பிக்கு தேவை என சிலர் கேட்டார்கள். மக்களை பேருந்துகளில் அனுப்பியும் கேட்டுப்பார்த்தனர். ஆனால் முதலமைச்சர் சரியான நபர்களை தேர்வு செய்தார். இதை பாராட்ட வேண்டும்.

உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் விசாரணைக்குழு அமைக்கப்படலாம். ஆனால் இறுதியில் விசாரணைக்குழுவின் சிபாரிசிற்கு முரணாக ஒரு மாதம் கட்டாய விடுமுறை எடுக்கும்படி எனக்கு சொல்லாமல் இருந்திருந்தால், முதலமைச்சர் நம்பித்தந்த அமைச்சு பதவியை திரும்ப கொடுத்திருப்பேன்.


அமைச்சு பொறுப்பை ஏற்க வேண்டுமென்ற நிலை வந்தபோது, ஆயர் இராயப்பு யோசெப்பை சந்தித்து, இது மிக கடினமான பணி என குறிப்பிட்டேன். அதற்கு ஆயர், இது இறைவனால் கொடுக்கப்படும் வேலைத்திட்டம். இதிலிருந்து விலகிச்செல்ல வேண்டாம். கஸ்ரம் துன்பமென்றாலும் மக்களிற்கு சேவை செய்யுங்கள் என கூறினார். அந்த நம்பிக்கையில்தான் பதவியேற்றேன்.

எனது நிலைப்பாடு விடாப்பிடியல்ல. நீதியை நிலைநாட்டுவதற்கான போராட்டம். இதில் வெற்றிபெற்றதும் எல்லாவற்றையும் தூக்கி எறிந்துவிட்டு வர தயாராக இருக்கிறேன்.

---

சலசலப்பு ஏற்பட்ட சந்தர்ப்பமெல்லாம் விக்னேஸ்வரனின் பெயராலேயே நடந்திருக்கிறது. அவரது முடிவுகளும் மக்களிடம் நம்பிக்கையிழப்பை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. அவர் தன்னையொரு மாற்றுசக்தியாக அடையாளப்படுத்தினார். அவரை வைத்து மாற்று அணியொன்றை பலர் அடையாளப்படுத்துவதையும் அனுமதித்தார். எப்பொழுதும் அரசியல் புதியபுதிய தலைவர்களின் வருகையால்தான் புத்துணர்வுடன் தொடரப்பட்டு கொண்டு செல்வது. அப்படியான ஒருவராகவே விக்னேஸ்வரன் தன்னை அடையாளப்படுத்தினார்.

ஆனால் மாகாணசபை சர்ச்சையின் பின்னர் அவர் சட்டென தனது ஓட்டுக்குள் நுழைய எத்தனித்தார். மாவை சேனாதிராசா, சுமந்திரன் போன்ற சிலருக்கான மாற்றாகவே அவர் தன்னை நினைக்கிறார் என்பதை இப்பொழுதுதான் உணர்த்துகிறார். அவரது நடவடிக்கைகள் பெரும்பாலும் நம்பிக்கையிழப்பை ஏற்படுத்துபவையாக உள்ளன. அவர்



எடுக்கும் முடிவுகள், அவரது செயல்கள் சர்சையிலும் பிளவிலும் முடிகிறது.

மாற்று அணிகளையும் ஆளுமை செலுத்துபவரை, பிரிந்து சென்றவர்களையும் அரவணைத்து செல்பவரையே பெருந்தலைவர்களாக கொள்ளலாம். அப்படியானவர்களே தமிழர்களிற்கு தேவை. இந்த பகுதியின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட மகாபாரதத்தையே இதற்கும் உதாரணமாக கொள்ளலாம். தர்மனிடம் இருந்த நீதியுணர்ச்சி, தலைமைத்துவ பண்புகளால்தான் மகாபாரத போர் தாமதித்து ஆரம்பித்தது. அதாவது யுத்தத்தை தவிர இனி மாற்றுவழி இல்லையென்ற பின்னர்தான் தர்மன் யுத்தத்திற்கு சென்றான். அதுவரை துரியோதனனின் பிரிப்புக்களை எல்லாம் ஒட்டவைத்து கொண்டிருந்தான்.

விக்னேஸ்வரனிடம் அணிகளையும், நபர்களையும் ஒன்றிணைக்கும் பக்குவம் இல்லை. சம்பந்தர் இதில் சாணக்கியம் மிக்கவர். அதனால்தான் தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஆயுள்காலம் நீடித்து செல்கிறது. ஆனால், விக்னேஸ்வரனின் ஒவ்வொரு புதிய முடிவின் பின்னரும் பிளவுகள் அதிகரித்து சென்றுகொண்டிருக்கின்றன. இப்படி பார்த்தால், விக்னேஸ்வரன் தமிழ் தேசிய அரசியலை ஆபத்தான கட்டமொன்றை நோக்கி இட்டு சென்று கொண்டிருக்கிறார். விக்னேஸ்வரன் வராமல் இருந்திருந்தால் தமிழ் தேசிய அரசியல் என்ன ஆபத்தை சந்தித்திருக்குமோ, அதைவிட பேராபத்தை அவரது இருப்பு ஏற்படுத்தும் அபாயமுள்ளது.




### குமாரி குரேயின் பொலிஸ் வாக்குமூலம்

# “என்னை திருமணம் செய்வதாக வாக்களித்தார்”

### மீண்டும் கிளறப்படும் ஹக்கீம்- குமாரி சர்ச்சை - 2

**ஸ்ரீ**லங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான பசீர் சேகுதாவூத் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20.08.2017)அவருடைய பேஸ்புக் பக்கத்தில் ஆவணமொன்றினைப் பதிவேற்றியிருந்தார். சமகால முஸ்லிம் அரசியலில் பெரும் புயலை கிளப்பியுள்ளது இந்த ஆவணம்.

கொள்ளுபிட்டி பொலிஸ் நிலையத்தில் குமாரி குரே எனும் பெண்ணொருவர் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக செய்த முறைப்பாடு ஒன்றின் பிரதியினையே பசீர் சேகுதாவூத் பதிவேற்றியிருந்தார். குமாரியின் மரணத்துடன் ஹக்கீமை தொடர்புபடுத்தி அவரது எதிர்ப்பாளர்கள் நீண்டகாலமாக குற்றம்சுமத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அந்த ஆவணங்களை இங்கு வெளியிடுகிறோம். இதற்கு மாறான கருத்துக்களை முஸ்லிம் காங்கிரஸோ, ஹக்கீமோ தருமிடத்து அதனையும் பிரசுரிப்போம்.

**அம்பலம்**

எனக்கு அநியாயம் நடந்துள்ளதாக அவர்கள் கூறினார்கள். என்னை திருமணம் முடிப்பதாக ஹக்கீம் கூறியிருந்தால், அதனை நிறைவேற்ற வேண்டும் என்றார்கள். எனவே, இது தொடர்பில் ஹக்கீமுடன் கதைத்து ஒரு நல்ல முடிவினை எடுக்க வேண்டுமென்றார்கள். அதேவேளை, இது கட்சிக்கு பெரும் அவமானம் என்றும் கூறினார்கள். மேலும், இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். பிறகு இதைப்பற்றி ஹக்கீமிடம் விசாரித்திருந்தார்கள். இதனையடுத்து, இது குறித்து ஹக்கீம் என்னிடம் விசாரித்ததோடு, என்னை அச்சுறுத்தினார். எனவே, ஒருவரும் அறியாத வகையில் இன்டகொன்டி


குமாரி குரே

னன்டல் ஹோட்டலில் நான் ஒளிந்திருந்தேன்.

அதன் பிறகு எனக்கு நடந்த அநியாயம் தொடர்பாக, மேலே கூறிய இஷார் பதுர்தீன், நஜ்மி மஜீத், அமீர் அலி ஆகியோர் என்னிடம், இது விடயமாக வாக்கு மூலம் ஒன்றினை வழங்குவதற்கு விருப்பமா என்று கேட்டார்கள். அதற்கு நான் உடன்பட்டேன். 2004 ஏப்ரல் 14 ஆம் திகதி என்னுடைய முழுமையான வாக்கு மூலத்தை அவர்கள் வீடியோ செய்தார்கள். அந்த வீடியோவை 2004 மே மாதம் 30 ஆம் திகதி தேசிய ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என். தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பினார்கள்.

**இவை அனைத்தும் உண்மையானவை. தம்பிக்கு உதவிய அண்ணன்**

நான் ஹோட்டலில் தங்கிய பிறகு என்னைத் தேடிப்பார்க்க முயன்றார் என்பதை அறிந்து கொண்டேன். எனது பணியாளர்களான நெலும் மற்றும் சந்தன ஊடாக என்னைத் தேடியதாக அறிந்தேன். ஹக்கீமுடைய சகோதரர் ஹஸீர் மற்றும் பஷீர் சேகுதாவுத் ஆகியோர் ஒப்ரோயி கிரஸ்கட் வீட்டுக்கு அழைத்துப் போனார்கள். அங்கு ஹக்கீம் என்னைச் சந்தித்தார். அந்த வீட்டு இலக்கம் ஞாபகமில்லை. அங்கு நானும் ஹக்கீமும் தனிமையில் கதைத்தோம். பிறகு நாம் பஷீரின் வீட்டில் சந்திக்கத் தீர்மானித்தோம்.

அடுத்த நாள் நான் பஷீரின் வீட்டுக்குப் போனேன். அச்சந்தர்ப்பத்தில் அதுவரை நடந்த எல்லா விடயங்களையும் ஹக்கீமிடம் கூறினேன். அப்போது ஹக்கீம் என்னிடம் நிஷார் பதுர்தீனிடம் கதைக்கும் போது, அதனை வீடியோ செய்து தருமாறு கேட்டுக் கொண்டார். முன்பு போல் என்னோடு பழகுவதாகவும், என்னை திருமணம் செய்து கொள்வதாகவும் உறுதியளித்தார். அதனால், அவர் கேட்டதை நான் ஒப்புக் கொண்டேன்.

நான் இருந்த இன்டகொன்டினன்டல் ஹோட்டல் அறைக்கு முன் அறையில் பஷீர் மற்றும் ராஜன் தங்கியிருந்தனர். வீடியோ கமரா எனது அறையின் குளிரூட்டி (எயார் கண்டிசன்) இயந்திரத்தினுள் வைக்கப்பட்டது. எனது கட்டிலின் பின்பக்கம் ரெகோடர் வைக்கப் பட்டிருந்தது. அதன்படி எல்லா சம்பவங்களும் வீடியோ செய்யப்பட்டன.

அதே இரவு, பஷீரின் அறிவித்தலுக்கு இணங்க, லக்கி ப்ளாஸா வீடு ஒன்றில் ஹக்கீமை நான் சந்தித்தேன். அந்த வீட்டில் என்னை தங்குமாறு அவர் கூறினார். அதனையடுத்து, மீண்டும் நாங்கள் இருவரும் முன்னர் போல் சேர்ந்து உறவு கொண்டாடினோம்.

ஆனாலும், அவர் வீட்டிலிருந்து வெளியேறும்போது, நான் வெளியே செல்ல முடியாதவாறு உள்ளே அடைத்து வைத்து, வெளியே பூட்டுப் போட்டு விட்டு, சாவியை எடுத்துச் சென்றார்.

அந்த வீட்டில் என்னால் மேலும் இருக்க முடியாது என்று சொன்னேன். அதனால், மூன்று நாட்கள் பஷீரின் வீட்டில் என்னை இருக்கச் செய்தார். பின்னர் ரேணுகா ஹோட்டலில் என்னை தங்கச் செய்தார். அதன் பின்னர், லசந்த விக்ரமதுங்கவுடன் ஹக்கீம் என்னைச் சந்திக்க வந்தார்.

**மோசடி**

லசந்தவும் ஹக்கீமும் ஜனாதிபதிக்கு (அப்போது சந்திரிக்கா குமாரதுங்க ஆட்சியில் இருந்தார்) ஒரு பாடம் கற்பிக்க வேண்டுமென்று திட்டமிட்டார்கள். அதன்படி, லசந்த சொல்லித் தந்தபடி, எம்.ரி.வி. நிறுவனத்தின் கமரா முன்னிலையில் ஒரு நேர்காணலை நான் வழங்கினேன். அந்த இடத்தில் லசந்த விக்ரமதுங்க, ரஊப் ஹக்கீம், பசீர் சேகுதாவுத் மற்றும் எம்.ரி.வி. நிறுவன அதிகாரிகள் இருந்தனர். ஹக்கீமை நம்பியதாலும் அவர் என்னைத் திருமணம் செய்வார் என்கிற நம்பிக்கையினாலுமே நான் இவற்றினையெல்லாம் செய்தேன்.

என்னுடைய நேர்காணல் 2004 மே மாதம் 30ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையில் வெளியானது. 2004 ஏப்ரல் 14ஆம் திகதி நான் வழங்கிய உண்மையான வீடியோ வாக்கு மூலம், 2004 மே 30 ஆம் திகதியன்று ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என். தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பானது.

அன்றிரவு நான் தங்கியிருந்த ஹோட்டலில் இருந்து, மேலே எனது விலாசமாக குறிப்பிட்டுள்ள இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

அடுத்த நாள் 2004 மே 31 ஆம் திகதி, எம்.ரி.வி. அலைவரிசையின் குட் மோனிங் எனும் நிகழ்ச்சியில் தொலைபேசி மூலம் இணைத்து பேசினார்கள். அதன்போது நான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று ஹக்கீம் மற்றும் லசந்த ஆகியோர் சொல்லித் தந்திருந்தார்கள். அதன்படி ஜனாதிபதியினை தொடர்புபடுத்தி அந்த நிகழ்ச்சியில் நான் பேசினேன். அவ்வாறு நான் கூறிய விடயங்கள் அனைத்தும் நடந்த சம்பவங்களுக்கு முற்றிலும் முரணானவையாகும். ஹக்கீமும் லசந்த விக்ரமதுங்கவும் சொல்லித் தந்தவாறு கதைகளை உருவாக்கி கூறினேன்.

**சதி**

பின்னர் ரூபவாஹினியிலும், ஐ.ரி.என். அலைவரிசையிலும் என்னைப் பற்றி ஒளிபரப்பானவை அனைத்தும் பொய் என்று கூறுமாறும், பொது முன்னணியினரின் செல்வாக்கு காரணமாகவே இவ்வாறு நடந்ததாகவும், நிசாத் பதுர்தீனும் ஜனாதிபதியும் என்னை பயமுறுத்தினார்கள் என்றும் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கும், பொலிஸாருக்கும் கூறுமாறு, ரஊப் ஹக்கீம் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

எனினும் நான் அதை நிராகரித்தேன். 2004 ஒகஸ்ட் 18 ஆம் திகதி நான் சிங்கப்பூர் சென்றேன். என்னுடன் பஷீர், ராஜன், ராஜனின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் வந்தனர். இரண்டு நாட்களின் பின்னர் சிங்கப்பூருக்கு ஹக்கீம் வந்தார். அங்கு நிவ் பாக் ஹோட்டலில் நாங்கள் தங்கியிருந்தோம். அங்கு எல்லோர் முன்னிலையிலும் வைத்து, 2004 செப்டம்பர் 23ஆம் திகதிக்கு முன்னர் என்னை திருமணம் செய்வதாக உறுதியளித்தார்.

2004 ஒகஸ்ட் 25ஆம் திகதி ஹக்கீம் இலங்கை திரும்பினார். மறுநாள் 2004 ஒகஸ்ட் 26ஆம் திகதி நான் இலங்கை வந்தேன். இந்த நிலையில், 2004 செப்டம்பர் 23ஆம் திகதி வரை ஹக்கீம் என்னைத் திருமணம் செய்யவில்லை. அதனால் நான் மிகவும் வெறுப்படைந்தேன். இதன்போது, ஹக்கீம் மீண்டும் என்னை ஏமாற்றியதைப் புரிந்து கொண்டேன்.

இவ்வாறானதொரு நிலையில், ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என். அலைவரிசைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் பொருட்டு, அதற்குரிய ஆவணங்களுடன் என்னை ஹக்கீம் சந்தித்தார். அந்த ஆவணங்களில் உண்மைகளைப் பொய்யாக்கியும், பொய்களை உண்மையாக்கியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால், அதற்றினை நான் நிராகரித்தேன். மேலும், அரசியல் லாபம் பெறுவதற்காக என்னை அவர் ஏமாற்றியிருதமையினை நான் விளங்கிக் கொண்டேன்.

மேலும், கடந்த இரண்டு மாதமாக அவர் எனக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. அதனால், அவருடன் உடலுறவில் ஈடுபடுவதை நான் விரும்பவில்லை.

**போதை ஆட்டம்**

2005 ஒகஸ்ட் 08 ஆம் திகதி, முழுமையாக மரு அருந்திய நிலையில் வந்த ஹக்கீம், தன்னுடன் உடலுறவில் ஈடுபட வேண்டும் என்று கூறினார். நான் அதற்கு இடமளிக்கவில்லை. அதனால் அவர் என்னை அடித்தார். இப்படி தொடர்ந்தும் அவர் என்னை அடித்ததமை, அண்டை வீட்டார்களுக்குக் கேட்டிருக்கிறது. அவர்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள்.

இப்போது என்னை கொலை செய்து விடுவதாக, அடிக்கடி அச்சுறுத்துகிறார். அதனால், எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனவே இந்த முறைப்பாடு தொடர்பாக, விசாரணை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

7-ம் பக்க தொடர்ச்சி...

விசுவாசமாக இருந்தேன். என் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தபோது, கட்சியின் அடிப்படை உறுப்புரிமை இல்லாத என் மீது எப்படி நடவடிக்கை எடுப்பீர்கள் என கேட்டிருந்தேன்.

இதேவேளை நான் நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்ட இரண்டு நாளின் பின்னர்தான் கட்சி தனது நிலைப்பாட்டை அறிவித்தது. எனது பதவியை விந்தன் கனகரட்ணத்திற்கு வழங்குவதென கட்சிக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இது தொடர்பாக கட்சியின் செயலாளர் முதலமைச்சரிற்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால் குணசீலன், கட்சியின் முடிவை மீறி அமைச்சராக பதவியேற்றிருக்கிறார். கட்சி ஆளுக்கொரு நீதி வழங்கப் போகிறதா, ஆளுக்கொரு கட்சி யாப்பு விதிகளை உருவாக்கப் போகிறார்களா? இதை பகிரங்கமாகவே கட்சியிடம் கேட்கிறேன்.

நான் கட்சி உறுப்புரிமை படிவத்தில் கையெழுத்திட்டிருந்தால், அதை காண்பிக்குமாறு செயலாளரை கேட்கிறேன்.

***தீபம்: ரெலோவுடன் மீண்டும் இணைந்து செயற்பட வாய்ப்புள்ளதென நினைக்கிறீர்களா?***

**டெனிஸ்வரன்:** கட்சி பற்றி மன்னார் மக்களும், புத்திஜீவிகளும் முரணான கருத்தை வெளியிட்டு வருகிறார்கள். விரும்பியவர்களிற்கு பொறுப்பை வழங்கும் நோக்கத்துடன் கட்சி செயற்பட்டுள்ளதாக மன்னார் மக்கள் உணர்கிறார்கள்.


கட்சியில் ஜனநாயகம் இருந்தால், மக்கள் ஏற்றுக்கொள்ளும் பாதையில் கட்சி செயற்பட்டால் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் பிரச்சனையில்லை. 2014 இல் இருந்தே கட்சியுடன் பிரச்சனை இருந்தாலும், கூட்டமைப்பிற்குள் சிக்கல் வரக்கூடாதென்பதற்காகவே பொறுத்திருந்தேன்.

***தீபம்: முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கட்சியின் முடிவை கேளாமல் நீங்கள் கையெழுத்திட்டதுதான் இந்த பிரச்சனைகளின் மூலகாரணம். அன்றைய இரவில் ஏன் அப்படி முடிவெடுத்தீர்கள்?***

**டெனிஸ்வரன்:** பிரச்சனைக்கு மூல காரணம் முதலமைச்சர் என் மீது சேறு பூச எடுத்த நடவடிக்கைதான். என்னுடைய சுயகௌரவம், சட்டத்தரணியாக மக்கள் என்மீது கொண்டிருந்த மதிப்பு, அமைச்சராக மக்களோடு கொண்டிருந்த தொடர்பு பாதிக்கப்படும் விதமாக, என் மீது பிழையான விம்பம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் முதலமைச்சர் எடுத்த நடவடிக்கைள்தான் இதற்கு காரணம். நீதியை நலை நிறுத்தவே போராடுகிறேன். சுயகௌரவத்தை விற்று, சுகபோகங்களிற்காக யாருடைய காலிலும் விழுபவன் இல்லை நான். ஒருநாள் வாழ்ந்தாலும் வீரனாக வாழ வேண்டும். இதுதான் அன்றைய இரவின் சம்பவம்.

***தீபம் : அந்த முடிவு பிழையானதென இப்பொழுது நினைக்கிறீர்களா?***

**டெனிஸ்வரன்:** அந்த முடிவு பிழையானதென நினைக்கவேயில்லை. முதலமைச்சரை நீக்க தமிழரசுக்கட்சி முயல்கிறதென முதலமைச்சருடன் இருந்தவர்கள் பிழையான கருத்தை வெளியிட்டனர். முதலமைச்சரால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாதென காட்டவே நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்தோம். முதலமைச்சருக்கு சேறு பூச முயலவில்லை. அவர் செய்த பிழையை ஜனநாயகரீதியில் தட்டிக்கேட்கவே நம்பிக்கையில்லா பிரேரணை முடிவுக்கு சென்றோம்.



சம்பந்தன் ஐயாவுடனான சந்திப்பில், தான் தெரிவித்த ஒரு மாத விடுமுறையென்பது பிழையென்பதை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டிருந்தார். நாங்கள் ஊழல் செய்திருந்தால் அதை கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்குரியது. ஆனால் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்படாத அமைச்சர் மீது விசாரணைக்குழுவை அமைக்க முடியுமா?

அனைத்து அமைச்சர்களுக்கும் எதிரான எழுத்து மூலமான ஊழல் குற்றச்சாட்டு உள்ளதாக முதலமைச்சர் சொன்னார். இதுவரை முதலமைச்சர் ஏன் அவற்றை பாரப்படுத்தவில்லை? அப்படி செய்யாததே பெரிய குற்றம்.

***தீபம்: கடந்த மாதம் 12ம் திகதி வவுனியாவில் நடந்த ரெலோ தலைமை குழு கூட்டத்தில் கட்சியின் முடிவை மீறி கையெழுத்திட்டது பிழையென்பதை ஏற்றுக்கொண்டிருந்தீர்களே?***

**டெனிஸ்வரன்:** நான் அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை. கட்சிக்காரர்கள்தான் அப்படி சொல்கிறார்கள். நான் அந்த கூட்டத்திற்கு சென்றதே, என் தரப்பு விளக்கத்தை அவர்களிற்கு அளிப்பதற்குதான். கட்சியின் தீர்மானத்தை மீறி கையெழுத்து இட்டதாக சொன்னார்கள். கட்சியின் தீர்மானத்திற்கு இரண்டு நாட்களின் முன்னரே நான் கையெழுத்திட்டு விட்டேன், எனது சுயகௌரவத்தை பாதுகாக்கவே கையெழுத்திட்டேன் என்பதை தெளிவாக சொன்னேன்.

கட்சியுடன் கலந்தாலோசிக்காமல் கையெழுத்திட்டதாக செயலாளர் கேட்டார். கையெழுத்து இடுவதற்கு முன்பே முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மயூரன் ஊடாக என்னை பதவியில் இருந்து நீக்கி வேறொருவரை நியமிக்கும்படி முதலமைச்சரிடம் கட்சி கடிதம் கொடுத்தது.

நான் கையெழுத்து இட்ட அன்று பகல், கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதனை தொலைபேசியில் கேட்டேன். அவர் அதை உறுதிசெய்தார். அதன்பின் இரவுதான் கையெழுத்திட்டேன்.

ஆகவே, நான் கையெழுத்து இடுவதற்கு முன்பே என்னை நீக்கும் முடிவை கட்சி எடுத்துவிட்டது. ஊழல் இல்லாத அமைச்சரை கட்சி நீக்குகிறார்கள் என்றால் அவர்களிடம் நீதி இல்லை என்பது எனக்கு அப்பொழுதே தெரிந்தது. அதனால்தான் எனது சுயகௌரவத்தை பாதுகாக்க கையொப்பம் இட்டேன்.

எனது விளக்கத்தை கேட்டபின், நான் செய்தது பிழையில்லை என சொல்லி, தயவுசெய்து அமைச்சு பொறுப்பை விட்டுத்தாருங்கள் என கேட்டனர். நியதிச்சட்டம் கொண்டு வரப்பட்டு போக்குவரத்து அதிகாரசபையை உருவாக்கி ஊழியர்களை வேலைக்கமர்த்தியுள்ளது எனது அமைச்சு மாத்திரமே. போராளிகளிற்கு வாழ்வாதார திட்டம் மேற்கொள்ள, வடக்கு போக்குவரத்தை சீர்செய்ய நூறு கூட்டம் நடத்தி இப்பொழுதுதான் இறுதி தீர்மானத்திற்கு வந்துள்ளேன், ஆகவே வரவு செலவு திட்டம் ஊடாக அவற்றை நடைமுறைப்படுத்த டிசம்பர் வரை அவகாசம் கேட்டிருந்தேன். அதன்பின் அமைச்சு பொறுப்பை இன்னொருவருக்கு விட்டுக்கொடுத்து, அவருடன் சேர்ந்து பணியாற்ற தயாராக இருப்பதாக கூறினேன்.

***தீபம் : ஒருமுறை பத்திரிகையாளர் சந்திப்பில் சொன்னீர்கள் நான் ரெலோ உறுப்பினர்தான் என. இறுதியாக சொல்லியிருக்கிறீர்கள் நான் ரெலோ உறுப்பினராக இணையவில்லையென. பதவிவிலகல் சர்ச்சை வந்தபோது சொன்னீர்கள் நானாக பதவிவிலக மாட்டேன் முதலமைச்சருக்கு அதிகாரமுள்ளது. அவராக நீக்கட்டும் என. இப்பொழுது முதலமைச்சருக்கு அதிகாரமில்லையென்கிறீர்கள். ஏனிந்த குழப்பம்?***

**டெனிஸ்வரன்:** நியமித்த அமைச்சரை நீக்குவதற்கு முதலமைச்சரிற்கு அதிகாரமில்லை. முதலமைச்சர் என்னை நீக்கியதாக 20ம் திகதி கடிதம் அனுப்பியிருக்கிறார். இப்படி கடிதம் அனுப்ப முதலமைச்சரிற்கு அதிகாரமில்லை. இதைதான் அன்றும் கூறினேன். இன்றும் கூறுகிறேன்.

முதலமைச்சர் ஆளுனருக்கு சிபாரிசு செய்யலாம். ஆளுனர்தான் இதை செய்யலாம். இதை நீதிமன்றம் ஊடாக நிரூபிப்பேன். கட்சி அங்கத்துவம் தொடர்பான கேள்வி பிழையானது. நான் கட்சியில் சேர்ந்ததற்கு, கையெழுத்து இட்டதற்கு சான்று இருந்தால் காட்டுமாறு கட்சியிடம் கேட்கிறேன்.

***தீபம்: சட்ட நடவடிக்கை உங்களிற்கு சாதகமாக அமையுமென நம்புகிறீர்களா?***

**டெனிஸ்வரன்:** இதை நீதிமன்றம் பார்த்து கொள்ளும். என்னுடைய மனச்சாட்சி சொல்வதை நான் செய்வேன். இந்த அமைச்சு பொறுப்பில் இருந்து வாழ வேண்டுமென்ற நிலை எனக்கில்லை. நீதியை நிலைநாட்டவே விரும்புகிறேன். நீதிமன்றம் சட்டத்தை நிலைநாட்டும்.

**தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.**
**தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.**
ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 20 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.
**London metropolitan college**
வழங்கும் 4500 பெறுமதியான கற்கைநெறி கட்டண கழிவினை பெறுவதற்கு அரியசந்தர்ப்பம்.

**நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.**
முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.
முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.
முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்
குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

**Issue Number 108**
Full Name :....................
Address :....................
Nic :....................
Phone Number :....................

# “பொலிஸில் முறையிட்டால் அடுத்தநாள் அதிக கொள்ளையர்கள் வருகிறார்கள்”

## மட்டக்களப்பில் அதிரவைக்கும் மணல்கொள்ளை

நடேசன் குகதர்சன்



மட்டக்களப்பின் தலையாய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது மணல் அகழ்வு. வரம்புமீறிச் செல்லும் மண் அகழ்வை தடுக்க, கடுமையான விதிமுறைகளை அரசு அமுல்படுத்தியதும் சட்டவிரோத மணல்வியாபாரம் பெரும் வர்த்தக உலகமாக விஸ்பரூபம் எடுத்துள்ளது. அரசியல், நிர்வாக அதிகாரங்களில் உள்ளவர்களின் அனுசரணையுடன் நடக்கும் இந்த சட்டவிரோத செயற்பாடே இன்று மட்டக்களப்பின் புற்றுநோயை போல அரிக்க தொடங்கியுள்ளது. மண்ணுக்காக போராடிய ஒரு இனம் இன்று மணல் மண்ணிற்காக போராட வேண்டிய அவலத்திற்கு உள்ளாகியுள்ளது

இப்படியான ஒரு செயற்பாடே கிரான் பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட வாகனேரி, பொண்டுகள்சேனை மற்றும் செங்கலடி பிரதேசத்திற்குட்பட்ட பாலாமடு, புத்தம்புரி, சின்னப்பொத்தனை உள்ளிட்ட பகுதிகளில் நடக்கும் மண் அகழ்வும். இங்கு சட்டவிரோதமாக நடக்கும் மண் அகழ்வால், விவசாயத்தை நம்பிய இந்த பகுதிகளில் கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட தொடங்கியுள்ளன.



சி.சண்முகநாதன்

வாகனேரி பகுதியில் தவணை கண்டம், பள்ளக்கட்டு, தரசேனை கண்டம், மக்குளான கண்டம், பள்ளிமடு கண்டம், அடம்படி வட்டவான், பருத்திச் சேனை கண்டம், பெண்டுகள்சேனை உள்ளிட்ட பகுதிகளில் கட்டுப்பாடற்ற முறையில் தினமும் சட்டவிரோத மண் அகழப்படுகிறது. நாளாந்தம் பெருமளவு மணல் இங்கிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டு கொண்டிருக்கிறது. இது அதிகாரிகளுக்கோ, காவல்த் துறைக்கோ தெரியாததல்ல. மாவட்ட, பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டங்களில் ஒவ்வொரு முறையும் இதுபற்றி மக்கள் முறையிடுகிறார்கள். ஆனால் அதிகாரிகள்தான் கண்மூடி இருக்கிறார்கள்.

இந்த நிர்வாக மெத்தனத்தால் விரக்தியடைந்த விவசாயிகள், அந்த பகுதி மக்கள் பலமுறை போராட்டம் நடத்தியுள்ளனர். மகஜருடன் அதிகாரிகள், அரசியல்வாதிகளின் அலுவலக கதவுகளை பலமுறை தட்டியும் விட்டனர். ஆனால் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

மண் அகழ்வு என்பதே இயற்கைக்கு எதிராக மனிதன் தொடுக்கும் போர்தான். இயற்கை சமனிலை குலைந்து முதலில் சூழலுக்கும், சிற்றுயிர்களிற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. நீண்டகால நோக்கில் மனிதர்களிற்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதுவே, சட்டவிரோத மண் அகழ்வு என்றால் கேட்கவும் தேவையில்லை. எந்த பொறுப்புணர்ச்சியுமில்லாமல் அகப்பட்ட இடத்தில் அள்ளிக்கொண்டு சென்றுவிடுகிறார்கள்.

வாகனேரியில் சட்டவிரோத மண் அகழ்வு நடப்பது விவசாய நிலங்களிற்கு தண்ணீர் செல்லும்வாய்க்காலில். வாகனேரி குளத்தில் இருந்து தண்ணீரை கொண்டு வரும் இந்த வாய்க்காலை நம்பியே 2,500 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. தற்போதைய வரட்சியால் குளத்தில் தண்ணீர் வற்றி, பெருமளவு விவசாய நிலங்கள் கருகிவிட்டன. இடையடையே திறந்துவிடப்படும் சிறியளவான தண்ணீரில் உயிரைப்பிடித்துக் கொண்டு தள்ளாடுகின்றது எஞ்சிய விவசாய நிலங்கள். மருந்தைப்போல தண்ணீர் ஓடிவரும் வாய்க்காலில் மண் அகழப்படுவதால் ஆங்காங்கே பெரிய பள்ளங்கள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் சுமார் 15 அடி ஆழம்வரை மண் அகழப்படுகிறது. இதனால் வாய்க்கால் வரம்பு உடைக்கப்படுவதுடன், வாய்க்காலில் ஓடிவரும் தண்ணீர் இந்தப்பள்ளங்களில் தேங்கி விடுகிறது. இந்த பள்ளங்களை நிரவி, விவசாய நிலங்களிற்கு செல்லும் அளவில் குளத்திலும் தண்ணீரில் இல்லை.

இரவு வேளைகளில்தான் இந்த வாய்க்காலில் சட்டவிரோத மண் அகழ்வு நடந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் இரவும் சராசரியாக 25 லோட் மண் கொண்டுசெல்லப்பட்டு கொண்டிருக்கிறது.

மணல்கொள்ளையர்களின் ஒரே நோக்கம் பணம்தான். அவர்களிற்கு சூழல் பொறுப்புணர்வு கிடையாது. மண் அகழும் போது பெரிய மரங்களை அடிக்கடி வேரோடு விழுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் காடுகள் அழிக்கப்படுவதுடன், மரங்களை வெட்டி வாய்க்காலிற்குள்ளேயே போட்டுவிட்டு செல்கிறார்கள். இதுவும் வாய்க்காலின் நீரோட்டத்தை தடுக்கிறது.

1954ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பல்லப்பட்டு பள்ளிமடு கண்டத்தின் வான்கதவு மற்றும் பாலம் கீழ்ப்பக்கமாக சரிந்துவிழும் நிலைக்கு சென்றுவிட்டது. காரணம் மண் அகழ்வு.

நீரின் வேகம் அதிகரிக்கும் போதும், மணல் அடித்துச் செல்லப்படும் போதும் வான்கதவு சரிந்து விழுந்து விவசாய நிலங்களை அழித்துவிடும் ஆபத்தும் உள்ளது. சட்டவிரோத மண் அகழ்வால் வாய்க்காலின் ஆழம் அதிகரித்து, மழைக் காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாகவும், விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதாகவும் பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

மண்கடத்தலிற்கு கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் விவசாய நிலங்களும், வீதிகளும் பாதிக்கப்படுகின்றன. மண் ஏற்றியதும் வாகனங்கள் அதியுச்ச வேகத்தில்தான் பயணிக்கின்றன. இதனால் அதிகமாக கால்நடைகள் விபத்திற்குள்ளாகி வருகின்றன.

இதுதவிர, சட்டவிரோத மரக்கடத்தல் காரர்களும் இந்த பகுதியை குறிவைக்க ஆரம்பித்துவிட்டனர். வாய்க்கால் வரம்பில் பாதுகாப்பாற்றிகாக நிற்கும் மதுர மரங்களை மணல்கடத்தல்காரர்களே வெட்டிச்செல்கிறார்கள். இந்த சட்ட விரோத செயற்பாடுகள் பற்றி வாழைச் சேனை பொலிசாரிடம் பலமுறை முறையிட்டும் பலனில்லை என்கிறார் வாகனேரி தவணை கண்டம் விவசாய அமைப்பின் தலைவர்

சி.சண்முகநாதன் மணல் ஏற்றும் வாகனங்களின் இலக்கங்களை பொலிசாரிடம் வழங்கியும் நடவடிக்கை எடுக்கப்





# ரோஹிங்யாவின் சின்ன மகள்!




சிராஜ் மஷ்ஹூர்

நாப் நதியில் மிதந்து வரும்
என் சின்ன மகளே,
இறந்த பின்னும்
உன் உதடுகள் ஒட்டவில்லை.
சின்ன வாய் திறந்திருக்கிறது.
இப்போதும் நீ நியாயம் கேட்கிறாய்.
துடிக்கத் துடிக்கப் பேசினாயே
சின்னதாய் சில வார்த்தைகள்,
உன் கடைசிச் சொற்கள்
கூழாங்கற்களைப் போல அதைப்
பொறுக்கிக் கொண்டிருக்கிறேன்.
அபாபீல் பறவைகளிடம் சென்று நான்
அதைக் கொடுப்பேன்.
காற்றைக் கிழித்துக் கொண்டு வரும்
உன் கடைசிக் குரலால்
அதிர்ந்த மனச்சாட்சி
இன்னும் அடங்கவில்லை.
இனியும் அடங்கப் போவதில்லை.

செய்திகளுக்கும் படங்களுக்கும்
கவிதைகளுக்கும் முன்னால்
கையாலாகாத கோழைகளாய்
நாம் தலைகவிழ்ந்திருக்கிறோம்.
கண்மூடியிருக்கும் உன்னை
இனி மண் மூடி விடலாம்.
இந்த ஆற்றங்கரையில்,
எங்கோ வனாந்தரத்தில், புற்தரையில்,
இல்லாவிட்டால் ஒரு மண்திட்டில்
உன் உடல் புதைக்கப்படலாம்.
அதனாலென்ன?
மனிதம் கசியும் மனங்களில்
உன்னைப் புதைக்க முடியாது.
பதைக்கப் பதைக்கப் பேசத் துடிக்கும்
உன் குரல்வளையை
அமுக்கி விடமுடியாது.
ஈரம் கசியும் உன் சொற்களைக்
காய வைக்க முடியாது.

நாப் நதியின் இடத்தில் எனக்கு
நந்திக் கடல் தெரிகிறது.
அய்லான் குர்தியின் அதே குழந்தை
முகம்,
அதே காட்சிகள், அதே கண்ணீர்...
எதை யாரிடம் சொல்லியழுவது?
கோழைகளின் உலகத்தில்
நாம் கொள்ளி பொறுக்குகிறோம்.
பொறுக்கிகளின் உலகத்திலிருந்து
போய்விட்டாயடி என் சின்ன மகளே.
சுவனத்தின் வாசலில்
உன் காலடியோசை கேட்கிறது.
யுக முடிவு வரை
நீதி கேட்டுக் கொண்டே இருக்கும்
என் சின்ன மகளே,
நீ இறந்து விட்டாய் என்றா
நினைக்கிறாய்?





படவில்லை.

தற்போது வயல் அறுவடை செய்யப்பட்டு விட்டது. இந்த விவசாய நிலங்களில் மண் கடத்தல் வாகனங்கள் ஓடிச்சென்று கொண்டிருக்கின்றன. இதனால் இந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை ஏற்படலாமென அவர் அச்சம் தெரிவித்தார். இந்தப்பகுதியில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைத்து கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதே இந்த சிக்கலை தீர்க்க ஒரேவழியென கூறினார்.

வாய்க்காலில் இருந்து வரும் தண்ணீர் வயலை பாதிக்காத வகையில் அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டுக்களையும் மண்கடத்தல் வாகனங்கள் உடைத்துக் கொண்டு செல்கின்றன. இதனால் மழைக்காலத்தில் வெள்ளநீர் வயல்களிற்குள் சென்று அழிவை ஏற்படுத்தும் நிலைமை உருவாகியுள்ளது.

மண் கடத்தலில் ஈடுபடுபவர்கள் அதிக பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்தான் இதில் ஈடுபடுகிறார்கள். பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் தகவல் வழங்குனர்கள் நிறுத்தப் படுகிறார்கள். அதுதவிர, பொலிசார் வரலாமென சந்தேகிக்கும் இடங்களிலும் தகவல் வழங்குனர்கள் நிறுத்தப்பட்டே இந்த சட்டவிரோத செயற்பாடு நடக்கிறது.

பள்ளிமடு கண்ட விவசாய அமைப்பின் உபதலைவர் ஏ.லெப்பைதம்பி இன்னொரு அதிர்ச்சி தகவலை சொன்னார். மணல் கடத்தலை பற்றி வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தால், மறுநாள் மிகஅதிகமான வாகனங்கள் மணல் ஏற்ற வருகின்றன. அதாவது, எங்களது வியாபாரத்திற்கு குறுக்கே வராதீர்கள் என்ற செய்தியை மணல்கடத்தல்காரர்கள் சொல்லாமல் சொல்லுகிறார்கள். பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட தகவலை எப்படி மணல்கடத்தல்காரர்கள் அறிந்தார்கள்? மறுநாள் பொலிசார் வரமாட்டார்கள் என்ற துணிவை எப்படி அறிந்தார்கள்? இதுதான் அந்த பகுதி மக்களின் தலையை சுற்றவைக்கும் கேள்வி.


மணல் கடத்தலில் ஈடுபடும் வாகனங்களின் இலக்கத்தை பொலிசாரிடம் பிரதேசமக்கள் தெரிவிப்பதையடுத்து, தற்போது இலக்கங்களை அழித்துவிட்டு கொண்டு வருகிறார்கள். எப்படியோ ஒருவழியாக இலக்கமொன்றை கண்டறிந்து எடுத்து சென்றால், இந்த இலக்கத்தில் வாகனங்கள் இல்லையென பொலிசார் கையை விரிக்கிறார்கள் என்றார் ஏ.லெப்பைதம்பி.

மண்கடத்தல்காரர்களின் வாகனங்கள் விவசாய நிலங்களில் சென்று வருவதால் ஏற்பட்டுள்ள மேடுபள்ளங்களை சரி செய்தே அடுத்த விளைச்சலை செய்ய முடியும். இதை சரிசெய்வதாயின் குறைந்தது ஐம்பதாயிரம் ரூபா தேவையாக இருக்கும் என்கிறார்கள் விவசாயிகள்.

மட்டக்களப்பில் அகழப்படும் மண் கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட்டு பெரும்தொகைக்கு விற்பனையாகிறது, இதன் பின்னால் விரிந்துள்ள வர்த்தக உலகத்தில் அதிகார, அரசியல், காவல்த் துறை புள்ளிகள் பங்காளிகளாக இருக்கிறார்கள் என அண்மைக்காலமாக சமூக வலைத்தளங்களில் பரவலாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இந்த குற்றச்சாட்டு பொய்யானதெனில், இந்த பகுதியில் நடக்கும் சட்டவிரோத செயற்பாடு தடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதிகாரத்தின் எல்லா மட்டத்தினரும் கண்ணை மூடிக்கொண்டிருப்பதன் சூட்சுமம் என்ன?

பொறுப்பானவர்கள் எல்லோரும் கண்ணைமூடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதால், மண்கடத்தல்காரர்களுடன் பிரதேசமக்கள் வினயமாக பேசியும் பார்த்திருக்கிறார்கள். அதற்கும் பலன் கிட்டவில்லை.

மட்டக்களப்பில் பல அபிவிருத்திகள் நடந்தாலும், கிராமப்புற விவசாயிகளை அவை எட்டிப்பார்க்கவில்லை. அபிவிருத்திகள்தான் நடக்காவிட்டாலும், இருக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தையாவது அழிக்காமல் பார்ப்பது அதிகாரிகளினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் கடமையல்லவா? மக்களினதும், அவர்களின் வாழ்வாதாரத்தினதும் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது காவல்த்



ஏ.லெப்பைதம்பி

துறையின் பொறுப்பல்லவா? அவர்கள் ஏன் அதை செய்யவில்லை?

கிழக்கு மாகாண முதலமைச்சர்... மட்டக்களப்பு அரசஅதிபர்... பிரதியமைச்சர்கள் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், எம்.எஸ்.எஸ்.அமீர் அலி.. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், சா.வியாழேந்திரன் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரே...

உங்கள் யாருக்கும் இந்த சட்ட விரோத செயற்பாட்டை தடுக்கும் பொறுப்பில்லையா?

**2009 யுத்தத்தின் பின் யாழ் மாநகரசபைக்கும், வவுனியா நகரசபைக்கும் தேர்தல் நடந்தது. மீண்டும் வந்து வவுனியா நகரசபை தேர்தலில் போட்டியிடுமாறு புளொட் அமைப்பு லிங்கநாதனிடம் கேட்டது. போட்டியிட்டார். 142 வாக்குகளால் தமிழ்தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றது. லிங்கநாதன் எதிர்கட்சி தலைவரானார்.**



இந்தவாரம்
ஜி.ரி.லிங்கநாதன்
வவுனியா மாவட்டம்

# என்ன செய்தார்கள் நமது பிரதிநிதிகள்?

## வடமாகாணசபை உறுப்பினர்களின் ஸ்கான் ரிப்போர்ட் - 8



தீபம் குழு

**2001** பாராளுமன்ற தேர்தலில் மக்கள் முன்னணி சார்பில் வவுனியாவில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர் சுமதிபால. அவரை பக்ஸ் எம்.பி (Fax m.p) என பகிடியாக சொல்வார்கள். ஏன் அப்படி அழைக்கப்பட்டார்?

அதுபற்றிய ஒருசுவாரஸ்ய கதை அரசியல் வட்டாரங்களில் உள்ளது. அப்பொழுது சுதந்திரக்கட்சி போட்டியிட்டது மக்கள் முன்னணியாக. வவுனியாவில் புளொட் சார்பில் இருவர் போட்டியிட்டனர். வாக்கு எண்ணும் சமயத்தில் சுமதிபால வெற்றிபெற நூற்று சொச்ச வாக்குகள் போதாமல் இருந்தது. அப்போது புத்தளத்தில் இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிப்பு நிலையத்தில் பதிவான வாக்குகளின் முடிவு என ஒரு தகவல் வாக்கெண்ணும் நிலையத்திற்கு பக்ஸ் (Fax) மூலம் வந்தது. வவுனியாவில் சுமதிபால வென்றார்.

அப்பொழுது வவுனியாவில் புளொட் சார்பில் இருவர் போட்டியிட்டனர். அதில் ஒருவர்தான் வாக்கெண்ணும் நிலையத்தில் கட்சி சார்பில் முகவராக செயற்பட்டார். அவரைவிட மற்றைய புளொட் வேட்பாளரான பாரூக் (கணேசலிங்கம்) அதிக வாக்குகளை பெற்றிருந்தார். சுமதிபாலவிறகும் பாரூக்கிற்குமிடையில் மிகக்குறைவான வாக்கு வித்தியாசமே இருந்தது.

வாக்கெண்ணும் நிலையத்தில் கண்காணிப்பு முகவராக செயற்பட்ட புளொட்டின் மற்றைய வேட்பாளர் தனது வெற்றி சாத்தியமில்லையென தெரிந்ததும், வாக்கெண்ணும் நிலையத்தில் கையெழுத்திட்டு விட்டு சென்றுவிட்டார். அவர் முறையாக செயற்பட்டிருந்தால் அந்த தேர்தலில் வவுனியாவில் புளொட்டின் பாரூக் வென்றிருப்பார் என்ற அபிப்பிராயம் கட்சிக்குள் உள்ளது. புத்தளத்திலிருந்து வந்த பக்ஸ் வெற்றிபெற வைத்ததால், சுமதிபால பக்ஸ் எம்.பியென அழைக்கப்பட்டார்.

அப்பொழுது புளொட் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு, வாக்கெண்ணும் நிலையத்தில் முகவராக செயற்பட்டவர் கந்தர் தாமோதரம்பிள்ளை லிங்கநாதன்.

இந்தவாரம் வடமாகாணசபை ஸ்கான் ரிப்போர்ட்டிற்குள்ளாகும் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன்.

கண்டி குண்டகசாலையில் விவசாய டிப்ளோமா கற்ற லிங்கநாதன் 1984 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் புளொட் உறுப்பினராக இணைந்து செயற்பட தொடங்கி, இன்றும் கட்சியின் முக்கியஸ்தராக செயற்படுகிறார். இடையிடையே சிறிதுகாலம் அரசியல் அஞ்ஞானவாசம் சென்றாலும், மீண்டும் மீண்டும் கட்சிக்குள்ளால் பிரதிநிதித்துவத்தை பெறும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

1994 இல்தான் லிங்கநாதனின் தேர்தல் அரசியல் வாழ்க்கை ஆரம்பிக்கிறது. அப்பொழுது நடந்த வவுனியா நகரசபை தேர்தலில் புளொட்டிற்கு ஏழு ஆசனங்கள் கிடைத்தது. பாலசந்திரன் அதிக வாக்குகள் பெற்றிருந்தார். அவரை தொடர்ந்து மோகன், லிங்கநாதன், வசந்தன் என புளொட்டின் உறுப்பினர்கள் பட்டியல் வரும். ஆனால் லிங்கநாதனை நகரசபை தலைவராக புளொட் தேர்வுசெய்தது. அப்பொழுது வவுனியாவை புளொட் முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

இந்தகாலத்தில் வவுனியா நகரசபையின் செயற்பாடுகள் மக்களிடம் பாராட்டை பெற்றது. இதற்கு மிக முக்கிய காரணம் புளொட்டிற்கு சந்திரிகாவுடன் இருந்த நெருக்கமும், நகரசபை செயற்பாட்டை கட்சி முன்னெடுத்ததும், மாணிக்கதாசன் போன்றவர்களது செல்வாக்குமே. உதாரணமாக ஒரு சம்பவத்தை சொல்லலாம். இப்பொழுது வவுனியா பொது விளையாட்டரங்கில் இருந்த அரசமரத்தின் கீழ் புத்தர்சிலை வைப்பதற்கு ஒரு முயற்சி நடந்தது. இதை தடுக்க, சிலை வைப்பதற்கு சிலநாட்களின் முன் நகரசபையில், மைதானத்தில் பார்வையாளர் இருக்கை அமைப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை நிறைவேற்றி, அரசமரத்தை இரவோடிரவாக தறித்து வீழ்த்தியதன் பின்னணியில் இருந்தவர் மாணிக்கதாசன்.

1995இல் வவுனியாவில் பொதுநூலகம் அமைக்கும் திட்டத்தை சந்திரிகாவிடம் சமர்ப்பித்தது த.சித்தார்த்தன். அது முழுமையாக மத்திய அரசின் நிதியில் கட்டப்பட்டது. பூங்காவின் கதையும் இதுதான். ஆனால் அத்தனை புகழையும் அள்ளிச்சென்றது நகரசபை. கட்சியின் ஒத்துழைப்பு, அப்போதைய அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் மாணிக்கதாசனின் இராணுவ பலம் என்பன நகரசபை செயற்பாட்டிற்கு முழுமையான பின்னணியில் இருந்தன. அத்துடன், லிங்கநாதனிற்கும் ஓரளவு நிர்வாக திறமையிருந்ததால் வவுனியா நகரசபை ஓகோவென பேசப்பட்டது.

2001 பாராளுமன்ற தேர்தலில் லிங்கநாதன் போட்டியிட்டார். அதுபற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த தோல்வியுடன் கட்சியை விட்டு முழுமையாக ஒதுங்குவதாக கூறிவிட்டு இந்தியாவிற்கு சென்றுவிட்டார். அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டார். பின்னர் கொழும்பு திரும்பி அங்கு வர்த்தகத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தார்.

2009 யுத்தத்தின் பின் யாழ் மாநகரசபைக்கும், வவுனியா நகரசபைக்கும் தேர்தல் நடந்தது. மீண்டும் வந்து வவுனியா நகரசபை தேர்தலில் போட்டியிடுமாறு புளொட் அமைப்பு லிங்கநாதனிடம் கேட்டது. போட்டியிட்டார். 142 வாக்குகளால் தமிழ்தேசிய கூட்டமைப்பு வெற்றி பெற்றது. லிங்கநாதன் எதிர்கட்சி தலைவரானார்.

நகரசபை விவகாரமொன்றில் 2011 இல் திடீரென எதிர்கட்சி தலைவர் பதவியிலிருந்து விலகினார். இதுபற்றி கட்சியிடம் அவர் சொல்லவேயில்லை. இதனால் கட்சிக்குள் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

பின்னர், தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் புளொட் சங்கமமானது. 2013 இல் தமிழ்தேசிய கூட்டமைப்பு சார்பில்

தொடர்ச்சி 25-ம் பக்கம்...

தொழில்நுட்பம்



## ஹீரோவின் புதிய மோட்டார்சைக்கிள்கள்!

சாதாரண வீதி மற்றும் கரடுமுரடான வீதிகளில் ஓட்டுவதற்கு ஏற்ற அம்சங்கள் கொண்ட இம்பல்ஸ் என்ற பைக் மொடலை ஹீரோ விற்பனை செய்து வந்தது. இந்த நிலையில், விற்பனை சிறப்பாக இல்லாததால், அந்த மோட்டார்சைக்கிள் விற்பனை நிறுத்தப்பட்டது. இப்போது புதிய 200சிசி திறன் கொண்ட முழுமையான ஓப்ரோட் மோட்டார்சைக்கிளை ஹீரோ உருவாக்கி வருகிறது.

தற்போது தென்னாசிய மார்க்கெட்டில் கிடைக்கும் ஓப்ரோட் மோட்டார் சைக்கிள்கள் விலை அதிகமாக இருக்கிறது. இந்த நிலையில், பட்ஜெட் விலையிலான புதிய ஓப்ரோட் மொடலை களமிறக்கி மார்க்கெட்டை பிடிப்பதற்கு ஹீரோ நிறுவனம் திட்டம் போட்டுள்ளது.

இவற்றில் 18 பிஎச்பி முதல் 20 பிஎச்பி வரையிலான சக்தியை வெளிப்படுத்தும் திறன் கொண்ட 200சிசி எஞ்சின் பயன்படுத்தப்பட இருக்கிறது

பட்ஜெட் விலை பிரிமியம் மோட்டார் சைக்கில் செக்மென்ட்டில் ஹீரோ நிறுவனம் வெறும் 3.52 சதவீத மார்க்கெட் பங்களிப்பை மட்டுமே வைத்திருக்கிறது. ஆனால், போட்டி நிறுவனமான பஜாஜ் ஆட்டோ 30 சதவீத அளவுக்கு இந்த செக்மெனட்டில் மார்க்கெட் பங்களிப்பை வைத்திருக்கிறது.

எனவே, 200சிசி ரகத்தில் பல புதிய மொடல்களை வெவ்வேறு ரகத்தில் அறிமுகப்படுத்துவதே ஹீரோ நிறுவனத்தின் திட்டம். புதிய 200சிசி ஓப்ரோட் மோட்டார்சைக்கிள் தவிர்த்து, புதிய 200சிசி எக்ஸ்ட்ரீம் ஸ்போர்ட்ஸ் பைக் மொடலையும், புதிய நேக்கட் ஸ்டைல் மொடலையும் விரைவில் அறிமுகம் செய்ய இருக்கிறது ஹீரோ நிறுவனம்.

## கலக்ஸி ஜே 7 ப்ளஸ்!

சாம்சங் நிறுவனத்தின் கலக்ஸி ஜே7 ப்ளஸ் ஸ்மார்ட்போன் தான் ஸ்மார்ட்போன் சந்தையின் ஹொட் ரொபிக்.! தாய்லாந்தின் தாய்மொபைல்சென்டர் இணைய தளத்திலிருந்து வெளியான லீக்ஸ் செய்தியின் வழியாக, கலக்ஸி ஜே7+ ஆனது இரட்டை கமராக்கள் கொண்டுருக்கும் நிறுவனத்தின் இரண்டாவது ஸ்மார்ட்போன் என்று அறியப்பட்டது. சரி வேறென்ன அம்சங்களை இக்கருவி கொண்டிருக்கும்.?

சாம்சங் கலக்ஸி ஜே7 ஸ்மார்ட்போனின் மேம்பாடு பதிப்பான கலக்ஸி ஜே7 ப்ளஸ் ஸ்மார்ட்போனில் டூயல் கேம் அம்சம் இடம்பெறுமென்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

1920 ஜ் 1080 என்ற தீர்மானம் கொண்ட ஒரு 5.5 அங்குல சூப்பர் அமோ எல்இடி டிஸ்ப்ளே கொண்டிருக்கும். உடன் 4ஜிபி ரேம் மற்றும் 32 ஜிபி உள்ளடக்க சேமிப்புடன் இணைந்த ஒரு ஆக்டாகோர் செயலி மூலம் இயக்கப்படும்.


மைக்ரோ எஸ்டி அட்டை ஸ்லாட் வழியாக 256 ஜிபி வரை விரிவாக்க சேமிப்பு ஆதரவை வழங்கும் இக்கருவி ஒரு 3,000எம்ஏஎச் பற்றரி மற்றும் அண்ட்ரோய்ட் 7.1.1 நௌவ்கட் கொண்டு இயங்கும். மேலும் இக்கருவியில் ஒரு கைரேகை ஸ்கானர் மற்றும் பிக்ஸ்பை வொய்ஸ் அசிஸ்டென்ட் இடம்பெறும்.


சிறப்பம்சமான அதன் இரட்டை கமராக்களை பொறுத்தமட்டில், எப்/ 1.7 துளை மற்றும் ஒரு எப் / 1.9 துளை கொண்ட 5 மெகாபிக்சல் சென்சார் மற்றும் ஒரு 13 மெகாபிக்சல் சென்சார் உடனான ஒரு செங்குத்து இரட்டை கமரா அமைப்பு கொண்டுள்ளது. சாதனத்தின் முன்பக்க கமராவை பொறுத்தமட்டில், எப் / 1.9 துளை கொண்ட ஒரு 16 மெகாபிக்சல் செல்பீ கமரா கொண்டு வருகிறது.



## பிரேக்குகள் தரும் எச்சரிக்கை மொழி!

தொழில்நுட்ப ரீதியாக என்னதான் வாகனங்கள் மேம்படுத்தப்பட்டு இருந்தாலும், வாகன ஓட்டிகளுக்கு அவசர காலங்களில் கைக்கொடுப்பது பிரேக்குகள்தான். அவற்றின் உறுதித்தன்மையை உணர, அதனுடைய நுட்பமான மொழியை நாம் தெரிந்து வைத்திருப்பது அவசியமாகிறது. பிரேக்குகளுக்கு மொழியா என்று உங்களுக்குள் ஐயம் வரலாம், ஆனால் மேலும் தொடர்ந்து படித்தால் உங்களுக்கே புரியும்.





### கீச்சொலி

பிரேக்கின் திறன் தேய்ந்துக்கொண்டே வருகிறது என்பதை அதிலிருந்து வரும் கீச்சொலி மற்றும் கிறீச்சொலிகள் மூலம் நாம் அறியலாம். இதை உடனே கவனித்து உங்களது வண்டியை அடுத்தநொடியே மெக்கானிக்கிடம் காட்டுவது சாலச் சிறந்தது.

### கொற.. கொற.. சத்தம்

கீச்சொலி ஒரு எச்சரிக்கைதான். மேலும் நீங்கள் அதை கவனிக்கவில்லை என்றால் கொற கொற அல்லது உர்ர்ர்ர் என்று உறுமும் சத்தம் வரும். இவ்வாறு உங்களுக்கு பிரேக் பிடிக்கும் போது கேட்டால், பிரேக்கின் ஜீவன் முற்றிலுமாக முடிந்து விட்டது என்று அர்த்தம். இதற்கு பிறகும் நீங்கள் வாகனத்தை ஓட்டிக்கொண்டு இருந்தால்,ரோட்டர் பாழாகிவிடும். செலவு மலையளவு ஏறிவிடும்.

அதிர்வும் ஆட்டமும் பிரேக் பிடிக்கும் சமயத்தில் பெடலில் அதிர்வு அல்லது ஆட்டம் காட்டினால், பிரேக் அமைப்பு பழுதடைந்து வருகிறது என்பது உறுதி. அதையும் தாண்டி பிரேக் பிடித்து வாகனம் முழுவதுமாக குலுங்கினால் அது மிகவும் ஆபத்தானது. பெரிய ஆபத்து வருவதற்கான எச்சரிக்கையாக இதை பாருங்கள். இந்த சூழ்நிலையை உணர்ந்தால், உடனே வாகனத்தை மெக்கானிக்கிடம் காட்டவும்.

### பிரேக் திரவம் கசிவு

இவ்வாறான ஒரு பிரச்சனையை வாகன ஓட்டிகள் பலர் தெரிந்துவைத்திருப்பது இல்லை. பிரேக்கிற்கான திரவத்தில் கசிவு ஏற்படுகிறது என்றால், நீங்கள் பெடலை கீழே அழுத்தும் போது, அது மிகவும் எளிதாக முற்றிலும் இறங்கும்.

சில சூழ்நிலைகளில் தன்னிச்சையாக மேல எழாமல், நீங்களே பெடலை தூக்கிவிட வேண்டும். இதற்கு உடனடி சேர்வீஸ் அவசியம். நெடுஞ்சாலை, வேகமான பயணம் என நீங்கள் வாகனத்தில் செல்லும் போது, இதுபோன்ற பிரச்சனைக்கு உடனடி தீர்வு காணவேண்டும். இல்லையேல் அது பாதுக்காப்பான பயணமாக இருக்காது.

### எச்சரிக்கை விளக்குகள்

மொத்த பிரேக்கிங் அமைப்புகளுக்கும் மற்றும் ஏபிஎஸ் கருவிக்கும் தனித்தனியே வாகனங்களில் விளக்கு ஒளி அமைப்பு இருக்கும். இதை அவசியம் ஓட்டுநர்கள் தெரிந்துவைத்திருக்க வேண்டும். அவசர காலங்களில் உங்களது காரை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் அப்போது ஏபிஎஸ் தன்னிச்சையாக இயங்கும், அதை உணர்த்த விளக்கும் உடன் எரியும். பிறகு பிரச்சனை தீர்ந்தவுடன் ஏபிஎஸ் மீண்டும் அதுவாகவே அணைந்துவிடும். ஆனால் பிரேக்கிங் சிஸ்டத்திற்காக இயங்கும் விளக்குகள் ஒரு எச்சரிக்கை மணி. கார் அல்லது பைக்கின் மொத்த பிரேக்கிங் சிஸ்டத்தில் பிரச்சனையை உணர்த்த அந்த விளக்குகள எரியும்.

## ஒரு லீற்றர் பெற்றோலில் 90 கிலோமீற்றர்!

பஜாஜ் சிடி100 எலெக்ட்ரிக் ஸ்டார்ட் கொண்ட மொடல் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் இலங்கையிலும் அறிமுகமாகவுள்ளது. எலோவ் வீல் கொண்ட பஜாஜ் சிடி100 எலெக்ட்ரிக் ஸ்டார்ட் இந்திய விலை ரூ.38,806 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இலங்கை விலை முடிவுசெய்யப்படவில்லை.

பஜாஜ் சிடி100 மொடல்களின் நான்காவது தலைமுறை மொடலாக வெளியிடப்பட்டுள்ள சிடி100 முந்தைய சிடி100பி மொடலை விட விலை அதிகம் ஆகும். புதிய சிடி100 ணிஷி எலோ 99.27சிசி சிங்கிள் சிலிண்டர் இன்ஜின் கொண்டுள்ளது. இந்த இன்ஜின் 8.08 தீலீஜ் மற்றும் 8.05ழினீ டார்கியூ மற்றும் 4ஸ்பீட் கியர்பொக்ஸ் கொண்டுள்ளது.

மணிக்கு அதிகபட்சம் 90 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டுள்ள பஜாஜ் சிடி100 ணிஷி லிட்டருக்கு 90 கிலோமீட்டர் வரை செல்லும் திறன் கொண்டுள்ளது. பழைய மொடல்களில் இருந்து வித்தியாசப் படுத்தும் நோக்கில் சிடி100 மொடலுக்கு பஜாஜ் நிறுவனம் புதிய சலுகைகள், ஃபியூயல் காஜ், ஃப்ளெக்சிபிள்' சைடு இன்டிகேட்டர்களை கொண்டுள்ளது.

ஃபிளேம் ரெட் மற்றும் எபோனி பிளாக் என இரண்டு வித நிறங்களில் கிடைக்கும் பஜாஜ் சிடி100 ணிஷி அலாய் முந்தைய மொடல்களை போன்றே நல்ல வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சின்னத்திரை



பிரனிதா சர்மா

### பிரியமானவளை போல மருமகள்!

சன் டிவியின் வாணி ராணி, விஜய் டிவியின் நீலி தொடர்களில் நடித்து வருகிறார் நிரஞ்சனி. இதுவரை பல தொடர்களில் நடித்தாலும் பிரியமானவள் தொடரின் கவிதா பாத்திரத்தை மறக்க முடியாமல் தவிக்கிறார். எங்கு போனாலும் ரசிகர்கள் மறித்து, அநியாயத்துக்கு இவ்வளவு நல்லவளா இருக்கிரீயேமா என கேட்பார்களாம். தன்னை மாதிரி ஒரு மருமகள் தமக்கு தேவையென நிறைய பெண்களும் சொன்னார்களாம். இதை யார் சொன்னது... நிரஞ்சனிதான் சொன்னார்.

### பகல்நிலவு ஜோடியின் ஐடியா!



பகல்நிலவு தொடர் மூலம் சின்னத்திரைக்குள் நுழைந்து றெக்க கட்டி பறக்குது மனசு தொடரில் மலர் ரிச்சராக மனதை ஈர்ப்பவர் சமீரா ஷெரீப். இதன் தயாரிப்பாளரும் இவரே. பகல் நிலவு தொடரில் ஜோடியாக நடிக்கும் அன்வருடன் நிஜமாகவே இவர் ஜோடி. அன்வரின் அம்மாவுடன் தொடர் ஒன்றில் நடித்ததால் அன்வருடன் பழக்கம் ஏற்பட்டு காதலாகியதாம். பகல் நிலவு சீரியலுக்கு ஹீரோயின் தேடிக்கொண்டிருந்தபோது, அன்வரின் பேஸ்புக்கை பார்த்து, உன் பார்ட்னரையே நடிக்க அழைத்து வா என இயக்குனர் சொன்னாராம். நிஜத்திலும், திரையிலும் இருவரும் காதலர்களாக இருந்தாலும் இப்போதைக்கு திருமணம் செய்யமாட்டார்களாம்.

### வில்லிதான் சிரமம்!



தெய்வமகள் தொடரில் சுஜாதாவாக அமைதியான நல்ல மகளாகவும், மருகளாகவும் வந்து அனைவரின் கவனத்தையும் பெற்றவர் சுனிதா. தற்போது சுமங்கலி தொடரில் வில்லியாக நடிக்கிறார். தெய்வமகளில் ஒரு குழந்தைக்கு தாயாக அமைதியான பாத்திரத்தில் நடித்ததைவிட, சுமங்கலி தொடரில் வில்லியாக நடிப்பது சிரமமாக உள்ளதாக கூறியுள்ளார். வில்லி பாத்திரம்தான் நடிப்பிற்கான வாய்ப்பை தருவதாகவும் கூறியுள்ளார். தெய்வமகள் தொடரில் நடித்தபோது நடந்த சம்பவமொன்றையும் கூறியுள்ளார். ஒரு காட்சியில் அவருக்கு குழந்தை இறந்து பிறப்பதை போல காட்டப்படும். மறுநாள் சுனிதா ஷொப்பிங் சென்றிருக்கிறார். ஒருபெண்மணி இவரை பிடித்து, நேற்றுதானே குழந்தை இறந்து பிறந்தது இன்று மொடர்ன் ட்ரஸோட கிளம்பிட்டியா என திட்டினாராம்.

### யமுனா பேயை ரசிக்கும் குழந்தைகள்!

யாரடி நீ மோகினி தொடரில் கொடூர பேயாக வந்து ரசிகர்களை திகிலூட்டுபவர் யமுனா. தற்போது அபூர்வராகங்கள் உள்ளிட்ட சில தொடர்களில் நடித்து வருகிறார். வெய்யில் படத்தின் மூலம் நடிப்பிற்கு என்ரியாகி, படவாய்ப்புக்கள் கிடைக்காமல் போக தொடர் நாடகப்பக்கம் ஒதுங்கிவிட்டார். யாரடி நீ மோகினி தொடரில் தனது பேய் பாத்திரத்திற்கு நிறைய குழந்தைகள் ரசிகர்களாக இருக்கிறார்கள் என்கிறார். ஒருநாள் தொடரில் தன்னை காணாவிட்டால் மறுநாள் வீதியில் போகிறவர் வருகிறவர் எல்லாம் மறித்து, ஏன் வரவில்லையென விசாரிக்கிறார்கள் என்கிறார். அந்த பேய் பாத்திரத்தை ரசித்து நடிப்பதாகவும் கூறியுள்ளார். இதேவேளை, அபூர்வராகங்கள் தொடரில் யமுனாவின் அண்ணியாக நடிப்பது, அவரது கூடப்பிறந்த தங்கை. ஒரு தொடரிலாவது இருவரும் அக்கா தங்கையாக நடிப்பதே தமது இலட்சியமாம்.

### புதிய படங்களை வாங்கியது ஜீ தமிழ்!

கடந்த வருடத்தை விட இந்த வருடம் திரைப்படங்களை வாங்குவதில் தொலைக்காட்சிகளிடையே கடுமையான போட்டி நடக்கிறது. அதுவும் பெரிய பட்ஜெட் படங்கள் என்றால் போட்டியோ போட்டிதான். 5 கோடி முதல் 15 கோடி வரை கொடுத்து உரிமம் பெறுகிறார்கள். இந்த வருடத்தில் அதிக படங்களை வாங்கி முதலிடத்தில் உள்ளது ஜீ தமிழ் தொலைக்காட்சி. அதேகண்கள், எனக்கு வாய்த்த அடிமைகள், எமன், டோரா, கவண், சிவலிங்கா, 8 தோட்டாக்கள், மரகத நாணயம், வனமகன், இவன் தந்திரன், நிபுணன், பொதுவாக என் மனசு தங்கம், புரியாத புதிர், இடம் பொருள் ஏவல், சர்வர் சுந்தரம், ஸ்பைடர் ஆகிய படங்களை வாங்கியுள்ளது. மாதத்திற்கு இரண்டு புதிய படங்கள் என்ற ரீதியில் ஒளிபரப்ப திட்டமிட்டுள்ளனர்.

### சரவணன் மீனாட்சி அம்மா நடிகையின் கதை!

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் சரவணன் மீனாட்சி தொடரில் செல்லமான அம்மா, மாமியாராக நடித்து வருகிறார் செந்தில்குமாரி. பசங்க படத்தின் மூலம் புகழ்பெற்றவர் இவர். சினிமாவில் அம்மா, அண்ணி வேடங்களில் தொடர்ந்து நடித்து வருகிறார். தற்போது மெர்சல், மதுரவீரன், சர்வர் சுந்தரம் உள்ளிட்ட படங்கள் கைவசம் உள்ளது. இந்தநிலையில் சரவணன் மீனாட்சி தொடரில் எப்படி நடிக்க வேண்டி வந்தது என்பதை கூறியுள்ளார். இந்த தொடர் அவருக்கு பிடிக்குமாம். ஒருநாள் இயக்குனரை தொலைபேசியில் அழைத்து பாராட்டியுள்ளார். நீங்களும் தொடரில் நடியுங்கள் என இயக்குனர் கேட்க மறுத்துவிட்டாராம். பின்னர் நச்சரித்து நடிக்கவைத்துவிட்டார். சினிமாதான் தனக்கு முக்கியம் என்றுள்ளவர், சரவணன் மீனாட்சி தொடரில் நடிப்பதால் சினிமா பக்கம் கவனம் செலுத்த முடியவில்லையென கவலைப்பட்டுள்ளார். இந்த தொடரின் பின்னர் இப்போதைக்கு தொடர்களில் நடிக்கும் எண்ணமில்லையென்றும் கூறியுள்ளார்.




தனிசிக் திவாரி

### விஜய்யுடன் மோதும் சுசீந்திரன்!

அட்லி இயக்கத்தில் விஜய் நடித்த மெர்சல் படம் வரும் தீபாவளியன்று திரைக்கு வருகிறது. இதேநாளில் சுசீந்திரன் இயக்கிய நெஞ்சில் துணிவிருந்தால் படமும் வெளியாகிறது. மாநகரம் படத்தில் நடித்த சந்தீப் இதில் நாயகனாக நடிக்கிறார். விக்ராந்த், சூரி ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். டி.இமான் இசையமைத்துள்ளார். 2013இல் அஜித்தின் ஆரம்பம் படம் வெளியான போது, சுசீந்திரனின் பாண்டியநாடும் வெளியானது. இப்பொழுது விஜய் படத்துடன் வெளியாகிறது. "விஜய் படத்தை எதிர்த்து உங்கள் படமும் வெளியாகிறதா என சிலர் கேட்கிறார்கள். அப்படியல்ல. விஜய் படத்துடன் இந்தப்படமும் வருகிறது. அவ்வளவுதான்" என கருத்தாக பேசியுள்ளார் சுசீந்திரன்.

### ஷட்அப் பண்ண மறுத்த ஓவியா!

பிக்பொஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஓவியா "நீங்க ஷட்அப் பண்ணுங்க" என்ற வார்த்தையை உச்சரித்து அகில உலக பிரபலமாக்கி விட்டார். பிரபலமான வார்த்தைகளை பாடலாக்குவது தமிழ் சினிமாவில் வழக்கம். ஜெய், அஞ்சலி, ஜனனி ஐயர் நடிக்கும் பலூன் படத்தில் நீங்க ஷட்அப் பண்ணுங்க என்ற பாடலை உருவாக்குகிறார்கள். யுவன் சங்கர்ராஜாவின் இசையில் அனிருத் பாடலை பாடியுள்ளார். இந்தப்பாடலை ஓவியாவை வைத்து பாடவைக்கவே இயக்குனர் விரும்பியிருந்தார். தனது வார்த்தையை வைத்து பாடல் உருவாகுவது மகிழ்ச்சியென தெரிவித்த ஓவியா, சொந்தக்குரலில் பாட மறுத்துவிட்டார். இதற்கு காரணம், பலூனில் அஞ்சலி நடிப்பது என்கிறார்கள். ஏற்கனவே கலகலப்பு படத்தில் இருவரும் ஒன்றாக நடித்திருந்தனர். இதில் இருவருக்குமிடையில் ஈகோ மோதல் ஏற்பட்டிருந்தது. அந்த மோதலை மனதில் வைத்தே ஓவியா பாட மறுத்திருக்கிறார்.

### விஜய் சேதுபதியின் ஸ்டைலிஷ் டான்!

இதற்குத்தானே ஆசைப்பட்டாய் படத்தை இயக்கியவர் கோகுல். அடுத்ததாக ஜூங்கா என்ற படத்தை இயக்குகிறார். இதில் ஹீரோ விஜய் சேதுபதிதான். விக்ரம் வேதாவை தொடர்ந்து இதிலும் டானாகவே நடிக்கிறார். ஆனால் இதில் வெளிநாட்டில் வாழும் ஸ்டைலிஷான டானாம். வெளிநாட்டில் வாழும் டான் என்பதால் அதற்கு பொருத்தமான ஜோடி எமி ஜக்சன்தான் என அவரை ஒப்பந்தம் செய்துள்ளனர். கோகுலின் முதல் படத்தில் இசையமைத்த சித்தார்த் விபின் இதற்கும் இசையமைக்கிறார். பாரிஷில் விரைவில் சூட்டிங் ஆரம்பிக்கவுள்ளது.

### தனுஷ் ஏமாற்றம்!

வேலையில்லா பட்டதாரி 2 எதிர்பார்த்த வெற்றியடையாததில் தனுஷ் அப்செட் ஆகியுள்ளார். பெரும் எதிர்பார்ப்பில் தமிழ், இந்தி, தெலுங்கில் வெளியிட்டார்கள். வேலையில்லா பட்டதாரி தெலுங்கில் ரகுவரன் பிடெக் என்ற பெயரில் வெளியானது. படத்திற்கு நல்ல வசூலும் இலாபமும் கிடைத்திருந்தது. எனினும் முதல் பாகத்தில் இருந்த யதார்த்தமும் நிறைவும் இரண்டாம் பாகத்தில் இல்லாததால் படம் எதிர்பார்த்ததை போல ஓடவில்லை. விவேகம் தெலுங்கு டப்பிங் வெளியான மறுநாள் தெலுங்கில் வெளியாகி பெரும் அடிவாங்கியுள்ளது. தமிழில் நல்ல வசூல் என படக்குழு அறிவித்திருந்தாலும், மிகச்சுமாராகத்தான் படம் ஓடியுள்ளது. இந்தியிலும் படம் மோசமான வசூல் நிலவரம்தான்.

### அஜித் நாயகி இப்போது வடிவேலுக்கு!


இம்சை அரசன் 23ம் புலிகேசி படம் சூப்பர் டூப்பர் ஹிட்டடித்தது. சிம்புதேவன் இயக்கிய இந்த படத்தின் இரண்டாம் பாக படப்பிடிப்புக்கள் ஆரம்பித்துள்ளன. படத்திற்கு இம்சை அரசன் 24ம் புலிகேசி என பெயரிடப்பட்டுள்ளது. இதில் வடிவேலுவுக்கு ஜோடியாக பார்வதி ஓமனகுட்டன் நடிக்கவுள்ளார் என கூறப்படுகிறது. இவர் பில்லா 2 இல் அஜித்தின் ஜோடியாக நடித்தவர்.

### நன்தாராவை பின்பற்றும் தன்ஷிகா!

தமிழ் சினிமாவில் இப்பொழுது ஆரோக்கியமான மாற்றம் ஒன்று நடந்து வருகிறது. கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை தேர்வுசெய்து, கதையின் நாயகிகளாக நடிகைகள் நடிக்க தொடங்கியுள்ளனர் நயன்தாரா ஆரம்பித்ததை இப்பொழுது த்ரிஷாவும் பின்பற்றுகிறார். இருவருக்கும் கைநிறைய படங்களும் உள்ளன. இந்த பாணியை தன்ஷிகாவும் பின்பற்ற தொடங்கியுள்ளார். பரதேசி, கபாலி படங்களில் கனதியான பாத்திரத்தில் நடித்தவர், இப்பொழுது கதையின் நாயகியாக நடித்து வருகிறார். அவர் நடித்த குழலி படத்தில் பெர்ஸ்ட் லுக் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றிருந்தது.

### திருமணத்தின் பின்னரும் பிரியாமணி நடிப்பார்!

மும்பை தொழிலதிபருடன் பிரியாமணிக்கு அண்மையில் திருமணம் நடந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி என பல மொழிகளில் ஐம்பதிற்கு மேற்பட்ட படங்களில் நடித்தவர் பிரியாமணி. சில காலத்தின் முன் கிரிக்கெட் தொடர்பான நிகழ்ச்சியொன்றில் மும்பை தொழிலதிபர் முஸ்தபா ராஜை சந்தித்திருக்கிறார். இருவருக்கும் லவ்ஸ் ஆகிவிட்டது. இருவீட்டார் சம்மதத்துடன் கடந்தவருடம் நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த நிலையில் கடந்த வாரும் பெங்களூரில் ஒரு பதிவாளர் அலுவலகத்தில் இருவருக்கும் திருமணம் நடந்தது. இதனால் அந்தப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஒருவழியாக ரசிகர்களை பொலிசார் அகற்றிவிட்டனர். திருமணத்தின் பின்னரும் பிரியாமணி நடிப்பாராம்.



# விளம்பரத்தை விரும்பாத உள்ளம்!

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 71

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** ஜாதி, மத, இன, மொழி, மாநில எல்லைகளை எல்லாம் தாண்டி, பாதிக்கப்பட்ட மக்கள் யாராக இருந்தாலும் உதவுவார். அதேநேரம் தமிழர்களையும் அவர்களது கலாசாரத்தையும் மற்ற மாநிலத்தவர் இழிவுபடுத்துவதை அனுமதிக்க மாட்டார். பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யும் உதவியைவிட, தனது எதிர்ப்பையே முன்னிலைப்படுத்துவார்.

ஒருமுறை ஒடிசா மாநிலத்தில் (அப்போது ஒரிசா) பெரும் வெள்ளம் ஏற்பட்டது. ஏராளமானோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடு,வாசல்களை இழந்து தவித்தனர். சென்னையில் தங்கியிருந்து மருத்துவக் கல்லூரியில் படித்துவந்த ஒடிசா மாணவர்கள், தங்கள் மாநிலத்துக்கு நிவாரண நிதி திரட்டித் தர விரும்பினர்.

அதற்காக, நடிகை வைஜெயந்தி மாலாவும், நடிகர் கிஷோர் குமாரும் நடித்து அப்போது வட மாநிலங்களில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்த 'நியூ டெல்லி' என்ற இந்திப் படத்தை சென்னை அசோக் திரையரங்கில் காலைக் காட்சியாக திரையிட முடிவு செய்தனர். அது 1956ம் ஆண்டு. அப்போதே திமுகவில் எம்.ஜி.ஆர் முக்கிய பிரமுகராகவும் திரை உலகில் சூப்பர் ஸ்டாராகவும் இருந்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர் தலைமை தாங்க வேண்டுமென்றும் அவர் வந்தால் வசூல் அதிகமாக கிடைக்கும் என்றும் ஒடிசா மாணவர்கள் கருதினர். திரையிடப்படுவதோ இந்திப் படம். திமுகவோ இந்தி திணிப்புக்கு எதிரான இயக்கம். இதனால், எம்.ஜி.ஆரை அழைத்தால் அவர் நிகழ்ச்சிக்கு வருவாரா என்று மாணவர்களுக்கு சந்தேகம். இருந்தாலும் கேட்டுப் பார்க்கலாம் என்று எம்.ஜி.ஆரை தொடர்புகொண்டு தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

ஒருவர் துன்பப்படுகிறார் என்றால், அவர்கள் தன்னை எதிரியாக நினைப்பவர்களாக இருந்தாலும் உதவி செய்பவர் எம்.ஜி.ஆர்! நிகழ்ச்சிக்கு வர சம்மதித்தார். ஒடிசாவைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அந்த சமயத்தில் திடீரென ஒரு சிக்கல் முளைத்தது.

வட மாநிலங்களில் ஓடிக்கொண்டிருந்த 'நியூ டெல்லி' திரைப்படம் சென்னையிலும் வெளியானது. படத்தில் ஒரு காட்சியில் தமிழர் ஒருவரின் தலையில் செருப்பை வைத்து கதாநாயகன் கிஷோர் குமார் ஆடிப் பாடி வருவார். அருகே கதாநாயகி வைஜெயந்தி மாலாவும் இருப்பார். இந்தக் காட்சி சர்ச்சையை ஏற்படுத்தியது.

"ஒரு தமிழ் நடிகை கதாநாயகியாக நடித்துள்ள படத்தில் தமிழர்களை இழிவு படுத்துவது போன்ற காட்சி எப்படி இடம் பெற்றது? இது தமிழர்களை அவமதிக்கும் செயல். இந்தப் படத்தை தமிழகத்தில் திரையிட அனுமதிக்கலாமா?" என்று கண்டனக் குரல்கள் கிளம்பின. 'நியூ டெல்லி' படத்தை திரையிட ஏற்பாடு செய்திருந்த மாணவர்களுக்கு பயத்தோடு கவலையும் சேர்ந்துகொண்டது. விழாவுக்கு எம்.ஜி.ஆர் வருவாரா? என்று கவலைப்பட்டனர்.

படத்துக்கு எழுந்த எதிர்ப்பு எம்.ஜி.ஆரின் கவனத்துக்கு சென்றது. அவருக்கும் தர்மசங்கடம். "தமிழர்களை இழிவு செய்யும் காட்சியைக் கொண்ட படத்துக்கு நான் எப்படி தலைமை வகித்து வசூலுக்கு உதவ முடியும்? இதுபோன்ற காட்சி படத்தில் உள்ளது என்று என்னிடம் முன்பே ஏன் தெரிவிக்கவில்லை?" என்று விழா ஏற்பாட்டாளர்களிடம் கடிந்து கொண்டார். தாங்கள் அந்தப் படத்தை பார்க்கவில்லை என்றும் தெரிந்திருந்தால் இதுபோன்று நடந்திருக்காது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சிறிதுநேரம் நிதானமாக யோசித்த எம்.ஜி.ஆர், "நிகழ்ச்சிக்கு வருகிறேன். ஆனால், எனது எதிர்ப்பைத் தெரிவிப்பேன்" என்று உறுதியாகக் கூறிவிட்டார். இதற்கிடையே, எம்.ஜி.ஆரை விமர்சிப்பவர்கள் ஒருபக்கம், "தமிழர்களை இழிவு படுத்தும் படம் திரையிடும் நிகழ்ச்சியில் எம்.ஜி.ஆர் எப்படி கலந்துகொள்ளலாம்?" என்று கேள்வி எழுப்பினர்.

இந்த அமர்க்களங்களுக்கிடையே, குறிப்பிட்ட நாளில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள எம்.ஜி.ஆர் சென்றார். திரையரங்கம் இருந்த பகுதியில் நுழையவே முடியாதபடி மக்கள் வெள்ளம். மாணவர்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமாகவே வசூல் கிடைத்தது. படம் திரையிடப்பட்டு இடைவேளையின்போது, எம்.ஜி.ஆர் பேச அழைக்கப்பட்டார்.

"திரைப்படம் என்பது சக்தி வாய்ந்தது. பார்ப்பவர்கள் மனதில் ஆழமாகப் பதியக்கூடியது. மக்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமே தவிர, வெறுப்பையும் வேற்றுமையையும் ஏற்படுத்தக் கூடாது. இந்தப் படத்தில் ஒரு தமிழரின் தலையில் செருப்பு வைக்கும் காட்சி . இடம் பெற்றுள்ளது. அந்தக் காட்சியைப் பார்த்து நான் மிகவும் வேதனைப்பட்டேன். என்னைப் போலவே தமிழ் மக்களும் வேதனை அடைந்துள்ளனர். நாட்டின் எந்த பகுதி மக்களின் உணர்வுகளையும் பாதிக்கும் காட்சிகள் படத்தில் இடம்பெறச் செய்யக் கூடாது." என்று தனது எதிர்ப்பை எம்.ஜி.ஆர் தெரிவித்தார்.


அதேநேரம், மாணவர்களின் நாட்டுப் பற்றையும் நல்ல நோக்கத்தையும் பாராட்டுவதாகவும் அதற்காகவே இந்த நிகழ்ச்சிக்கு வந்ததாகவும் கூறினார். அவரது பேச்சை ஆமோதித்து கூட்டத்தினர் பலத்த கரகோஷம் செய்தனர்.


நிகழ்ச்சி முடிந்து காரில் ஏறும்போது, "நாளை என்னை வந்து சந்தியுங்கள்" என்று நிகழ்ச்சி அமைப்பாளர்களிடம் கூறிவிட்டு எம்.ஜி.ஆர் புறப்பட்டார். மறுநாள் அவரது வீட்டுக்குச் சென்று மாணவர்கள் சந்தித்தனர். அவர்களை வரவேற்று உபசரித்தார் எம்.ஜி.ஆர்! "உங்கள் நோக்கம் உயர்வானது. ஆனால், நீங்கள் திரையிட தேர்ந்தெடுத்த படம் பற்றி என்னால் அப்படி சொல்ல முடியாது. உங்களின் நற்பணிக்கு எனது சிறிய காணிக்கை" என்று கூறி, மாணவர்களிடம் ஒரு பெரும் தொகையை நன் கொடையாக அளித்தார்.

இதை எதிர்பார்க்காத மாணவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். தன்னை வந்து சந்திக்குமாறு எம்.ஜி.ஆர் கூறியது இதற்குத்தான் என்பதையும் · புரிந்து கொண்டனர். 'இந்த நன்கொடையை நேற்று மேடையிலேயே கொடுத்திருக்கலாமே?' என்று மாணவர்களுக்கு சந்தேகம். அதற்கு விடையளிப்பதுபோல எம்.ஜி.ஆர் சொன்னார்..." நேற்று நான் நன்கொடை கொடுத்திருந்தால் அதற்குத் தான் முக்கியத்துவம் கிடைத்திருக்கும். என் எதிர்ப்பின் வலிமை குறைந்து போயிருக்கும்" என்றார்.

ஒடிசா வெள்ள நிவாரணத்துக்கு எம்.ஜி.ஆரின் உதவி வெளியே தெரியவில்லை. ஆனாலும், விளம்பரத்தை விரும்பாத அவரது உதவும் உள்ளம் ஒடிசா மாணவர்களுக்குத் தெரிந்தது!

தொடரும்...







'நவரத்தினம்' படத்தில், 'லடுக்கே ஸே மிலீ லடுக்கி' என்ற இந்திப் பாடல் இடம் பெற்றது. இந்தப் பாடல் காட்சியில் எம்.ஜி.ஆருடன் நடிகை ஜரீனா வஹாப் நடித்திருந்தார். தமிழ் படம் ஒன்றில் முழுமையாக இந்திப் பாடல் இடம் பெற்றது அப்போது புதுமை!

விவாதம்

# சீனா தொடக்கம் சிறுப்பிட்டி வரை

ஜென்னி ரொட்ஸ்கி

தமிழ் தேசியம் என்றாலே இடதுசாரிகளிற்கு வேப்பங்கசப்பு. இது காலம்காலமாக இருந்து வருவது. 1940 களின் பின்னர் இடதுசாரிகள் தமிழ் அரசியலில்செல்வாக்குசெலுத்த ஆரம்பித்த சமயத்தில், திடீரென எழுச்சியுற்ற தமிழ் தேசிய அலைக்குள் அவர்கள் எல்லோரும் அள்ளுண்டு போய்விட்டனர். உலகளவில் இன்று இடதுசாரித்துவமும் கிட்டத்தட்ட தேர்தல் அரசியலாகத்தான் தன்னை தகவமைத்து கொண்டுவிட்டது. மிகச்சில தலைவர்களை தவிர்த்தால், இடதுசாரித்துவமும் தேர்தல் அரசியலை இலக்காக கொண்டதுதான். தமிழ் தேசியம் எதிரான இடதுசாரித்துவத்தின் விமர்சனம் "சீஞ் இந்தப்பழம் புளிக்கும்" என்ற வகைக்குள்தான் உள்ளடங்குவது.

இலங்கையின் இடதுசாரிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான என்.சண்முகதாசன் தமிழர்களின் பொருளாதாரத்தை மணியோர்டர் பொருளாதாரம் என்றுதான் குறிப்பிட்டார். அதாவது கொழும்பில் இருந்து வரும் மணியோர்டர் சம்பள பணம்தான் நமது ஒரே பணவருவாய். வேறு பொருளாதாரம் இல்லாத தமிழர்களிற்கு தனிநாடு அவசியமில்லையென்றார்.

இன்றைய இடதுசாரிகளின் நிலைப் பாடும் அதுதான். தமிழர் சுயநிர்ணயம் என்றாலே ஜே.வி.பிக்கு காய்ச்சல் இருந்தது. இப்பொழுதுதான் மெல்லமெல்ல தேறி வருகிறது. வாசுதேவ, திஸ்ஸ விதாரண பற்றியெல்லாம் பேச வேண்டியதில்லை. முன்னிலை சோசலிச கட்சியிலுள்ள சிறுவர்களிற்கு இலங்கையில் தமிழர்கள் என்ற இனம் இருப்பதே சந்தேகமாக இருக்கிறது. இது சிங்கள இடதுசாரிகளின் நிலைப்பாடு. தமிழ் இடதுசாரிகள் பெரும்பாலும் சிங்கள இடதுசாரிகளின் தம்பிகள்தான். சுயநிர்ணயம் பற்றி பேசினால், நாக்குழற எதையோ சொல்வார்கள். இப்பொழுதுதான் சுயநிர்ணயத்தை ஏற்றுகொண்டுள்ளனர். ஆனால் பிரிந்து செல்வதெல்லாம் தெய்வக் குற்றமாம்.

> புத்தூர் மயான விவகாரத்தை முன்னிறுத்தியும், அதில் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் பாத்திரத்தை முன்னிறுத்தியும் இந்த கட்டுரை வெளியாகிறது. விவாதமாகவும், உண்மையறியும் விசாரணையாகவும் செய்யப்பட வேண்டிய அத்தியாவசிய பணி இது. ஒரு விவாதகளத்தை திறந்து, சமூகமாற்றத்திற்கான வழியை கண்டடையும் நோக்கத்துடன் தீபம் இந்த கட்டுரையை பிரசுரிக்கிறது. கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் எதிர்பார்க்கிறோம்.
>
> ஆ-ர்

இப்படியான நிலைப்பாடுகளால்தான் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இந்த கட்சிகள் அழிந்துவரும் அபூர்வ உயிரினங்கள் வகைக்குள் அடங்கிவிட்டனர். தமிழ் அரசியல், சமூக அசைவியக்கத்தில் செல்வாக்கு செலுத்த முடியாமல் போன சமயங்களில் தமிழ் இடதுசாரிகள் அனேகமாக சாதியத்தையே கையில் எடுக்கிறார்கள். புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியும் இந்த வகையான அரசியலையே செய்கிறது.

புத்தூர் மயான பிரச்சனையை முன்னிறுத்தி புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி முன்னெடுக்கும் தவறான சில நடவடிக்கைகளை மக்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்ற வேண்டுமென நடத்தப்படும் போராட்டம் 50 நாளை கடந்து சென்று கொண்டிருக்கிறது. மயானங்களிற்கு அருகில் மக்கள் குடியிருக்க முடியாது, காணியில்லாத மக்களிற்கு காணி வழங்கப்பட வேண்டுமென்பதெல்லாம் நியாயமான கோரிக்கைகள்தான். முதலில் இந்த கோரிக்கையின் தார்மீக அறத்தை அங்கீகரிக்க வேண்டும். அதேவேளை, சரியான கோரிக்கையை தவறான போராட்டம் தூண்டிவிடப்பட்டிருக்கலாமென்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.

மயானத்திற்கு அருகில் உள்ள காணியை குறைந்த விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்றுள்ளார். மயானத்திற்கு அருகில் மக்களை குடியமர்த்தியதே புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சிதான். அத்துடன், அந்த மக்களை பாவித்து மயான புனரமைப்பு பலமுறை நடந்துள்ளது. இதற்கான ஒப்பந்தங்களை கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளர் செல்வமே ஏற்றிருக்கிறார். ஒப்பந்தத்தை பெற்று, அருகிலுள்ள மக்களை பாவித்து மயானத்தை பலமுறை புனரமைத்து,




பணத்தையும் எடுத்துக்கொண்டு விட்டு, இப்பொழுது அந்த மக்களையே பாவித்து போராட்டம் நடத்துவதை எந்த வகை அரசியலுக்குள் அடக்குவது?

தமிழர்களிடம் தேசிய பொருளாதாரம் இல்லை, மணியோர்டர் பொருளாதாரம்தான் உள்ளதென சொன்ன சண்முகதாசனின் வாரிசுகள், உள்ளூரில் இப்படியான வியாபாரம் செய்து புதிய பொருளாதார கொள்கையை வளர்க்கிறார்களா?

மயானம் அகற்றப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டே அங்கு பலர் குடியமர்த்தப்பட்டுள்ளனர். சொன்னபடி மயானம் அகற்றப்படவில்லையென மக்கள் கேள்விகேட்க ஆரம்பித்த பின்னரே மயானப்பிரச்சனை தோற்றுவிக்கப்பட்டது, இரு குடும்பங்களின் தகராறும் இதன் பின்னணியில் உள்ளதென்ற குற்றச் சாட்டுக்கள் வலிமையானவை.

யாழ்ப்பாண அமைப்பாளரின் நடவடிக்கைகள் வர்த்தகம் என்று வருமா? மக்கள் பணியென்று வருமா?. சீனாவில் பெய்யும் மழைக்கும் இங்கு குடைபிடிப்பவர்கள்தான் இதற்கு தத்துவ விளக்கம் சொல்ல வேண்டும். ஒரு காணியை வாங்கி, பின்னர் அதிக விலைக்கு அதை விற்று, விற்கப்பட்ட காணியில் பிரச்சனை வரும்போது, கட்சியை கொண்டு போராட்டம் நடத்துவதுதான் மார்க்சும், லெனினும் சொன்ன தத்துவமா?

இந்த இலட்சணத்தில் தமிழ் தேசிய வாதிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள் என வாரத்திற்கு ஒரு கூட்டம் போட்டு எதற்கு கூப்பாடு போடுகிறீர்கள்? உங்களால் முடிந்தளவில் நீங்கள் ஏமாற்றுகிறீர்கள், தமிழ் தேசியவாதிகள் தம்மால் முடிந்தளவில் ஏமாற்றுகிறார்கள் என மனதை திடப்படுத்திக் கொண்டு போய்விட வேண்டியதுதானே.

இன்று (03) யாழ்ப்பாணத்தில் ஒரு நூல் வெளியீடு நடக்கிறது. வட்டுக்கோட்டை தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை என்ற, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் தலைவர் சி.கா.செந்தில்வேல் எழுதிய புத்தகம் அது. தமிழர் வரலாற்றின் முக்கிய காலகட்டங்களை பதிவுசெய்த நூல் என விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மயானத்தை அகற்ற வேண்டுமென போராட்டம் நடத்துபவர்களுடன் உட்கார்ந்திருந்தவர்தான் செந்தில்வேலும்.

சீனாவிலிருந்து சிறுப்பிட்டி வரை என, சீனாவின் சமூக மாற்றங்களை இலங்கையில் பதியம் செய்ய முயன்று, இன்று சிறுப்பிட்டிக்கு அண்மையில் சுருங்கியதை பற்றி கட்சி எப்பொழுது சுயவிமர்சனம் செய்யப்போகிறது?

கட்சிக்கு தத்துவ விளக்கங்கள் ஊட்டிக் கொண்டிருக்கும் பேராசிரியர் சிவசேகரம் போன்றவர்களும் இவற்றை கண்மூடி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பேராசிரியரே, அயோக்கியத்தனங்களை கண்மூடி பார்த்துக் கொண்டிருந்தால் உங்களை வரலாறு இடப்போகும் பாத்திரம் எது?

வழிநடத்தலில், தவறான நடவடிக்கைகளின் முடிவில் முன்வைத்தாலும், அதன் வலிமை இழக்கப்பட்டு விடும். புத்தூர் மயான பிரச்சனையும் இந்த வகையானதுதான்.

காணியில்லாத மக்கள், மக்கள் குடியிருப்புக்களிற்கு பக்கத்தில் திடீரென பிரதேசசபை ஒரு மயானத்தை ஏற்படுத்தி மக்கள் போராடினால் அந்த போராட்டத்தை கண்ணைமூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் புத்தூரில் அப்படி நடக்கவில்லை. புத்தூரில் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் பிரமுகர்களால் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளனர் என கருதத்தக்க ஆவணங்கள் இப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அந்த கட்சியின் யாழ்ப்பாண அமைப் பாளர் கா.கதிர்காமநாதனின் (செல்வம்) வர்த்தக நோக்கங்களிற்காக இந்த





▶ கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் காலஞ் சென்றமாணவன் நிமால் எடிசனின் ஓராண்டு நினைவையொட்டிநடாத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்ட மென்பந்துகிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் அணி வெற்றிபெற்றது. வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் வெற்றிபெற்றவர்களிற்கு பரிசில்களை வழங்கினார்.

# குற்றவியல் சட்டத்தில் தற்காப்புரிமை

எம்.ரமணன் LLB



குற்றவியல் வழக்குகளில் முன்வைக்கப்படுகின்ற எதிர்வாதங்களில் முக்கியமானதொன்றாக தற்காப்புரிமை என்பது காணப்படுகின்றது. ஆரம்பகால சகல நீதிமுறைகளிலும் அங்கீகரிக்கப்படாத இவ் வாதமானது பிற்காலப் பகுதிகளில் ஏற்பட்ட நீதித்துறை வளர்ச்சியினைத் தொடர்ந்து நீதிமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்காப்புக்காக செய்யப்படும் தவறு எதுவும் தவறாகக் கொள்ளப்படமாட்டாது என்பதே இதன் சாராம்சமாகும் என்பதனை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 89 குறிப்பிடுகின்றது. இவ் விதியானது ஆங்கிலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டது. ஒரு நபருக்கு தனது உடலையோ அல்லது உடமையையோ மற்றவரின் தாக்குதலில் இருந்து பாதுகாக்க பலாத்காரத்தைப் பிரயோகிப்பதற்கு குற்றவியல் சட்டம் அனுமதியளிக்கின்றது. ஆங்கிலச் சட்டத்திலிருந்து இவ் ஏற்பாடு கொண்டுவரப்பட்டாலும் இலங்கையில் இதன் ஏற்பாடுகள் விரிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்காப்புரிமையைப் பயன்படுத்துவதற்கு பின்வரும் காரணங்கள் அவசியமானவை.

1. என்ன நோக்கத்திற்காக தற்காப்புரிமை பிரயோகிக்கப்படுகின்றது
2. தற்காப்புரிமை ஆரம்பிக்கப்பட்ட நேரம், அதன் அளவு, முடிவு
3. தற்காப்புரிமையை பாதுகாக்கும் போதுள்ள பிரதான வரையறைகள்
4. எவ் வகையான குற்றங்கள் புரியப்படும் போது தற்காப்புரிமையை பிரயோகிக்கலாம்

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 90ன் கீழ் ஒவ்வொருவரும் பின்வரும் இரண்டு அடிப்படையில் தற்காப்புரிமையை பிரயோகிக்கலாம்.

1. குறித்த நபருடைய அல்லது பிறிதொரு நபருடைய உடலுக்கு அல்லது உடலை பாதிக்கும் தீங்கு தொடர்பில்,
2. அசையக் கூடிய அல்லது அசையா ஆதனமொன்று குறித்த நபருக்கு சொந்தமாகவோ அல்லது பிறிதொரு நபருக்கு சொந்தமாகவோ இருக்கும் போது அதன் மீது திருட்டு கொள்ளை சொத்தழிவு அல்லது குற்றமான அத்துமீறலை புரிய எத்தனிக்கும் செயலுக்கு எதிராக

மேலும்தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 91ஆனது தற்காப்புரிமையின் பிரயோகம் தொடர்பில் குறித்த தீங்கானது முதிர்ச்சியடையாத நபரால் அல்லது சித்தசுவாதீனமற்ற நபரால் அல்லது மதுபோதைக்குட்பட்ட நபரால்புரியப்படும் போது அல்லது புரியப்பட எத்தனிக்கும் போது தற்காப்புரிமையை பிரயோகிக்க முடியும் எனக் குறிப்பிடுகின்றது. உதாரணமாக சித்தசுவாதீனமற்ற ஒருவர் இன்னொரு நபரை கொலைசெய்ய முற்பட்டால் சித்தசுவாதீனமற்றவருக்கு எதிராக மற்றைய நபர் தற்காப்புரிமையை பிரயோகிக்க முடியும்.

தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 93ன் படி உடலுக்கெதிரான தற்காப்புரிமை பிரயோகிக்கப் படுவதற்கு குறித்த எதிரியால் பின்வரும் குற்றச் செயல்களில் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

1. குறித்த தாக்குதல் ஆனது மரணத்தை ஏற்படுத்தும் என்றோ அல்லது அதன் விளைவாக மரணம் ஏற்படும் என்றோ நியாயமான பயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்
2. தாக்குதலிற்குஎதிராகதற்காப்புரிமையை பிரயோகிக்கும் அத் தாக்குதல் ஆனது கடும்காயத்தை அல்லது தாக்குதலின் விளைவாக கடும் காயத்தை ஏற்படுத்தும் என்ற பயத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்
3. குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது அந் நபருக்கு தன்னை கற்பழிப்பதற்கான எண்ணம் உண்டென அறியப்படும் போது
4. குறிப்பிட்ட நபர் இயற்கைக்கு மாறான கீழ்தரமான செயல்களை புரியும் போது அல்லது புரிய எத்தனிக்கும் போது
5. ஆட்கடத்தல் அல்லது ஆட்கவர்தல் எனும் நோக்கோடு குறித்த செயற்பாடு செய்யப்படும் போது
6. முறையற்ற நடுங்க வைத்தல் மேற்கொள்ளப்படும் போது

ஒவ்வொரு மனிதனும் தனக்கு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள தற்காப்புரிமையை பிரயோகிக்கும் போது அது பிரயோகிக்கப்பட வேண்டிய சரியான காலப்பகுதி எது என்பதை அடிப்படையாகக் கொண்டே குறித்த நபரின் குற்றப் பொறுப்பு தீர்மானிக்கப்படுகின்றது. தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 95ன் படி உடலுக்கெதிரான தற்காப்புரிமையானது உடலுக்கு ஆபத்து ஏற்படும் என்ற நியாயமான பயம் ஏற்பட்டவுடனேயே ஆரம்பிக்கப்பட்டதாக கருதப்படும். அதாவது குறிப்பிட்ட ஆபத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சி செய்யப்படும்போது குறித்த குற்றம் புரியப்படும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டதிலிருந்து ஆபத்தின் விளைவாக ஏற்பட்ட பயம் நீங்கும் வரையும் தற்காப்புரிமையை ஒருவர் பிரயோகிக்க முடியும்.


தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 96ன் பிரகாரம் ஆதனம் தொடர்பான குற்றங்களைப் பொறுத்தவரை குறித்த குற்றத்தை புரிந்தவருக்கு மரணத்தை அல்லது பெரிய தீங்கை ஏற்படுத்த வேண்டுமாயின் அக் குற்றம் பின்வரும் நான்கு குற்றப் பிரிவுகளுள் அடக்கப்படல் வேண்டும்.

1. கொள்ளை
2. இரவில் வீடுடைத்து அத்துமீறல்
3. மனிதவாழ்விடமாக அல்லது ஆதனமொன்றாக கொள்ளப்படும் கட்டிட மொ. [illegible] து வெடிபொருளினால் ஏற்படுத்தப்படும் சொத்தழிப்பு
4. தற்காப்புரிமையை அச் சந்தர்ப்பத்தில் பிரயோகிக்காமல் விட்டால் மரணமோ அல்லது கடும்காயமோ அல்லது ஏதாவது சொத்துக்களுக்கான பாரிய அனர்த்தம் ஏற்படும் என்ற நியாயமான பயம் காணப்படும் போது

ஆதனங்களுக்கெதிரான தற்காப்புரிமையானது தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 98ன் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது. ஆதனங்களுக்கெதிரான தற்காப்புரிமையானது அவ் ஆதனங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்ற நியாயமான பயம் அல்லது எதிர்பார்ப்பு இருக்கும் போது ஆரம்பிக்கப்படும் என்பதுடன் தற்காப்புரிமை நீடித்திருக்கும் காலம் பிரயோகத்திற்கான காலப்பரப்பு ஆகும். மரணத்தினை ஏற்படுத்தும் நியாயமான பயத்தினை ஏற்படுத்தும் தாக்குதலிற்கு எதிராக தற்காப்புரிமையானது பிரயோகிக்கப்படுகையில் அப்பாவியான ஆள் ஒருவருக்கு தீங்கு ஏற்படலை தவிர்க்க முடியாத நிலையில் பிரயோகிக்கப்பட்டிருப்பின் அதுவரை தற்காப்புரிமையின் எல்லை விரிவுபடுத்தப்படும் என தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 99 குறிப்பிடுகின்றது.

இவ்வாறு தற்காப்புரிமையின் பிரயோகம் குறிப்பிடப்பட்டாலும் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 92ன் படி சில மட்டுப்பாடுகளும் இத் தற்காப்புரிமையின் பிரயோகத்தில் காணப்படுகின்றது. அவையாவன

1. தற்காப்புரிமையானது பகிரங்க அலுவலர் ஒருவரால் உத்தியோக கடமை நிமித்தம் நன்நோக்கில் செய்யப்பட்ட அல்லது செய்ய எத்தனிக்கப்பட்ட செயல்கள் தொடர்பில் ஏற்புடைத்தாகாது. ஊதாரணமாக The King VS WannakuTissahamy என்ற வழக்கில் எதிரியானவர் கைது செய்ய வந்த பொலிஸாரைக் கண்டவுடன் தப்பிச்செல்ல முயற்சித்தார். பொலிஸார் சரணடையக் கூறி துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை குறித்த நபரும் பதிலுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் பொலிஸாருக்குகாயம்ஏற்பட்டது.இதன்போது குறித்த நபர் தற்காப்புரிமையானது பிரயோகத்தினை எதிர்வாதமாக முன்வைத்தபோதும் நீதிமன்றம் அதனை எதிர்வாதமாக கொள்ள முடியாது எனத் தீர்ப்பளித்தது.
2. குறித்த செயலானது பகிரங்க அலுவலர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அவரின் அறிவுறுத்தலின் கீழ் செய்யப்பட்டபோது அல்லது செய்ய எத்தனிக்கப்பட்டபோது தற்காப்புரிமையைப் பிரயோகிக்க முடியாது.
3. குறித்த தீங்கு ஏற்படுத்தப்படும் போது பகிரங்க அலுவலர் அல்லது அதிகாரிகளின் பாதுகாப்பை பெறக் கூடிய சந்தர்ப்பம் இருப்பின் தற்காப்புரிமையைப் பிரயோகிக்க முடியாது.





**ஒவ்வொரு மனிதனும் தனக்கு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள தற்காப் புரிமையை பிரயோகிக்கும் போது அது பிரயோகிக்கப்பட வேண்டிய சரியான காலப்பகுதி எது என்பதை அடிப்படை யாகக் கொண்டே குறித்த நபரின் குற்றப் பொறுப்பு தீர்மானிக்கப்படுகின்றது.**



# காலடித் தாமரை நாலடி நடந்தால்

கம்பனின் மகன் அம்பிகாபதி போல வர்ணிக்க முடியாது. பெண்ணின் பாதம் எவ்வளவு மென்மையானது என்று பலரும் வர்ணித்திருக்கிறார்கள். ஆனாலும் அம்பிகாபதி போல யாரும் வர்ணிக்கவில்லை. நாம் செய்த துரதிஷ்டம், அதிகார வர்க்கத்தால் இளம் வயதிலேயே கொல்லப்பட்டான். இருந்திருந்தால் கம்பனுக்கு நிகராக காவியம் படைத்திருப்பான்.

வள்ளுவர் வர்ணிக்கிறார்

அனிச்சப்பூ மிகவும் மென்மையனது. முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். அவ்வளவு மென்மை. "மோப்பக் குழையும் அனிச்சம்" என்று சொல்கிறார் வள்ளுவர்.

அன்னத்தின் தூவி என்பது, அன்னப் பறவையின் இறகு அல்ல. இறகின் அடிப்பகுதியில் பஞ்சு போல மிகமிக மென்மையாக உரோமம்போன்று இருப்பது.

அவள் பாதம் மிகவும் மென்மையானது. எந்த அளவுக்கு மென்மையானது தெரியுமா? அனிச்சப்பூ மீதோ, அன்னப்பறவையின் தூவி மீதோ அவள் அறியாமல் கால் வைத்துவிட்டால், அவை நெருஞ்சிமுள் போல குத்துமாம் அவளுக்கு. அந்த அளவுக்கு மென்மையான பாதங்கள்.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்

என்று சொல்கிறார் திருவள்ளுவர்.

சரி இளங்கோ அடிகள் என்ன சொல்கிறார்? கண்ணகியின் பாதம் பற்றி சொல்லும் போது

மண்மகள் அறிந்திலள் இவள்
வண்ணச் சீரடி

என்று சொல்கிறார். கண்ணகியின் பாதம் எப்படி இருக்கும் என்று மண்மகள் அறிந்ததில்லை என்று சொல்கிறார்.

இதற்கு இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம்.

செல்வச் செழிப்பாக வளர்ந்தவள் கண்ண்ணகி. அவள் பாதம் தரையில் பட்டதில்லை. அதனால் அவள் பாதத்தை மண்மகள் அறிந்திருக்கவில்லை.

தரையில் அடிவைத்து எடுத்தவுடனே, கண்ணகியின் பாதம் கொப்பளித்துவிடுகிறது. அதனால் அவள் பாதம் மண்ணில் படவில்லை. பாதத்தில் உள்ள கொப்புளங்கள்தான் மண்ணில் படுகின்றன. எனவே, கண்ணகியின் பாதத்தை மண்மகள் அறிந்திருக்கவில்லை.

அடடா என்ன கற்பனை.

இதையே அம்பிகாபதி வர்ணிக்கிறான் பாருங்கள்...

காதலி அமராவதியைப் பார்த்தவுடன் அம்பிகாபதிக்கு கவிதை ஊறெடுக்கிறது. நடந்து வரும் அவள் பாதத்தின் மென்மையைச் சொல்கிறான் . இதுவரை யாரும் இப்படிச் சொன்னதில்லை. அம்பிகாபதியைத் தாண்டி யாராலும் சொல்லவும் முடியவில்லை.

"இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க"

தரையில் பாதம் பதிக்கிறாள் அவள். பாதம் நோகுகிறது. அடுத்த அடி வைப்பதற்காக பாதத்தை எடுக்கிறாள், பாதம் கொப்பளித்துவிடுகிறது. அவ்வளவு மென்மையான பாதங்கள்.

அடடா... எப்படி யோசித்திருக்கிறான். காதல் அவனை காவுகொண்டுவிட்டதேஞ்

கவியரசர் கண்ணதாசனும் அவருடைய மாங்கனி குறுங்காவியத்தில் அழகாக வர்ணிப்பார்.

மேடையிலே நடனமாடுகிறாள் தலைவி. நடனம் முடிந்து பின் வாசல் வழியாக வீட்டுக்குப் புறப்படுகிறாள். அவள் அழகில் மயங்கிய தலைவன், அவளைச் சந்தித்துவிட வேண்டும் என்பதற்காக பின் வாசலுக்குப் போகிறான். அதற்குள் தலைவி போய்விடுகிறாள். எந்தப் பக்கம் போனாள் என்று தெரியவில்லை. அவளின் காலடிச் சுவட்டைத் தேடுகிறான். கிடைக்கவில்லை. ஏன் காலடிச் சுவடு தெரியவில்லை என்பதற்கு கவியரசர் காரணம் சொல்கிறார். கவிதையைப் படித்துப்பாருங்கள்...

சித்திரத்தாள் அடிச்சுவட்டைத் தேடிப் பார்த்தான்
தென்றல் வந்து போனதற்கு சுவடு ஏது?
கைத்திறத்தால் தரை தடவிப் பார்த்து மெல்ல... அவள்
கால்பட்ட இடத்தில் இளம் சூடு கண்டான்.

தென்றல் வந்து போனால், அது வந்துபோன சுவடு தெரியுமா என்ன? அவளும் தென்றலைப் போல மென்மையானவள். அதனால் அவள் போன காலடிச்சுவடு தெரியவில்லை. கீழே அமர்ந்து தரையைத் தடவிப் பார்க்கிறான். அவள் கால் பட்ட இடத்தில் இளம்சூடு இருப்பதைக் கண்டான் என்று சொல்கிறார் கவியரசர்.

ஆஹா..என்ன அருமையான நயம்.

---



# மாட்டிக்கொண்ட மத்திய அமைச்சர்

குழந்தைகளுக்குப்பெயர் சூட்டுவதில்ஒவ்வொருவரும் ஒரு முறையைக் கையாள்வார்கள்.

பொதுவாக ஆண் குழந்தைக்கு அப்பா வழி தாத்தா பெயரையும் பெண் குழந்தைக்கு அப்பா வழி பாட்டி பெயரையும் சூட்டும் வழக்கம் இந்தியாவில் இருந்து வந்தது. அம்மா வழி தாத்தா பாட்டி பெயரைச் சூட்டும் வழக்கம் பொதுவாக இல்லை. காரணம் நமது சமுதாயம் ஆணாதிக்க சமுதாயம் என்பதுதான்.

முனுசாமி, கருப்பாயி போன்ற தாத்தா பாட்டி பெயர்களை இப்போதெல்லாம் குழந்தைகள் விரும்புவதில்லை. அதனால் அந்த வழக்கம் மறைந்து வருகிறது.

கடவுள் பக்தி உள்ளவர்கள் சாமி பெயரை சூட்டுகின்றனர். இப்போதெல்லாம் சோதிடம் பார்த்து, எந்த எழுத்தில் பெயர் தொடங்க வேண்டும் என்று சோதிடர் சொல்கிறாரோ அதற்கேற்ப பெயர் சூட்டும் வழக்கம் அதிகரித்து வருகிறது.

குழந்தைகளுக்கு நல்ல தமிழில் பெயர் சூட்டுங்கள் என்று தமிழ் ஆர்வலர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பெயர் என்பது ஒரு இனத்தின் அடையாளமாக இருந்த காலம் போய்விட்டது.

சிலர் கொள்கை அடிப்படையில் அவர்களுக்குப் பிடித்த தலைவர்களின் பெயரைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். அரசியல் தலைவர்களை வைத்து பெயர் சூட்டுவது வழக்கில் உள்ளது.

ஒருவர் தீவிரமான நாத்திகர். தன் குழந்தைக்கு 'கடவுள் இல்லை' என்று பெயர் வைக்கப் போவதாகச் சொன்னார்.

'வேண்டாம் நாளை உங்கள் மகன் தினமும் உங்களுக்கு எதிராகப் பேசுவான்' என்றார் இன்னொருவர்.

'ஏன்'

'பள்ளியில் வருகைப் பதிவேடு எடுக்கும்போது, 'கடவுள் இல்லை' என்று ஆசிரியர் அழைப்பார். உங்கள் மகன் எழுந்து 'உள்ளேன் ஐயா' என்பானே' என்றார் அவர். நாத்திகர் திகைத்து விட்டார்.

அரசியலிலும் இப்படி ஒரு சுவாரசியம் நடந்தது.

திராவிட இயக்கம் தோன்றிய காலத்தில், அந்த இயக்கத்தைச் சேர்ந்த பலரும் நல்ல தமிழ்ப் பெயர் வைத்துக்கொள்ள வேண்டும் என்று, தங்கள் பெயரை மாற்றிக் கொண்டனர். அன்பழகன், அறிவழகன், மதியழகன் என பலர் பெயர் வைத்துக்கொண்டனர். ராமையா அன்பழகன் ஆனார். நாராயணசாமி நெஞ்செழியன் ஆனார். இதுபற்றி கருத்து கூறிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஓ.வி. அளகேசன், 'அன்பழகன்றான்... அறிவழகன்றான்... போற போக்கைப் பார்த்தா மயிரழகன்னு பேர் வச்சுப்பானோ போலிருக்கே' என்று கிண்டலடித்தார்.

இதற்கு பதில் சொன்ன அண்ணா, 'எங்கள் பெயர் அப்படியில்லை. உங்களுடைய பெயர்தான் அப்படி இருக்கிறது. உங்கள் பெயரின் பொருள் என்ன என்பதை கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்..உங்களுக்குப் புரியும்' என்றார். பொருள் தெரிந்ததும் அமைச்சர் கப்சிப் ஆகிவிட்டார்.

அளகம்+ஈசன், என்பதுதான் அளகேசன். ஆனது. அளகம் என்றால் தலைமுடி. சடாமுடியை உடையவன் ஈசன். சடாமுடிக்கடவுள் என்பதைத்தான் அளகேசன் என்று அழைக்கிறார்கள். இப்போது பலர் அழகேசன் என எழுதுகின்றனர். ஒருவிதத்தில் இது தவறில்லை. அழகிய ஈசன் எனப் பொருள் படும். ஆனலும் அளகேசன் என்பதுதான் அழகேசன் ஆகிவிட்டது.

---

# நரி... பரி... சரி...

1960களில் மாணவர்களாக இருந்த கா. காளிமுத்துவும் கவிஞர் நா. காமராசனும் மேடைகளில் போட்டிபோட்டுக்கொண்டு அருமையாகப் பேசுவார்கள். இருவரையும் இரட்டையர்கள் என்று சொல்வார்கள். நா. காமராசன் திரைத்துறைக்குப் போய்விட்டார். காளிமுத்து, தீவிர அரசியலில் இருந்தார்.

எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் காளிமுத்து அமைச்சராக இருந்தார். 1980 களின் தொடக்கத்தில். அதிமுக காங்கிரஸ் கூட்டணி. காங்கிரஸ் மீது கோபம் வந்தால், காளிமுத்துவை விட்டு பேசச் செய்வார் எம்ஜிஆர். அப்படி ஒரு முறை காங்கிரசை காளிமுத்து விமர்சித்தது இன்றளவும் பிரபலம். காளிமுத்து சொன்னது

சருகு மலராகாது
கருவாடு மீனாகாது
கறந்த பால் மடி புகாது
காங்கிரஸ் ஆட்சிக்கு வராது

எம்ஜிஆர் மறைவுக்குப் பிறகு திமுகவில் சேர்ந்தார் காளிமுத்து. 1991 சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக வேட்பாளராக கடலாடி தொகுதியில் போட்டியிட்டார். சென்னை துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டார் கருணாநிதி. கடலாடி தொகுதியில் காளிமுத்துவை ஆதரித்து பிரச்சாரம் செய்த கருணாநிதி,

'தம்பி காளிமுத்து
கடலாடி வா
காத்திருப்பேன் துறைமுகத்தில்'

என்றார். அலையில் அடித்துச் செல்லப்பட்டார் காளிமுத்து. ராஜீவ் கொலையை அடுத்து நடந்த அந்த தேர்தலில் திமுகவுக்கு பேரிடி. துறைமுகத்தில் கருணாநிதி மட்டும்தான் வென்றார். மற்ற எல்லா தொகுதியிலும் திமுக தோற்றது.

பின்னர் அதிமுகவில் சேர்ந்தார் காளிமுத்து.அப்போது நடந்த சுவாரசியத்தை பார்க்கும் முன், திருவிளையாடல் புராணம் கதை ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அரசியல் சுவாரசியத்தைப் புரிந்து ரசிக்க முடியும்.

திருவாசகம் எழுதிய மணிவாசகப் பெருமான், பாண்டிய மண்னனிடம் அமைச்சராக இருந்தார். குதிரை வாங்கி வரும்படி பணம் கொடுத்தனுப்பினான் மன்னன். சென்ற இடத்தில், அந்தப் பணத்தை கோயில் திருப்பணிக்கு செலவிட்டுவிட்டார் மாணிக்கவாசகர். மன்னனுக்கு என்ன பதில் சொல்வதென்று மனம் கலங்கி சிவனை வேண்டினார். சிவன் உடனே நரிகளை பரி(குதிரை) ஆக்கி மாணிக்க வாசகரிடம் கொடுத்தார். அவற்றைக் கொண்டுபோய் மன்னனிடம் ஒப்படைத்தார் மாணிக்கவாசகர். கொட்டடியில் அடைக்கப்பட்ட அந்த பரிகள்(குதிரைகள்) மறுநாள் காலையில் மீண்டும் நரியாகிவிட்டன்.

இதுதான் கதை. இப்ப விஷயத்துக்கு வருவோம்.

அதிமுகவில் இருந்த முன்னாள் அமைச்சர் காளிமுத்து, எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பிறகு திமுகவில் சேர்ந்தார். பிறகு, மதுரையில் ஜெயலலிதாவை சந்தித்து, அதிமுகவில் மீண்டும் சேர்ந்தார். இது பற்றி கருணாநிதியிடம் நிருபர்கள் கேட்டபோது,

'நரி பரியாவதும் பரி நரியாவதும் மதுரையில் இயல்புதானே' என்றார் .

கருணாநிதி இப்படிச் சொல்கிறாரே என்று காளிமுத்துவிடம் நிருபர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த அவர் 'நான் பரியானேனோ நரியானேனோ இப்போது சரியாகிவிட்டேன்' என்றார்.




# காதல் கலப்புத் திருமணமும், தோஷ அமைப்புகளும்

## ஜோதிட முரசு மிதுனம் செல்வம்

குரு நின்ற இடம் பாழ், சனி நின்ற இடம் விருத்தி, குரு பார்த்த இடம் விருத்தி, சனி பார்த்த இடம் பாழ் என்பது ஜோதிட சாஸ்திர விதியாகும். சனி 5ம் வீட்டில் இருந்தபடி களத்திர ஸ்தானமான 7ம் வீட்டையும், தன, குடும்ப, வாக்குஸ்தானமான 2ம் வீட்டையும் பார்ப்பதால் திருமண உறவில் சிக்கல், வெறுப்பு, கசப்பு, நெறி தவறிய வாழ்க்கை, விவாகரத்து, ஜீவனாம்ச வழக்கு, தன் வாயாலே கெடுவது, அற்ப சிநேகிதம் போன்ற பல்வேறு விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு இந்த 5ம் வீட்டில் இருக்கும் சனி காரணமாகின்றது. மேலும் 2, 7 ஆகிய வீடுகள் பாதிக்கப்பட்டு இருந்தால் நிலைமை இன்னும் மோசமாகிறது. இந்த அமைப்பு பல்வேறு ஜாதகங்களில் மிகச்சரியாக ஒத்துப் போகிறது. ஆகையால் இந்த சனி பார்வை உள்ள ஜாதகங்கள் காதல் கலப்புத் திருமணத்தில் ஈடுபடுவதற்கு அதிகப்படியான வாய்ப்புகள் உள்ளன.

### சூட்சுமமான விஷயங்கள்

நம் வாழ்க்கையில் நடைபெறுகின்ற சம்பவங்கள் எல்லாம் நம்முடைய முன்ஜென்ம கர்ம வினை காரணமாகவே நடைபெறுகின்றது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்த விஷயங்களை நமக்கு ஜோதிடக்கலை மிகவும் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆனால், ஜோதிட சுவடிகள் மூலம் நமக்கு கிடைக்க வேண்டிய பெரும்பாலான விஷய ஞானங்கள் நமக்கு கிடைக்கவில்லை. காரணம் நாம் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்தே தீரவேண்டும் என்பது தர்ம சாஸ்திர வழிமுறையாகும். இருந்தாலும் பெற்றோர் பார்த்து செய்கின்ற திருமணமாக இருந்தாலும், காதலித்து செய்துகொள்கின்ற திருமணமாக இருந்தாலும் வாழ்க்கை பிரச்னை என்பது ஒன்றுதான். இதில் கிரகங்கள் நம் மனதை மாற்றி ஆட்டுவிக்கின்றது என்பதில் ஐயமில்லை. பள்ளிபாடக்கணக்கில் விடைகாணுவதற்கு பல சூத்திர முறைகள் உள்ளதுபோல், வாழ்க்கை பாடக்கணக்கில் வெற்றி பெறுவதற்கு ஜோதிட சாஸ்திரம் பல்வேறு சூத்திர முறைகளை நமக்கு தந்துள்ளது. அதை சரியான சாஸ்திர, அனுபவ ஞானம் உள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து பெரிய சிக்கல்களில் இருந்து விடுபடலாம்.

ஆண், பெண் ஜாதகத்தில் லக்னத்திற்கு எட்டாம் இடம் மிக முக்கியமான இடமாகும். இந்த இடம் ஆயுள், மாங்கல்யம் என்ற இரண்டு முக்கிய அம்சங்களை பற்றி அறிந்துகொள்ளும் இடமாகும். இந்த எட்டாம் இடத்தின் அதிபதி எந்த நட்சத்திரத்தில் இருக்கிறாரோ, அந்த நட்சத்திர அதிபதி எந்தக் கிரகமோ அந்த கிரகத்தினுடைய நட்சத்திரத்தில் பிறந்தவர்களை திருமணம் செய்யாமல் தவிர்த்து விடுவது நல்லது. உதாரணமாக ஒருவர் கன்னி லக்னத்தில் பிறந்தால் அவருக்கு எட்டாம் அதிபதியாக செவ்வாய் அமைவார். இந்த செவ்வாய் மிதுன ராசி திருவாதிரை நட்சத்திரத்தில் இருப்பதாக எடுத்துக்கொண்டால், இந்த

### திருவாதிரை

நட்சத்திரம் ராகுவின் நட்சத்திரமாகும். அதன்படி இந்த ராகுவின் நட்சத்திரங்களான திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களை திருமணம் செய்யாமல் தவிர்ப்பது நன்மை தரும். இந்த விஷயம் பல்வேறு ஜோதிட சூத்திரங்களில் ஒன்றாகும். இந்த அமைப்பு அனுபவ பூர்வமாக பல்வேறு ஜாதகங்களில் பொருந்தி வருகின்றது.

### கிரக தோஷ அனுபவ ஜாதகங்கள்

**ஜாதகம் (1):** கன்னி லக்னம், ஏழில் தனித்த குரு, எட்டில் சந்திரன்கேது, பதினொன்றில் சனி. திருமண தோஷ அமைப்பு உள்ளதால் காதல் வலையில் சிக்கி, அதன்பின் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் புரிந்து பல துயரங்களை சந்திகிறார்கள்.

**ஜாதகம் (2):** தனுசு லக்னம், எட்டாம் அதிபதி சந்திரன் ஏழில். ஏழுக்குடைய புதன் நீச்சம். மூன்றில் சனி இருந்து ஐந்தாம் வீட்டைப் பார்ப்பது இந்த அமைப்பு வீட்டை விட்டுச்சென்று காதல் திருமணம் செய்ய வைத்தது.

**ஜாதகம் (3):** ரிஷப லக்னம். ஆறு, ஏழுக்குடைய சுக்கிரன், செவ்வாய் குடும்பஸ்தானத்தில் இரண்டாம் அதிபதி புதன்கேது சாரம் பெற்று கேதுவுடன் இணைந்து இருப்பது. மேலும் நவாம்சத்தில் சுக்கிரனுடன் கேது சம்பந்தம். இந்த அமைப்பால் காதலித்து, திருமணம் செய்து, விவாகரத்து ஆகிவிட்டது.

**ஜாதகம் (4):** மீன லக்னம் ஆறாம் அதிபதி சூரியன் ஏழில், ஏழாம் அதிபதி புதன் எட்டில். சனி பதினொன்றில் இருந்து ஐந்தாம் வீட்டைப் பார்ப்பது. மேலும் சில பாதக அமைப்புகளால் காதல் திருமணம் செய்து வழக்கில் பிரிந்து வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதைப்போன்ற பல்வேறு ஜாதகங்களை அனுபவ பூர்வமாக பார்க்கின்றபோது கிரக தோஷ அமைப்புகள் அதனதன் வேலையை செய்வது தெளிவாகத் தெரிகிறது. ஆகையால் பெற்றோர்கள் அதற்குரிய பருவ வயது காலகட்டத்தில் ஜாதக கட்ட அமைப்புகளை தெரிந்துகொண்டு அதற்குரிய கிரக சாந்தி பரிகாரங்களை செய்வதுடன் பிள்ளைகளின் செயல்பாடுகள், நடைமுறைகளில் கவனம் செலுத்தி அவர்களின் நடவடிக்கைகளை தெரிந்து அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிக்கலாம்.

# இந்தவார ராசி பலன்கள்

## 03.09.2016 – 09.09.2016



**மேஷம்:** ராசிநாதன் செவ்வாய் நீச வீட்டில் இருந்து பெயர்ச்சி அடைவதால் மனக்குழப்பம் நீங்கும். உத்யோகத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சகோதர உறவுகளால் அனுகூலம் உண்டு. 4ல் ராகுவுடன் சுக்கிரன் சேர்வதால் நிறை, குறைகள் உண்டு. பழைய வண்டியை மாற்றி புது வண்டி வாங்குவீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வார மத்தியில் வரும். தாயார் உடல்நலனில் கவனம் தேவை. வயிறு சம்பந்தமான உபாதைகள் வர வாய்ப்புள்ளது. நண்பர்களிடம் இருந்து சற்று விலகி இருப்பது நலம் தரும்.

**ரிஷபம்:** சுகஸ்தானமான நான்காம் வீட்டில் கூட்டுக்கிரகச் சேர்க்கை இருப்பதால் அலைச்சல், செலவுகள், பயணங்கள் இருக்கும். அலுவலக வேலை காரணமாக வெளியூரில் தங்க வேண்டி வரும். வெளிநாட்டில் வேலை பார்ப்பவர்கள் சொந்த ஊர் திரும்புவார்கள். சுக்கிரன், ராகு சேர்ந்து இருப்பதால் குடும்பத்தில் வீண் விவாதங்கள் வேண்டாம். கேது அமைப்பு காரணமாக புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு சென்று வருவீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் அமையும். பெண்கள் சமையலறையில் கவனமாக இருப்பது அவசியம். வியாபாரம் ஏற்ற இறக்கம் இருந்தாலும் பணவரவுகள் சாதகமாக இருக்கும்.

**மிதுனம்:** சூரியன், செவ்வாய், புதன் சேர்ந்து 3ல் இருப்பதால் திட சித்தமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். வழக்கு சம்பந்தமாக சாதகமான செய்தி வரும். நெருங்கிய உறவுகள் மூலம் பணப்பற்றாக்குறை தீரும். கன்னிப் பெண்கள் அனுசரணையாகப் போவது நல்லது. உத்யோகத்தில் உயர் அதிகாரிகளால் சில மனவருத்தங்கள் வரும். வாக்கு ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன் இருப்பதால் அவசிய, அநாவசிய செலவுகள் ஏற்படும். விலை உயர்ந்த மின்சாதனங்கள் வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சிகளுக்கு தேதியை முடிவு செய்வீர்கள். வியாபாரம் சீராக இருக்கும். வேலையாட்களால் மன உளைச்சல் வந்து நீங்கும்.

**கடகம்:** உங்கள் எண்ணங்கள், முயற்சிகள் பலிதமாகும் நேரம் செவ்வாய். சூரியன் தன ஸ்தானத்தில் இருப்பதால் வராது என்று நினைத்த பணம் வசூலாகும். உத்யோகத்தில் உங்கள் கை ஓங்கும். பதவி உயர்வு எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல செய்தி உண்டு. சொத்து சம்பந்தமாக ஒப்பந்தங்கள் போடுவீர்கள். சுக்கிரன் ராசியில் இருப்பதால் இல்லறம் இனிக்கும். பெண்கள் மூலம் அனுகூலம் உண்டு. கேது 7ல் இருப்பதால் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். அடமானத்தில் இருக்கும் நகைகளை மீட்பீர்கள். தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.

**சிம்மம்:** சூரியன் அருள் காரணமாக உற்சாகமாக செயல்படுவீர்கள். கடல் கடந்து செல்வதற்கு விசா கிடைக்கும். கொடுக்கல், வாங்கல் சாதகமாக நடைபெறும் செவ்வாய் ராசியில் இருப்பதால் பேச்சில் கவனம் தேவை. நண்பர்களுடன் ஊர் சுற்றுவதை தவிர்ப்பது நல்லது. வழக்கு சம்பந்தமாக இருந்த தடைகள் நீங்கும். வசதியான பெரிய வீட்டிற்கு குடிபோகும் நேரம் வந்துள்ளது. கர்ப்பமாக இருப்பவர்கள் கவனமாக இருப்பது அவசியம். சனி அமைப்பு காரணமாக அலைச்சல், செலவுகள் இருக்கும். பயண ஏற்பாடுகளில் மாற்றம் வரலாம். மாமியார், நாத்தனார் உறவுகளிடம் அனுசரணையாகப் போகவும்.

**கன்னி:** சாதக, பாதகங்கள், நிறை, குறைகள் உள்ள வாரம். சூரியன் 12ல் ஆட்சி பெறுவதால் அவசிய, அநாவசிய செலவுகள் இருக்கும். ஒரு வேலையை முடிக்க பல முறை அலைய வேண்டி இருக்கும். சுக்கிரனின் பார்வை சிறப்பாக இருப்பதால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. மனைவியிடம் விவாதம் வேண்டாம். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சியும், உதவிகளும் கிடைக்கும். காலியாக இருக்கும் இடத்திற்கு புதிய வாடகைதாரர்கள் வருவார்கள். செல்போன், லேப்டாப் போன்ற சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரம் சீராக இருக்கும். பணப்புழக்கம் உண்டு. புதிய வாடிக்கையாளர்கள் வருவார்கள்.

**துலாம்:** அனுகூலம், ஆதாயம், வரவு, செலவு, அலைச்சல் என கலவையான பலன்கள் இருக்கும். சுக்கிரன் ராகுவுடன் இருப்பதால் எதிர்மறை எண்ணங்கள் தோன்றும். முக்கிய முடிவுகளை குடும்பத்தாருடன் கலந்து பேசி எடுக்கவும். கேது 4ல் இருப்பதால் பயணங்களால், வேளைக்கு சாப்பிட முடியாத நிலை இருக்கும். சூரியன், செவ்வாய் பார்வை காரணமாக பண வரவு உண்டு. அலுவலகத்தில் இருந்து பதவி உயர்வு சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். திங்கட்கிழமை முக்கிய சந்திப்புகள் நிகழும். வியாபாரத்தில் பணம் புரளும். கிளைகள் தொடங்குவது பற்றி முடிவு செய்வீர்கள்.

**விருச்சிகம்:** பாக்யஸ்தானாதிபதி சந்திரன் சஞ்சாரம் காரணமாக ஏற்ற, இறக்கம் உண்டு. மனதில் இனம்புரியாத கவலைகள் வந்து போகும். தந்தை மூலம் மருத்துவ செலவுகள் வரலாம். 10ல் சூரியன், செவ்வாய் இருப்பதால் அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் நல்ல மாற்றங்கள் வரும். உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். நிலம் வாங்க, விற்க எடுத்த முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் வேலை விஷயமாக முக்கிய தகவல் வரும். பெண்கள் கணவரிடம் அனுசரணையாகப் போவது நலம் தரும். அவசியத் தேவைக்கான பணப்பற்றாக்குறை நீங்கும்.

**தனுசு:** பஞ்சம, பாக்கிய ஸ்தான பலம் காரணமாக எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கொடுக்கல், வாங்கலில் நின்று போன பணம் வசூலாகும். அவசரத் தேவைக்காக வாங்கிய கடனை அடைப்பீர்கள். சூரியன் சாதகமாக இருப்பதால் பூர்வீக சொத்து சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். புதுமணத்தம்பதிகள் குழந்தை பாக்கியத்தை எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு தோழிகளால் சில சங்கடங்கள் வந்து நீங்கும். கேது 2ல் இருப்பதால் கண் சம்பந்தமான குறைபாடுகள் வந்து நீங்கும். வாய் மூலம் பேசி தொழில் செய்பவர்கள் நிதானத்துடன் பேசுவது நல்லது.

**மகரம்:** குருவின் பார்வை தொடர்ந்து சாதகமாக இருப்பதால் எதையும் சாதுர்யமாக எதிர் கொள்வீர்கள். இருந்தாலும் தன, வாக்கு ஸ்தானத்தை சூரியன், செவ்வாய், புதன் சேர்ந்து பார்ப்பதால் பேச்சில் கவனம் தேவை. சொந்த பந்தங்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாதீர்கள். சுக்கிரன் ராசியை பார்ப்பதால் பொன், பொருள் சேர்க்கை உண்டு. சொத்து விஷயமாக எல்லாம் சாதகமாக கூடி வரும். கண், தொண்டை சம்பந்தமான உபாதைகள் வரலாம். ஆன்மிக சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

**கும்பம்:** உங்கள் ராசியை முக்கூட்டுக் கிரகங்கள் பார்ப்பதால் சில தடுமாற்றங்கள் வந்து நீங்கும். சூரியன் 7ல் பலமாக இருப்பதால் காரிய வெற்றி உண்டு. பூர்வீக சொத்து சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். குரு பார்வை காரணமாக சுப விஷயத்திற்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். சுக்கிரன், ராகு சேர்க்கை காரணமாக தாயாருடன் அனுசரணையாகப் போகவும். திடீர் பயணங்களுக்கு வாய்ப்புள்ளது. நண்பர்களுடன் அதிக நெருக்கம் வேண்டாம். வியாபாரம் சீராக இருக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். வங்கியில் இருந்து உதவி கிடைக்கும்.

**மீனம்:** பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு சேர்க்கை காரணமாக எதையாவது சிந்தித்துக் கொண்டே இருப்பீர்கள். கணவன், மனைவி இடையே சில மனவருத்தங்கள் வந்து நீங்கும். பேரன், பேத்திகள் மூலம் செலவுகள் இருக்கும். 6ல் சூரியன் ஆட்சி பெறுவதால் கொடுக்கல், வாங்கல் சீராக நடைபெறும். உத்யோகத்தில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். கேது 11ல் இருப்பதால் கோயில், குளம் என்று சென்று வருவீர்கள். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். வியாபாரம் செழிப்படையும். கடன் சுமைகள் குறையும். பயணத்தால் லாபம் உண்டு.

# தாய்லாந்து உளவு அமைப்புக்களின் மூலம் ஆயுதம் வாங்கிய புலிகள்!



இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 45

பீஷ்மர்

பாதிரியார் ஜெகத் கஸ்பார் ஈழவிடுதலை அனுதாபியாக விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு அறிமுகமானவர். இந்தியாவின் பல்வேறு அரசியல், வர்த்தக புள்ளிகளுடன் ஏற்பட்ட தொடர்பை ஆயுத வியாபாரிகள் வரை விஸ்தரித்திருந்தார். இந்த தொடர்பை புலிகளும் பயன்படுத்த விரும்பினர்.

தாய்லாந்தில் தங்கியிருந்த குமரன் பத்மநாதனை சந்தித்து, அவர்களின் அணியில் ஒரு ஆயுதகொள்வனவாளராக கஸ்பார் பணியை ஆரம்பித்தார். தனது தொடர்புகளின் ஊடாக ஒரு தொகை ஆயுதங்களை வாங்கலாமென கே.பிக்கு நம்பிக்கையூட்டினார். இது நடந்தது 1994ஆம் ஆண்டு.

5மில்லியன் இலங்கை பணம் கஸ்பாருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு ஆயுதம் கிடைக்கவில்லை. பணத்தை வாங்கியவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என கஸ்பார் காரணம் சொன்னார். ஆனால் கேபி அதை நம்பவில்லை.கஸ்பார் பணத்தை விளையாடிவிட்டார் என நினைத்தார்கள். அத்துடன் கஸ்பாருடனான அனைத்து தொடர்புகளையும் புலிகளின் ஆயுதக் கொள்வனவு பிரிவு துண்டித்துவிட்டது. அதன்பின்னர் கஸ்பார் புலிகளிற்கு ஆயுதம் வாங்கவில்லை. ஆனால் வெரித்தாஸ்தமிழ்பணியின் மூலம் அவர் புலிகளின் அரசியல்துறையுடன் தொடர்பையேற்படுத்தினார். புலிகளின் ஒரு அணி கஸ்பாரை நம்பிக்கையற்ற மனிதனாக கருதி தூரவிலக்கி வைத்திருக்க, இன்னொரு அணி நம்பிக்கையானவராக கருதி தொடர்பிலிருந்தது. இறுதியுத்த சமயத்தில் அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த பா.நடேசன் சரணடைவு தொடர்பாக கஸ்பாருடனும் பேசியிருந்தார்.

இத்துடன் கஸ்பாரின் கதையையும் முடித்து கொள்ளலாம். ஆயுத விற்பனையுலகின் ஏமாற்றுத்தனங்களை குறிப்பிட உதாரணமாக சொன்ன இரண்டு சம்பவங்களையும் முடித்துகொள்கிறேன். இனி புலிகளின் ஆயுத கொள்வனவு, கடத்தல் உலகத்திற்குள் நுழைவோம்!

புலிகளின் ஆயுதக்கொள்வனவாளர் குமரன் பத்மநாதன் தென்கிழக்காசிய நாடுகளை மையமாக வைத்துதான் செயற்பட்டார். பல்வேறு பெயர்களில், பல்வேறு கடவுச்சீட்டுக்களில் உலாவினார். அவர் தென்கிழக்காசிய நாடுகளை தனது செயற்பாட்டு மையமாக தேர்ந்தெடுக்க காரணம் அங்கு அரச, பாதுகாப்பு துறைகளில் நிலவிய ஊழல் மற்றும் இந்தப்பிராந்தியத்தில் கொடிகட்டி பறந்த ஆயுத விற்பனை. இந்த நாடுகளில் பணம் தான் எல்லாம். காசிருந்தால் அரசின் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை எதையும் செய்யலாம். ஆகவே எந்த சிரமமுமில்லாமல் இயங்கலாமென கே.பி நினைத்தார்.

இதற்குள் வெளியில் தெரியாத இன்னும் இரண்டு விடயங்களை சொல்ல வேண்டும். தாய்லாந்தில் கே.பி தங்கியிருந்ததற்கு பிரதான காரணம் அங்குள்ள மூன்று முக்கிய புலனாய்வு அமைப்புக்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருந்தது. அந்த புலனாய்வு அமைப்பின் முக்கியஸ்தர்கள் பலரை கே.பி கைக்குள் வைத்திருந்தார். தேவையான சமயத்தில் அவர்களிற்கு பணத்தை வீசியெறிந்து இதை சாதித்தார்.

உங்களிற்கு ஒரு பழைய சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறேன். 2007 செப்ரெம்பரில் இலங்கை புலனாய்வுத் துறையினூடாக கசிந்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இலங்கையிலுள்ள ஊடகங்கள் ஒருசெய்தி வெளியிட்டிருந்தன. கே.பி தாய்லாந்தில் கைதாகினார், அமெரிக்காவின் சிஐஏ உளவு ஏஜெண்ட் அதிகாரிகள் விசாரணை செய்தார்கள் என. ஆனால் பின்னர் அதை தாய்லாந்து பொலிசார் மறுத்திருந்தனர். அப்படியொரு சம்பவமே நடக்கவில்லையென்றனர்.

உண்மையில் அப்பொழுது கே.பி தாய்லாந்தில் கைதாகியிருந்தார். சிஐஏயின் இரகசிய திட்டமொன்றின்படி அவர் தாய்லாந்தில் உளவுஅமைப்பினரால் கைதாகினார். இந்த திட்டத்தின் தகவல் பரிமாற்றம் இலங்கை உளவுஅமைப்புக்களிற்கும் கிடைத்திருக்க வேண்டும். அப்பொழுது கே.பியின் நடமாட்டங்களை அறிய இலங்கை உளவுஅமைப்புக்கள் பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தனர். அமெரிக்க ஊடாக அந்த தகவல் இலங்கைக்கு கிடைத்திருக்க வேண்டும். கே.பி தொடர்பான மாறுபட்ட தகவல் ஒன்றை தாய்லாந்து விமானநிலைய அதிகாரிகளிற்கு சிஐஏ பரிமாறி கே.பியை கைதுசெய்ய வைத்திருக்க வேண்டும். ஆனால் வழக்கம்போல கே.பி உளவு அமைப்புக்களின் முக்கிய புள்ளிகளை கவனித்து வெளியில் வந்துவிட்டார். இதன் பின்னர்தான் கே.பியை தாய்லாந்தில் வைத்து ஒன்றும்செய்ய முடியாதென இலங்கை உணர்ந்துகொண்டது.

கே.பியை தாய்லாந்தை விட்டு வெளியேற வைத்ததில் சிஐஏவின் பங்கு முக்கியமானது. அந்த நாட்டு உளவுஅமைப்புக்களிற்கும், அரசுக்கும் நெருக்கடி கொடுத்து கே.பியை அந்த நாட்டைவிட்டு வெளியேற வைத்த பின்னர்தான் அவரை கைது செய்ய முடிந்தது.

தாய்லாந்தில் கே.பி ஆயுதம் கொள்வனவு செய்த உத்தி எல்லோரையும் மலைக்கவைப்பது. ஏதாவதொரு நாட்டில் ஆயுதம் வாங்க வேண்டுமெனில், தாய்லாந்தின் உளவுஅமைப்பொன்றின் சார்பில் கேள்விமனு கோரப்படும். உண்மையில் தாய்லாந்தின் உளவுஅமைப்பிற்கு இந்த ஆயுதம் வராது. உளவுஅமைப்பின் புள்ளிகள் சிலரை வைத்து கே.பி ஆடிய விளையாட்டு அது.

கள்ளச்சந்தைகளிற்கு வெளியில் ஆயுதங்களை வாங்குவதென்றால் ஏகப்பட்ட நெருக்கடிகள் இருக்கும். அங்கீகரிக்கப்பட்ட நாடுகள்தான் வாங்கலாம். ஆயுதம் வாங்கும் நாடு விற்கும் நாட்டின் நட்பு நாட்டுக்கு எதிரானதா என்பதையும் பார்ப்பார்கள். இயக்கங்கள் இப்படியான இடங்களில் ஆயுதம் வாங்குவதை நினைத்தும் பார்க்க முடியாது. இதை சமாளிக்கவே கே.பி தாய்லாந்து உளவு அமைப்புக்களை பாவித்தார். உளவு அமைப்புக்கள் அங்கீரிக்கப்பட்ட அரசின் அங்கத்துவமுள்ளவை. ஆகவே அவற்றிற்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில் நாடுகளிற்கு பிரச்சனையில்லை. இந்த வழியில் கொள்வனவு செய்யப்பட்ட அனேக ஆயுதங்களே புலிகளிற்கு வந்து சேர்ந்தது.

இதைவிட இன்னொரு சம்பவமும் புலிகளிற்கு வாய்ப்பாகியது. சோவியத் யூனியன் உடைந்தபோது பிரிந்து சென்ற நாடுகளில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் அந்தந்த நாடுகளிடம் சென்றது. சோவியத்தின் அனேக ஆயுத தொழிற்சாலைகள் உக்ரேனிலேயே இருந்தன. இப்படி உக்ரேனில் ஆயுதங்கள் இருந்தன. ஆயுத தொழிற்சாலைகளும் இருந்தன. சோவியத்தின் பிரிவின் பின்னர் உக்ரேனியிலிருந்த ஆயுதத்தொழிற்சாலைகளை உக்ரேனிய இராணுவஅதிகாரிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அவர்கள்தான் அதன் உரிமையாளர்கள். பணத்திற்காக அவர்கள் ஆயுத உற்பத்தியில் ஈடுபட தொடங்கினார்கள். இப்படி உக்ரேனிலிருந்தும் பெருமளவு ஆயுதங்கள் புலிகளிற்கு வந்து சேர்ந்தது.

ஒருமுறை 1996இல் முல்லைத்தீவு மீதான ஓயாத அலைகள் 1 நடவடிக்கை முடிந்ததும் உக்ரேனிலிருந்து புலிகள் தமது அமைப்பிற்காக ஏகே துப்பாக்கிகள் தயாரித்து இறக்குமதி செய்தார்கள். black ak என்பது துப்பாக்கியின் பெயர். அந்த துப்பாக்கிகளிற்கு தொடர் இலக்கமும் இடப்படவில்லை. (தொடரும்)

**கே.பியின் நடமாட்டங்களை அறிய இலங்கை உளவுஅமைப்புக்கள் பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தனர். அமெரிக்க ஊடாக அந்த தகவல் இலங்கைக்கு கிடைத்திருக்க வேண்டும். கே.பி தொடர்பான மாறுபட்ட தகவல் ஒன்றை தாய்லாந்து விமானநிலைய அதிகாரிகளிற்கு சிஐஏ பரிமாறி கே.பியை கைதுசெய்ய வைத்திருக்க வேண்டும்.**



குமரன் பத்மநாதன்



கடல்மார்க்கமாக புலிகள் இறக்கிய 14.5mm கனோன்...

தாய்லாந்தில் முக்கியமான நான்கு உளவு பிரிவுகள் உள்ளன. தேசிய புலனாய்வு நிறுவனம், விசேட புலனாய்வு திணைக்களம், உள்ளக பாதுகாப்பு நடவடிக்கை பணியகம், குற்ற தடுப்பு பிரிவு என்பவையே அவை. இவற்றில் மிக முக்கியமான பதவிகளில் இருந்தவர்களை கே.பி கைக்குள் வைத்திருந்தார்.

# வாஸ்து முறையில் வீடு



வீட்டின் நுழைவாயில் சுவற்றில் எதுவுமே இல்லாமல் இருக்க கூடாது. அது தனிமையை உணர செய்யும். ஏதேனும் ஒரு சிலை அல்லது விநாயகர் படத்தை மாட்டி வைக்கலாம்.

உங்களது வீடு அல்லது கட்டிடம் தவறான திசையில் கட்டப்பட்டிருந்தால், வீட்டில் பஞ்சமுகி அனுமான் புகைப்படத்தை வைக்கலாம்

வட கிழக்கு திசையை நோக்கி தியானம் செய்வது சிறந்தது. தெய்வீக எண்ணங்கள் மேம்படும்.

நல்ல பார்வை மற்றும் திட்டமிட்டு செயல்படும் திறன் மேம்பட, நீளமான சாலை இருப்பது போன்ற புகைப்படத்தை வடமேற்கு திசையில் வைக்கலாம்.

குடும்ப புகைப்படங்களை மஞ்சள் அல்லது தங்க நிற பிரேம் போட்டு தென் மேற்கு திசையில் வைக்கலாம். இது ஆரோக்கியமான உறவுகள் நீடிக்க உதவும்.

சூரியன் உதயமாவது போன்று உள்ள புகைப்படம் அல்லது பெயிண்டிங்கை கிழக்கு பக்கமாக வைத்தால், சமூகத்துடன் ஆன உறவுகள் மேம்படும்.

குழந்தைகள் அமர்ந்து படிக்கும் மேசையை கிழக்கு பார்த்தது போல வைப்பதால், குழந்தைகளின் கல்வியில் வளர்ச்சி அதிகரிக்கும்.

வீட்டில் உள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்களின் எண்ணிக்கை இரட்டைப்படை எண்களில் இருக்க வேண்டும்.

குதிரை ஓடுவது போன்ற புகைப்படத்தை தெற்கு பக்கமாக வைப்பது வீட்டில் செல்வம் மற்றும் மகிழ்ச்சியை தக்க வைக்க உதவும். கணவன் மனைவி இருவரும் ஒரே மெத்தையை தான் பயன்படுத்த வேண்டும். மனைவி கணவனுக்கு இடதுபுறமாக தான் படுத்து உறங்க வேண்டும்.

தேவையில்லாத பொருட்களை வீட்டில் வைத்திருக்க கூடாது. முக்கியமாக கட்டிலின் அடிப்பகுதியில் தேவையற்ற கனமான பொருட்களை போட்டு வைக்க கூடாது. இது பழைய தேவையற்ற நினைவுகளை ஞாபகப்படுத்தும். படுக்கை அறை இருள் சூழ்ந்திருக்க கூடாது. படுக்கை அறைக்கு எப்போதுமே லைட்டான வண்ணங்களில் தான் பெயிண்ட் பூச வேண்டும். லைட் கலர்கள் மன நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தரும்.

படுக்கை அறையில் மெழுகுவர்த்தி மற்றும் இயற்கை தாவரங்களை வைப்பதன் மூலம் எதிர்மறையான சிந்தனைகளில் இருந்து விடுபட முடியும். சமையலறை வீட்டின் முக்கியமான பகுதியாகும். இது உறவுகளை குறிக்கிறது. கேஸ் மற்றும் பாத்திரம் கழுவும் சிங்கிற்கும் இடையே போதுமான அளவு இடைவெளி விட வேண்டியது அவசியம். படுக்கை அறை தென்மேற்காக இருந்தால் உறவு மேம்படும். மகிழ்ச்சி பொங்கும்.

மீன் தொட்டியை உங்களது வீட்டின் வட கிழக்கு திசையில் வைத்தால், எதிர்மறை எண்ணங்கள் எல்லாம் விலகும்.

பசுமையான செடிகளை கிழக்கு பக்கம் பார்த்து வைப்பதால், உறவுகள் ஆரோக்கியமாக இருக்கும்.

# கருப்பையை இயற்கை முறையில் சுத்தம் செய்வது எப்படி?

கர்ப்ப காலத்தில் உள்ள பெண்கள் சிலருக்கு, கருமுட்டை கோளாறு காரணமாக சில நேரத்தில் தானாகவே கரு கலைந்து கருச்சிதைவு ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் போது, கருசிதைவிற்கு பின் நமது கருப்பையை சுத்தம் செய்வது மிகவும் அவசியமாகும். எனவே கருச்சிதைவு ஏற்பட்ட பின் இயற்கை முறையில் கருப்பையை சுத்தம் செய்வதற்கு சூப்பரான டிப்ஸ் இதோ!

கருச்சிதைவு ஏற்பட்ட கருப்பையை சுத்தம் செய்வது எப்படி?

பிரண்டை மற்றும் குறிஞ்சா வேரை சம அளவு எடுத்து அதை நன்றாக அரைத்து, வயிற்றின் மீது தடவி வந்தால், வயிற்றில் இறந்த நிலையில் இருக்கும் சிசு வெளியில் வந்து விடும்.

கறிவேப்பிலை, முருங்கை இலை, வேப்பிலை மற்றும் கடுக்காய் ஆகிய அனைத்தையும் சமஅளவு எடுத்து, அதனுடன் 1 லிட்டர் தண்ணீர் சேர்த்து, அதை நன்றாக காய்ச்சி, குடித்து வர வேண்டும்.

இவ்வாறு செய்து வந்தால், நமது வயிற்றில் உள்ள கிருமிகள், அழுக்குகள் அனைத்தும் அழிக்கப்பட்டு, கர்ப்பப்பை சுத்தமடையும்.



# அக்குள் பகுதி அழுக்குகளை அகற்ற!

அடிக்கடி உடுத்துவதால் உடைகள் பழையது போல ஆகிவிடும். வியர்வை தொல்லையால் அக்குள் மற்றும் கொலர் பகுதிகளில் நீக்க முடியாத அழுக்கு சேர்ந்துவிடும். இதை போக்க முடியாமல் பலர் தவிர்ப்பார்கள். அதற்கெல்லாம் ஒரே தீர்வு தான் இந்த வெள்ளை வினிகர் முறை.

கறைப்படிந்த உங்கள் சட்டையை இதமான சூட்டில் இருக்கும் நீரில் ஊற வையுங்கள். அதில் அரை கிளாஸ் வெள்ளை வினிகரை சேர்த்துக் கொள்ளுங்கள். இதை ஒரு இரவு முழுக்க ஊற வைக்க வேண்டும். காலையில் எழுந்ததும், முதல் வேலையாக, எப்போதும் நீங்கள் துவைக்கும் முறையில் துவைத்துவிடுங்கள். வெள்ளை வினிகர், கறையை போக்கி உடைகளுக்கு மிருதுவான தன்மை அளிக்கும். முக்கியமாக அக்குள் பகுதி, கொலர் பகுதிகளில் படிந்திருக்கும் வேர்வை அழுக்கை போக்க இந்த வெள்ளை வினிகர் மிகையாக உதவும்.

வோஷிங் மெஷினில் துவைக்கும் போது டிடர்ஜென்ட் உடன் அரை கிளாஸ் வினிகரும் சேர்த்துக்கொள்ளலாம். மெஷினில் துவைக்கும் போது துணிகளுக்கு மென்மையான தன்மை அளிப்பதுடன், மெஷினில் டிட்டர்ஜென்ட் தங்காமல் செய்கிறது.



# ஈரமான கூந்தலை உதிராமல் எப்படி பராமரிப்பது?

கூந்தலைப் பராமரிக்க பெண்கள் படும்பாடு. ரொம்பவே கஷ்டமான விஷயம் தான். அதிலும் பார்ட்டி, கொண்டாட்டங்கள் என்று வெளியில் கிளம்பும்போது, அவசர அவசரமாக தலைக்குக் குளித்து, அதைக் காயவைத்து ஹெயார் ஸ்டைல் செய்து கொண்டு கிளம்புவதற்குள் அவர்களும் ஒருவழியாகி, உடனிருக்கும் நம்மையும் ஒருவழியாக்கிவிடுவார்கள்.

இதுபோன்று அவசரமாகக் கிளம்பும்போது, எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்று தெரியாமலே, எப்படியாவது கிளம்பினால் போதும் என்று நினைத்துவிடுகிறோம். தலையில் இருக்கும் முடி உதிரும்போது தான், செய்த தவறு நினைவுக்கு வரும்.

இதுபோன்ற சிரமமான நேரங்களில் செய்யும் தவறுகளில் இருந்து, தலைமுடி சேதமடையாமல் எப்படி காப்பது? அதற்கும் சில வழிமுறைகள் உண்டு. அவற்றைப் பின்பற்றினால் போதும். எளிமையாக தலைமுடி சேதம் ஆகாமல் தப்பித்துவிட முடியும்.

குளித்து முடித்தபின்பு தான் தலைமுடியைப் பற்றிய கவலையே நமக்கு வருகிறது. ஆனால் குளிக்கும் போதே கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டும். ஷாம்பு போட்டு தலையை அலசியதும் நல்ல கண்டிஷனரைப் பயன்படுத்த வேண்டும்.

குளித்து முடித்து வந்தபின் ஸ்டைலிங் சீரம் பயன்படுத்த மறக்காதீர்கள். சீரம் தடவுவதன் மூலம் தலைமுடி சிக்கல் விழாமல் இருக்கும்.

தலையைத் துவட்டும் போது, டவலால் அழுத்தித் துவட்டக்கூடாது. ஈரமான கூந்தலை அழுத்தித் துவட்டும் போது, முடி உதிர்தல் அதிகமாகும்.

டிரையர் பயன்படுத்துவதைத் தவிர்த்திடுங்கள். முடிந்தவரையிலும் கைவிரல்களால் கோதிவிட்டு, காற்றில் உலர விடுங்கள். அடுத்து நீங்கள் முக்கியமாக செய்ய வேண்டியது, ஈரத்தலைமுடியைச் சீப்பால் சீவவே கூடாது. அப்படி சீவும்போது முடி உதிர்தல் அதிகமாகும்.

# நண்டு ஒம்லெட்

**தேவையான பொருட்கள்:** நண்டு 3, இஞ்சி பூண்டு விழுது ஒரு டீஸ்பூன், மிளகுத்தூள் ஒரு டீஸ்பூன், சீரகத்தூள் ஒன்றரை டீஸ்பூன், பெரிய வெங்காயம் ஒன்று, சின்னவெங்காயம் 4, மல்லித்தூள் ஒன்றரை டீஸ்பூன், சோம்புத்தூள் கால் டீஸ்பூன், உப்பு தேவைக்கேற்ப, கொத்தமல்லித்தழை சிறிதளவு, மஞ்சள்தூள் கால் டீஸ்பூன்

**ஒம்லெட்க்கு:** முட்டை 4, உப்பு தேவையான அளவு, தேங்காய் எண்ணெய் 2 டீஸ்பூன்.

**செய்முறை:** வெங்காயம், கொத்தமல்லியை பொடியாக நறுக்கி கொள்ளவும். சின்ன வெங்காயத்தை ஒன்றும் பாதியாக தட்டி வைக்கவும். நண்டை நன்றாக சுத்தம் செய்து கொள்ளவும்.

பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடானதும் சிறிது எண்ணெய் ஊற்றி சூடானதும் அதில் வெங்காயம், சின்ன வெங்காயத்தை போட்டு வதக்கவும். வெங்காயம் நன்றாக வதங்கியதும் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும்

அடுத்து அதில் மிளகுத்தூள், சீரகத்தூள், மல்லித்தூள், சோம்புத்தூள், உப்பு, மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக வதக்கி சிறிது தண்ணீர் ஊற்றி வேக விடவும். நண்டு நன்றாக வெந்து தொக்கு பதம் வந்தவுடன் அடுப்பில் இருந்து இறக்கி ஆற விடவும்.

நன்றாக வெந்ததும் நண்டில் இருந்து சதை பகுதியை எடுக்கவும். ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றவும். அடுத்து அதில் நண்டு சதை, நண்டு வேக வைத்து மசாலா, தேவைப்பட்டால் உப்பு (நண்டு வேக வைக்கும் போதே உப்பு போட்டுதான் வேக வைத்திருக்கிறோம்) சிறிதளவை சேர்த்து நன்றாக கலக்கவும்.

அடுப்பில் தோசைக் கல்லை வைத்துச் சூடாக்கி தேங்காய் எண்ணெய் சேர்த்து நண்டு, ஒம்லெட் கலவையை ஊற்றி, இருபுறமும் திருப்பிவிட்டு வேகவைத்து சூடாக எடுத்து பரிமாறவும்.

சூப்பரான நண்டு ஒம்லெட் ரெடி.





## மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணி நாப்கின்கள்

அதிகப்படியான பெண்கள் இன்றைய காலகட்டத்தில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நாப்கின்களை பயன்படுத்துகிறார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணி நாப்கின்களை பெண்கள் ஏனோ விரும்புவதில்லை.

ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தும் நாப்கின்கள் உங்கள் சருமத்தில் காயங்களையும் எரிச்சலையும் ஏற்படுத்தும். சிலருக்கு இதனால் இன்பெக்சன் கூட ஏற்பட்டு விடும். இந்த பகுதியில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணி நாப்கின்களை உபயோகிப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி காணலாம்.

ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தும் நாப்கின்களில் பிளாஸ்டிக் மெட்டிரியல் உள்ளது. இது உராய்வின் போது காயங்களையும், அரிப்பையும் உண்டாக்கும், மேலும் இது பெண் உறுப்பிற்கு செல்லும் காற்றை தடுத்து நிறுத்தி விடும். ரேயான் மெட்டிரியல் மூலம் செய்யப்பட்ட நாப்கின்கள், பெண் உறுப்பின் ஈரப்பதத்தை உறிஞ்சி விடும். இதனால் தொற்றுக்களும், புண்களும் உண்டாகும். ஆனால் துணி நாப்கின்களில் இயற்கையான பஞ்சு உபயோகப்படுத்துவதால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது. ஒரு முறை மட்டுமே உபயோகப்படுத்தும் நாப்கின்கள் பஞ்சு, பிளாஸ்டிக் என எந்த மெட்டிரியல்களால் செய்யப்பட்டிருந்தாலும் கூட இதில் சில கெமிக்கல்கள் கலக்கப்பட்டிருக்கும். ஆனால் துணி நெப்கின்கள் இயற்கையான முறையில் தயாரிக்கப்படுபவையாகும்.

துணி நாப்கின்களை நீங்கள் சுகாதாரமாக பயன்படுத்தினால், பல தடவைகள் பயன்படுத்தலாம். பலமுறை உபயோகப்படுத்துவதால் இது சுத்தமாக இருக்குமா என்ற கேள்வி அனைவருக்கு இருப்பது தான். ஆனால் இதனை சுத்தம் செய்வது நீங்கள் நினைக்கும் அளவிற்கு கடினமானதல்ல. நீங்கள் இதனை இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைத்து, டீ ட்ரீ ஆயில் அல்லது, ஏதேனும் கிருமி நாசினியை கொண்டு சூடான நீரில் சுத்தம் செய்தாலே போதும். இதில் கசிவுகளும் இருக்காது.

இது உங்களுக்கு தேவையான வண்ணங்கள், டிசைன்கள் மற்றும் வடிவங்களில் கிடைக்கின்றன. எனவே இவற்றை கண்டு நீங்கள் முகம் சுழிக்கமாட்டீர்கள் என்பது மட்டும் உறுதி.



## நாய்களிற்கு கொடுக்ககூடாத உணவுகள்!

நமது வளர்ப்பு நாய்களிற்கு நாம் சாப்பிடுவதில் ஒரு பகுதியை கொடுப்பவர்கள்தான் அனேகர். ஆனால் அப்படி நாய் வளர்க்க கூடாது. அது பல உடல் தீங்குகளை ஏற்படுத்தும். நாய்கள் மனிதனை போல் படைக்கப்பட்டவை அல்ல. மனிதனின் ஊட்டச்சத்துகள் நாய்களுக்கு வித்தியாசப்படும். சில நேரம் நாம் கொடுக்கும் உணவு அவைக்கு பூட் பொய்சன் கூட ஆகலாம். கீழே குறிப்பிடும் உணவு பொருட்களை நாய்களுக்கு கொடுப்பதை உடனடியாக தவிர்த்திடுங்கள்.

சொக்லேட் : சொக்லேட் கண்டிப்பாக நாய்களுக்கும் பிடிக்கும். ஆனால் நாய்களுக்கு சொக்லேட் கொடுப்பது ஆபத்தானது. சொக்லேட்டில் இருக்கும் தியோப்ரோமைன் என்னும் கூறு மனிதர்களுக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை. மாறாக நாய்களுக்கு நச்சுத்தன்மையை ஏற்படுத்தும். குறிப்பாக கருப்பு சொக்லேட்டில் இந்த கூறு அதிக அளவில் உள்ளது. இதன் மூலம் வாந்தி, வயிற்று போக்கு, அதிக தாகம் போன்றவை நாய்களுக்கு ஏற்படலாம்.


உப்பு உணவுகள்: பொப் கோர்ன், பிரெஞ்சு ஃப்ரை போன்ற வறுத்த மற்றும் பொறித்த உணவுகள் நாய்களுக்கு கேடு விளைவிக்கும். அவற்றில் இருக்கும் அதிக உப்பின் காரணமாக அதிக தாகம் எடுத்தால், அல்லது அதிகமாக சிறுநீர் கழித்தல் போன்ற உபாதைகள் தோன்றும். சில நேரம் வாந்தி, வலிப்பு, வயிற்று போக்கு, அதிக அளவு தண்ணீர் பெருகியதால் வயிற்று உப்பல் போன்றவை ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு.

பொரித்த கொழுப்புள்ள இறைச்சி: உங்கள் நாய் இறைச்சி பிரியரா? அதிக கொழுப்பு உள்ள பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி போன்றவற்றை தவிர்த்திடுங்கள். இவற்றால் கணைய அழற்சி ஏற்படும். இவற்றில் அதிக உப்பு தன்மை இருப்பதால் வயிற்று கோளாறுகள் ஏற்படும். நன்கு வேக வைத்த இறைச்சியை மட்டும் கொடுப்பது நல்லது. பச்சையாக கொடுப்பது அல்லது சரியாக வேக வைக்காத இறைச்சியை கொடுப்பது குடலை பாதிக்கும்

பால் பொருட்கள்: பல நாய்கள் லாக்டோஸ் சகிப்புத்தன்மை அற்றவர்களாக உள்ளன. அதாவது பாலில் இருக்கும் இயற்கையான சர்க்கரையை உடைக்கும் என்சைம்கள் அவற்றின் உடலில் குறைவாக இருக்கும். ஒரு சிறிய அளவு பால்பொருட்கள் கூட ஆபத்தை விளைவிக்கலாம். இதனால் வாந்தி, வயிற்று போக்கு மற்றும் குடல் அழற்சி ஏற்படலாம். பால்பொருட்களின் அதிக கொழுப்பு கணைய அழற்சியை ஏற்படுத்தலாம். உணவு ஒவ்வாமை மற்றும் அரிப்பும் சில நேரங்களில் ஏற்படும்.

வெங்காயம் மற்றும் பூண்டு: வெங்காயம் மற்றும் பூண்டு நாய்களின் சிவப்பு அணுக்களை பாதிக்கின்றன. ஒரே சமயத்தில் இவற்றை அளவுக்கு அதிகமாக உட்கொள்ளும்போது பூட் பொய்சன் ஏற்படலாம். இதன் ஆரம்ப அறிகுறிகள் சோர்வு, வாந்தி மற்றும் மூச்சு திணறல் ஆகியவை ஆகும்.

உலர் மற்றும் கனிந்த திராட்சை: விற்றமின் அதிகமுள்ள இந்த பழம் மனிதர்களுக்கு பல நன்மைகளை செய்யும். ஆனால் நாய்களுக்கு சிறுநீரக செயலிழப்பை ஏற்படுத்தும். ஒருசிறிய அளவு உட்கொள்ளல் கூட உடனடியாக சோர்வு மற்றும் வாந்தியை ஏற்படுத்தும். உங்கள் வீட்டு செல்லமாக பார்க்கப்படும் நாய்களுக்கு கொடுக்க கூடாத உணவுகளை பற்றிய தெரிந்து கொண்டீர்களா? இனி மறந்தும் இவற்றை அவைகளுக்கு கொடுக்காமல் ஆரோக்கியமாக வளர்த்திடுங்கள்!



# குர்மீத் ராம் ரஹீமின் திகில் கதை

## ஒரு மொடர்ன் சாமியும் நூற்றியைம்பது சீடப் பெண்களும்

சியா

தோரா சச்சா சவுத்தா ஆன்மீக அமைப்பின் தலைவர் குர்மீத் ராம் ரஹீம் சிங்தான் இன்றைய திகதியில் அதிகம் பேசப்படும் நபர். சாமியார்ஞ் பாலியல் வல்லுறவு குற்றவாளிஞ் பெருமளவு ஆயுதங்களை வைத்து பாதாள உலகமொன்றையே இயக்கியவர் என விரிகிறது ரஹீம் சிங்கின் இன்றைய கதை. அது மிக சுவாரஸ்யமும், அதிர்ச்சியும் மிக்கது.

சாமியார் என்றால் முற்றும் துறந்தவர், ஒரு ஜென் மனநிலையில் இருப்பார் என நினைத்தால் ஏமாந்து விடுவீர்கள். ரஹீம் இந்த வகைக்குள் இல்லை. அவர் மொடர்ன் சாமியார். ஒரு மனிதனால் அதிகபட்சம் எவ்வளவு கேளிக்கையாக வாழமுடியுமோ அவ்வளவு கேளிக்கையான வாழ்க்கை நடத்தினார். பஞ்சாபிகளிற்குள் ரஹீம் போல ஏராளம் பாபாக்கள் இருக்கிறார்கள். பஞ்சாபி சமூகத்திற்குள் பாபாக்களின் செல்வாக்கு, அவர்கள் இது ஏன் உருவானதென்பதை அடுத்த வாரம் குறிப்பிடுகிறேன்.

ராஜஸ்தான் மாநிலத்தின் சிறிகுரு சாமூடியா கிராமத்தில் 1967ஆம் ஆண்டு பிறந்தவர் ரஹீம். அவரது குடும்பமோ தோரா சச்சா சவுதா அமைப்பின் விசுவாசிகள். இந்த அமைப்பு 1948 ஆம் ஆண்டு தோன்றியது. மஸ்தானா பலுசிஸ்தானி என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பில் 7 வயதில் ரஹீம் இணைந்து கொண்டார்.' அப்போது அமைப்பின் தலைவராக இருந்தவர் ஷா ஷட்னம்.

ரஹீமின் விசுவாசம், திறமை எல்லாம் சேர்ந்து அவரை முன்னிலைக்கு கொண்டு வந்தது. 1990 இல் அவரை அமைப்பின் தலைவராக ஷா ஷட்டம் அறிவித்தார்.

ரஹீம் அமைப்பின் தலைமை பொறுப்பை ஏற்ற பின்னர் அமைப்பின் கதையே மாறிவிட்டது. பொதுவாக பஞ் சாபியர்கள் மத்தியில் உள்ள ரஹீம் போன்ற பாபாக்கள் எல்லோரும் நடத்தையில் அண்ணன் தம்பிகள்தான். கட்டப்பஞ் சாயத்துக்காரர்களாகத்தான் இருப்பார்கள். ரஹீம் இதில் அண்ணன். அவ்வளவு தான்.

ஹரியானாவின் சிஸ்ரா பகுதியில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தோரா சச்சா சவுதாவின் தலைமையகம் விரிந்துள்ளது. அது ஒரு சிறிய செழிப்பான நகரம் என்றுதான் கூறவேண்டும். குடியிருப்புக்கள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள், மருத்துவமனைகள், திரையரங்கம், இரண்டு எரிபொருள் நிலையங்கள் என சகல வசதிகளையும் கொண்ட நகரம்.

அதன் மையத்தில் பிரமாண்ட தியானக் கூடம் உள்ளது. அங்கு குண்டுதுளைக்காத விதத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிசொகுசு பாதாள மாளிகையில்தான் ரஹீம் வாழ்கிறார். பஞ்சாப் பாபாக்கள் பாதிப்பேர் போட்டி பாபாக்களால் கொல்லப்பட்டு விடுவார்கள். இதனால்தான் இந்த ஏற்பாடு. அங்கு அதிநவீன ஆயுதங்கள் ஏராளம் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த பாதாள மாளிகையில் 150 பெண் சீடர்கள் இருக்கிறார்கள். அவர்களின் முழு நேர பணி என்ன தெரியுமா? ரஹீமிற்கு பணிவிடை செய்வது!. இதுதவிர, தோரா சச்சா சவுதா வளாகத்தில் 100 ஆண் சீடர்கள் இருக்கிறார்கள். அவர்களிற்குதான் ஆச்சிரம பணி.

இந்த அமைப்பில் சுமார் ஆறு கோடி பக்தர்கள் உள்ளனர். உலகமெல்லாம் 56 கிளைகள் உள்ளன. மத்திய கிழக்கு, வட அமெரிக்கா, வட ஐரோப்பா, ஆசிய பசுபிக் நாடுகளில்தான் இது பரந்துள்ளது.

ரஹீம் ஒரு கேளிக்கை பிரியர். ஆன்மீககுரு, கொடையாளர், இயக்குனர், நடிகர், இசையமைப்பாளர், பாடகர், விளையாட்டு வீரர், பைக் பிரியர், எழுத்தாளர் என பன்முக திறமை கொண்ட மொடர்ன் சாமியார். அலங்கார ஆடைகள் அணிந்தபடி திறந்தவெளி மைதானத்தில் அடிக்கடி பாடி ரசிகர்களை குஷிப்படுத்துவார். இதெல்லாம் ஆன்மீக பாடல்கள் கிடையாது. அஜால் குஜால் பாடல்கள்தான். ரஹீம் பல இசை அல்பங்களை வெளியிட்டுள்ளார். ஹைவே லைட் சார்ஜர் என்ற முதலாவது இசையல்பம் மில்லியன் கணக்கில் விற்று தீர்ந்தது. 2014இல் மெசன்ஜர் ஒவ் கோட் என்ற படத்தில் நடித்திருக்கிறார். அடுத்தடுத்து மூன்று படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார்.

17 கின்னஸ் சாதனைகள், 27 ஆசிய சாதனைகள் உள்ளிட்ட 53 சாதனைகளிற்கு சாமியார் சொந்தக்காரர் என சீடர்கள் புல்லரிக்கிறார்கள். இங்கு பாபா போட்டி நடப்பதால் ஒவ்வொரு பாபாவின் சீடரும் சாதனை போட்டியில் ஈடுபடுவது வழக்கம்.

தமது குருகேளிக்கைபிரியர் என்றபோதும் எந்த தவறும் செய்யமாட்டார் என்றே அவரது பக்தர்கள் நம்புகிறார்கள். இந்த குருட்டு நம்பிக்கைதான் பாபாக்களின் மூலதனமே!

ரஹீமிற்கு திருமணமாகி இரண்டு மகள்கள், ஒரு மகன் உள்ளார். இதைவிட இன்னொரு பெண்ணை தத்தெடுத்து வளர்த்து வருகிறார். வளர்ப்பு மகள் ஹனிப்பிரீத் இன்சான். மெசன்ஜர் ஒவ் கோட் படத்தை இயக்கி, சாமியாருடன் ஜோடி போட்டவர்தான் இவர். இதன்பின் தான் தத்தெடுத்தார். பின்னர் விஸ்வாஸ் குப்தா என்பருடன் திருமணமும் செய்து வைத்தார்.

திருமணத்தின் பின் ஹனிப்பிரீத் தனது கணவனுடன் தங்குவதில்லை. பாபாவிற்கு பணிவிடையென அவரது அறையிலேயே தங்கியிருப்பார். ஒருமுறை ஹனிப்பிரீத் குடும்பத்தை அழைத்துக் கொண்டு சாமியார் சுற்றுலா போயிருக்கி றார். அங்குதான் சாமியாரும், வளர்ப்பு மகளும்உறவுகொண்ட ஏடாகூட காட்சியை ஹனிப்பிரீத்தின் மாப்பிள்ளை கண்டிருக் கிறார். இதையடுத்து சாமியாரின் ஆட்கள் மாப்பிள்ளையை அடித்து உதைத்து இதைப்பற்றி மூச்சே விடக்கூடாதென மிரட்டியுள்ளனர். அதன்பின் ' அவர் அங்கிருந்து வெளியேறி தனது தாய்வீட்டுக்கு சென்றுவிட்டார்.

சாமியாருக்கு சிக்கல் வந்தது பெண் துறவியொருவர் 2002இல் அப்போதைய இந்திய பிரதமர் வாஜ்பாய், பஞ்சாப் ஹரியாணா தலைமை நீதிபதிக்கு கடிதம் எழுதினார். அதில் தனக்கு நேர்ந்த கொடுமையை விபரித்திருந்தார்.

அந்த பெண்ணின் குடும்பம் ரஹீம் சிங்கின் தீவிர பக்தர்கள். அவர்களின் விருப்பத்தால் துறவியானார். பாதாள அறையில் இருந்தபடி இந்த பெண்ணை அழைத்துள்ளார். அப்போது தொலைக் காட்சியில் ஆபாசபடம் ஒளிபரப்பாகி

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



ரஹீமும் ஹனிப்பிரீத்தும்



சிறைக்கு கூடவே செல்லும் ஹனிப்பிரீத்

12-ம் பக்க தொடர்ச்சி...


வடமாகாணசபை தேர்தலில் வவுனியாவில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

இந்தகாலத்தில் நெடுங்கேணியில் இவர் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் அமைத்தார். ஏற்கனவே செய்த வியாபாரங்கள் கைகொடுக்காமல்,இதற்காக கடனும் வாங்கியிருந்தார். ஆனால் எரிபொருள் நிரப்பு நிலைய வியாபாரமும் நன்றாக போகவில்லை. வடமாகாணசபை அமைந்ததும், அப்போது கூட்டுறவு அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசனை அணுகி, தனது எரிபொருள் நிரப்பு நிலையத்தை கூட்டுறவு திணைக்களம் வாங்க வேண்டுமென கேட்டார். இந்த விடயத்தை கூட்டுறவு திணைக்களத்திடம் ஐங்கரநேசன் பாரப்படுத்த, கூட்டுறவு திணைக்கள அதிகாரிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு சென்று ஆய்வு நடத்தினர். அது நட்டத்தில் இயங்குவதாகவும், கொள்வனவு செய்வது பலனில்லையென்றும் அதிகாரிகள் அறிக்கையிட, ஐங்கரநேசன் விடயத்தில் இருந்து ஒதுங்கிக்கொண்டார்.

பின்னர் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையை மாகாணசபையில் லிங்கநாதன் சமர்ப்பித்தார். இந்த பிரேரணை தொடர்பான நிறைய சர்ச்சைகள் உள்ளது குறிப்பிடத்தக்கது. யு எஸ் ஹோட்டல் விருந்து வைத்து பிரேரணைக்கு முயற்சிகள் நடந்ததாக வேறு உறுப்பினர்கள் குற்றம்சாட்டியிருந்தனர்.

மாகாணசபைக்குள் ஏற்பட்ட பிளவு விஸ்பரூபமாகியிருந்த சமயத்தில், அது வெடித்து சிதற யார் திரி கொளுத்துவார்கள் என பார்த்திருந்த சமயத்தில், லிங்கநாதன் அன்று சமர்ப்பித்த பிரேரணை அதை செய்தது.

இதை தவிர்த்தால் லிங்கநாதன் மாகாணசபைக்குள் ஓரளவு சிறப்பாக செயற்பட்ட உறுப்பினர்தான். 1994 இல் இருந்து உள்ளூராட்சி நிர்வாகத்தில்



கிடைத்த அனுபவம் மாகாணசபைக்குள் தெரிந்தது. வடமாகாணசபை தலைமை அலுவலகத்தை மாங்குளத்திற்கு மாற்றுதல்... மாகாணசபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதம செயலாளர், முதலமைச்சர் உள்ளடங்கிய திட்டமிடல்சபையை உருவாக்குதல்... வடக்கில் சிறிய குளங்களை புனரமைத்து மழை நீரை சேமித்தல்... மாகாணசபைக்கு கீழுள்ள 33,000 அலுவலர்கள் மத்திய அரசின் கீழ் செயற்படும் (பிரதேசசெயலகங்களில் உள்ள விளையாட்டு, கலாச்சார உத்தியோகத்தர்கள், கிராமிய அபிவிருத்தி) உத்தியோகத்தர்களை மாகாணசபைக்குள் செயற்படும் விதமாக மாவட்டம் தோறும் இணை அலுவலகங்கள் திறத்தல்... உள்ளூர் வீதிகளை புனரமைத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்களை மாகாணசபையில் கவனப்படுத்தியிருக்கிறார். இதில் ஏனைய உறுப்பினர்களை விட முன்னிலையிலேயே இருக்கிறார். பேசும்சபையாக மாகாணசபைக்குள் ஓரளவு ஸ்கோர் செய்திருக்கிறார். அரசியல் செயற்பாட்டிடத்தில்தான் கணிசமாக கோட்டைவிட்டிருக்கிறார்.

முதலமைச்சரிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சமயத்தில் இவருக்கும் தூண்டில் போடப்பட்டது. ஆனாலும் மசியவில்லை. பல தடவைகள் கட்சிக்கு தெரியாமல் தடால் முடிவுகள் எடுத்திருந்தாலும், இந்த சமயத்தில் முதலமைச்சரிற்கு உறுதியான ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

வவுனியா வடக்கு கிராமங்கள் சிலவற்றில் லிங்கநாதனிற்கு தனிப்பட்ட செல்வாக்கு ஓரளவிற்கு இருந்தாலும், வவுனியா மாவட்டத்தில் கட்சியின் செல்வாக்கின் மூலமே உறுப்பினர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

போராட்ட வரலாற்றில் இருந்து வந்தமையால் இயல்பாகவே மக்கள் மத்தியில் செயற்படும் இயல்பு, செயற்படுத் தப்படும் திட்டங்களை கண்காணித்தல், நிர்வாக நெளிவுசுளிவுகளிற்குள்ளால் வேலைத்திட்டங்களை முன்னகர்த்தல் அனைத்திலும் வவுனியா மாகாணசபை உறுப்பினர்களில் முன்னிலையில் இருக் கிறார்.

---



ஆச்சிரமம் அருகே பாதுகாப்பில் இராணுவம்



விபாசனா

கொண்டிருந்தது. தன்னுடன் உறவுக்கு வருமாறு அழைத்துள்ளார். குரு இப்படியானவரா என அந்த பெண் அதிர்ந்து நிற்க, கிருஸ்ணருக்கு 360 கோபியர் இருந்தார்கள்தானே என கூறி துப்பாக்கிமுனையில் அவரை சீரழித்தார். அவரது கடிதத்தின்படி 40 வரையான பெண்கள் இப்படி சீரழிக்கப்பட்டுள்ளனர். ஆசைக்கு இணங்கியவர்களின் கணக்கு இதில் அடங்கவில்லை! இந்த கடிதத்தை எழுதிய பெண் தனது அடையாளத்தை முதலில் வெளிப்படுத்தவில்லை. ரஹீமின் அடியாட்கள் நிச்சயம் கொன்றுவிடு வார்கள். இந்த கடிதத்தையடுத்து உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து வழக்கு பதிவுசெய்து விசாரணையை ஆரம்பித்தது. பதினைந்து வருடங்களாக நடந்த வழக்கின் தீர்ப்பே இப்பொழுது வந்துள்ளது.

கடிதம் எழுதிய பெண்ணின் மூத்த சகோதரனும் ரஹீமின் தீவிர பக்தன். ஆச்சிரமத்தில்தான் இருந்தான். பின்னர் தான் அவனுக்குதங்கைக்குநடந்தகொடுமை தெரிய வந்தது. ரஹீமுடன் சண்டைபிடித்து அங்கிருந்து வெளியேறினான். அந்த கடிதத்தை அவன்தான் எழுதியதாக சந்தேகித்த ரஹீமின் ஆதரவாளர்கள் அவனை கொன்றுவிட்டனர். இந்த வழக்கின் இறுதி விசாரணை செப்ரெம்பர் 16 இல் ஆரம்பிக்கிறது!

18 பெண்கள் சாட்சியமளிக்க தயாராக இருந்த போதும், மிரட்டல் மற்றும் பணம் கொடுத்தல் மூலம் அவர்களை ரஹீம் தடுத்து விட்டார். இறுதியில் இரண்டு பெண்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். ரஹீமிற்கு அருகில் நின்று, அச்சமின்றி சாட்சியமளித்தனர்.

இந்த கடிதத்தை எழுதிய பெண் பின் தோரா சச்சா சவுத்தி அமைப்பில் இருந்து வெளியேறி திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளின் தாயாக அமைதியான வாழ்க்கை நடத்துகிறார். அவரது நீதிக்கான போராட்டம் அளப்பரியது. மெச்சப்பட வேண்டியது. அவரது போராட்டத்திற்கு முழு குடும்பமே ஒத்தாசையாக இருந்தது. நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல ஒருமுறை மட்டுமே அந்த பெண் சென்றார். மிகுதி தவணைகளிற்கெல்லாம் அவரது தந்தையார்தான் சென்று வந்தார். அவர்களை சாட்சி சொல்லாமல் செய்ய ரஹீமின் அடியாட்கள் ஆரம்பத்தில் கடும் மிரட்டல்கள் விடுத்தனர். கொலை செய்யப்போவதாக மிரட்டினர். ஆனால் அந்த பெண்ணின் குடும்பம் அஞ்சவில்லை. நிலைமை கைமீறி சென்றபின்னர், பெருந்தொகை பணம் கொடுக்கவும் ரஹீம் சம்மதித்தார். ஆனால் அந்த சம்பவத்திற்கு நீதி மட்டுமே தமக்கு தேவையென அந்த குடும்பம் மறுத்துவிட்டது!

நீதிமன்றத்திற்கு சென்றபோது நூற்றிற்கும் அதிக வாகனங்களின் அணிவகுப்பில் சாமியார் சென்றார். அவருக்கு தண்டனை வழங்கப்பட்டால் உலகவரைபடத்திலிருந்து இந்தியா அழியுமென ஆதரவாளர்கள் எச்சரித்தனர். ஆனாலும், ரஹீம் குற்றவாளி யென அறிவிக்கப்பட்டார். பின்னர் நடந்த கலவரங்களில் 38 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். தோரா சச்சா சவுதா தலைமை வளாகத்திற்குள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் குழுமிவிட்டனர். பெரும் பிரயத்தனப் பட்டுத்தான் காவல்துறை அவர்களை வெளியேற்றியது. ரஹீம் சிறைவைக்கப் பட்டுள்ள இடத்திற்கு ஹெலிகொப்டரில் சென்ற நீதிபதி அங்கு வைத்தே தீர்ப்பை அறிவித்தார். இதன்போது கைகூப்பி கண்ணீர்விட்டு அழுத ரஹீம் தன்னை மன்னித்து விடுமாறு கெஞ் சியுள்ளார். ஆனாலும் நீதிபதி அவருக்கு பத்தாண்டு சிறைத்தண்டனை இரண்டு அறிவித்துள்ளார்.

மேலும் பல வழக்குகள் சாமியார் மீது உள்ளது. 2002 இல் கொலைகுற்றத்தில் தொடர்பு, 2014இல் தனது சீடர்களிற்கு ஆண்மை நீக்கம் செய்தது உள்ளிட்ட பல குற்றங்கள் உள்ளன. இவருக்கும் மாநிலத்தில் ஆளும் பாஜக அரசுக்குமிடையில் நெருக்கிய தொடர்புள்ளது. சாமியாரின் ஆதரவாளர்களின் வாக்கு பாஜகவிற்கு தேவை. குற்றங்களில் இருந்து தப்பிக்க பாஜகவின் ஆதரவு சாமியாருக்கு தேவை. ஆனால் இந்த டீல் இம்முறை பலிக்கவில்லை.

சாமியார் சிறைக்கு சென்ற பின்னர் தோரா சச்சா சவுத்தா அமைப்பின் அடுத்த தலைவர் யார் என்ற கடும் போட்டி எழுந் துள்ளது. இரண்டு பெண் துறவிகளிற் கிடையில் கடும்போட்டி நிலவுகிறது. பாபாவின் குடும்பம் ஆச்சிரமத்தில் தலையிடுவதில்லை. ஆச்சிரம விதிப்படி பாபா குடும்பத்தினர் தலைமை பதவிக்கு வர முடியாது.

பாபாவிற்கு மிக நெருக்கமான விபாசனா (35), ஹனிப்பிரீத் (34) ஆகியோருக்கிடை யிலேயே போட்டி நிலவுகிறது. ஹனிப்பிரீத் பாபாவுடன் சிறை மட்டும் கூட சென்றவர். பாபாவின் வளர்ப்பு மகள் வேறு. ஆனால் ஆச்சிரம நிர்வாகத்தில் பாபாவிற்கு அடுத்த இடத்தில் இருப்பவராக விபாசனா கருதப்படுகிறார். இதனால் த்லைமை நிர்வாகியாக இருவரில் ஒருவர் பொறுப்பேற்கலாம். பாபா சிறையிலிருந்து வழிநடத்த, இவர்கள் ஆச்சிரமத்தில் இருந்து செயற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.


கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்






# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்



சர்மினி (வயது 26)
வவுனியா

கேள்வி: எனது கணவனிற்கு 29 வயது. எங்களிற்கு ஒரு பெண் குழந்தை உண்டு. காதல் திருமணம் செய்தோம். என்னைவிட வடிவானவர். அவருக்கு நிறைய பெண் தொடர்பு இருந்தது இப்போது தெரிய வருகிறது. இப்போதும் பலருடன் பேசுகிறார். கேட்டால் எனக்கு அடிக்க வருகிறார். அவரது அக்காவும் என்னை குறைசொல்விக் கொண்டு இருக்கிறார். வீட்டை விட்டு போனால் பல நாட்கள் வரமாட்டார். கேட்டால் அக்கா வீட்டில் நிற்பதாக சொல்கிறார். ரெலிபோனில் ரெக்கோடர் உள்ளது. அவர் பெண்களுடன் கதைப்பது அதில் பதிவாகிறது. இவர் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி. புனர்வாழ்வு நிலையத்தில் இருந்தபோது நான்தான் உழைத்து குடும்பத்தை பார்த்தேன். இப்போது இவரது நடவடிக்கைகளால் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் உள்ளது. ஆனால் குழந்தையின் எதிர்காலத்திற்காக என்ன செய்வதென தெரியாமல் உள்ளது. இதில் என்னில் பிழையுள்ளதா? நான் ஏதாவது செய்ய வேண்டுமா? இந்த பிரச்சனையை எப்படி சமாளிப்பது?

பதில்: அன்புச் சகோதரி, உங்களால் எனக்கு எழுதப்பட்டுள்ள நீண்ட மடல் உங்களின் நிலையைத் எனக்குத் தெளிவாக படம்போட்டுக் காட்டுகின்றது. உண்மையில் உங்கள் இருவருடனும் தனித்தனியாக கதைக்காமல் என்னால் எந்தவொரு தெளிவான நிலைப்பாட்டிற்கும் உறுதியாக வர முடியாமல் இருக்கின்றேன். இருந்தபோதும் உங்கள் நீண்ட மடலில் இருந்து எனக்கு ஒன்று தெளிவாகப் புரிகின்றது. உங்கள் இருவருக்குமிடையிலான 'பிணைப்பு' வலுவிழந்து கொண்டு செல்கின்றது.

உங்கள் மடலின் அடிப்படையில் இன்னமும் உங்கள் கணவன் உங்களுடன் தொடர்பில் இருக்கின்றார் பிரிந்து செல்லவில்லை. உங்கள் இருவருக்கிடையில் உடலுறவில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறியுள்ளீர்கள். உங்கள் பிள்ளையை தன்னோடு கொண்டு செல்ல முயற்சித்ததாக கூறியுள்ளீர்கள். எனவே பிள்ளைப் பாசமும் உங்கள் கணவருக்குள்ளது. அப்படிப் பார்க்கும் போது உங்கள் கணவர் பக்கம் பெரியளவக்கு பிரச்சினை இல்லை போல் தோன்றுகின்றது. அன்புச் சகோதரி நான் கூறுவதை இட்டு என்மீது கோபப்படாமல் சற்றுப் பொறுமையாக அமைதியாக சிந்தித்துப் பாருங்கள்.

நான் நினைக்கிறேன், உங்கள் கணவனின் பிறந்தபலன், கிரக நிலைகள், அவரின் உடல் அங்க இலட்சணங்கள் (சாமுத்திரிகா இலட்சணங்கள்) சில வேளைகளில் பெண்களை வசீகரிக்கும் தன்மையைக் கொண்டு இருக்கலாம் அல்லது, அவரே பெண்களுடன் நட்பு பாராட்டிப் பழகியிருக்கலாம். அதில் என்ன தவறு இருக்கின்றது. உங்கள் கணவன் உங்களுக்கு செலவழிக்க வேண்டிய குடும்ப வருமானத்தை வேற்றுப் பெண்ணுக்காக இழந்தால், அல்லது வேறு பெண்களுடன் உடல் ரீதியிலான உறவைப் பகிர்ந்து கொண்டால் அல்லது உங்களைக் கைவிட்டு வேறு பெண்களோடு சேர்ந்திருந்தால், நான் உங்கள் பக்கத்துக்கு வருகின்றேன். உங்கள் மடலின் படி அப்படி எதுவும் இல்லையே. திருமணமான ஆண் ஒருவர் வேறு எந்தப் பெண்களுடனும் நட்புப் பாராட்டக் கூடாது, பேசக் கூடாது, பழகக் கூடாது, என்பதெல்லாம் எச் சட்டத்திலும் இல்லை.

நான் நினைக்கிறேன், நீங்கள் கூறியவாறு உங்கள் கணவன் phone இல் ஒரே பெண்களின் தொடர்பு தான், வாய் திறந்தால் பொய் சொல்கிறார், எப்போதும் மூடிமறைப்பு என்று கூறுவது இல்லாமல் பொலிஸ் மாதிரி செயற்படுகின்றீர்களோ தெரியவில்லை. இதேதத்துவம் கட்டிளமைப் பருவ பிள்ளைகள் உள்ள பெற்றோருக்கும் பொருந்தும். பிள்ளைகளுக்கு எவ்வளவுக்கு எவ்வளவு அன்னியோன் நியமாக நட்புடன் பழகுகின்றோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு பிள்ளைகள் தங்கள் வாழ்வில் நடைபெறும் ஒவ்வொரு விடயங்களையும் பெற்றோருக்குத் தெரியப்படுத்துவார்கள். பொலிஸ்காரன் போல் ஏன் போனாய், எதற்குப் போனாய், யாரைக் கேட்டுப் போனாய்? என்று கேள்வி கேட்டுத் தொண தொணக்கும் பெற்றோருக்குப் பொதுவாக கட்டிளமைப் பருவப் பிள்ளைகள் பொய்யே கூறுவார்கள். நான் நினைக் கின்றேன், நீங்களும் உங்கள் கணவன் மீது அளவுக்கதிகமான ஆக்கிரமிப்பைச் செய்கிறீர்களோ? ஒன்றொன்றுக்கும் நீட்டி முளக்கும் மனைவிமாருக்கு பொதுவாக கணவன்மார் பொய்யே சொல்ல வேண்டியுள்ளது.

அதே போல் நீங்கள் கூறிய பல விடயங்கள் உங்கள் இருவருக்குமிடையில் முரண்பாடு சண்டை வரும் போது உங்கள் கணவனால், அறிவு மங்கிய நிலையில் கோப உணர்வு மேலோங்கிய நிலையில் கூறிய வார்த்தைகள் உண்மையான நிலைப்பாடு என்று கொள்ள முடியாது. உங்கள் கணவருக்கு பெண்களுடன் தொடர்பு உள்ளது என்று நீங்கள் (வேறு ஒரு) கூறியிருந்தால் விடயம் வேறு. நீங்கள் கூறுவது போல் அவருடன் தொடர்பில் உள்ள எல்லாப் பெண்களுடன் அவருக்கு தொடர்புள்ளதாக நீங்கள் நினைப்பது தவறு. சரி அப்படியான நிலைப்பாடு இருந்தால் கூட உங்கள் பக்கம் இழுப்பதாகவே இருக்க வேண்டுமே ஒழிய மாறாக "தெரிந்த பேயிலும் பார்க்க தெரியாத பிசாசு பறவாயில்லை" என்று போக வைப்பதாக இருக்கக் கூடாது.

நான் உங்கள் கணவர் 100% சரியானவராக உள்ளார் என்று கூறவில்லை. ஆனால் உங்களில் இருக்கக் கூடிய சில இயல்புகள் காரணமாகத் தானோ. ஊங்கள் கணவர் இப்படியாக பதிலிறுப்பு நடவடிக்கைகளில் இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்களோ? என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் ஏன் ஒரு தடவை, உங்கள் பக்கம் இருக்கக் கூடிய குறைபாடு, அல்லது பிரச்சினைக்குரிய உங்கள் இயல்பு பற்றி சிந்திக்கக் கூடாது? ஏனெனில் உங்கள் கணவர் உங்கள' மீது பாசமில்லை என்றோ? உங்களை விட்டுப் பிரிந்து விட்டார் என்றோ? கூறவில்லையே? உங்கள் கணவருக்கு பெண்களுடன் தான் அதிக நட்பு. என்பதை கீழ்தரமான (பாலியல் ரீதியான) நட்பு எனப் பார்க்கின்றீர்கள். அப்படியெனின் எல்லாப் பெண்களும் விபசாரம் செய்யும் பெண்கள் என்றா? எண்ணுகிறீர்கள். உங்கள் கணவனின் உயர்ந்த ஒழுக்கமான புரிந்துணர்வான பெண்களைக் கவரக் கூடிய பெருந்தன்மைகள் கொண்ட நட்பாக இருக்கக் கூடாதா?

உங்கள் கணவனுடன் ஆறதலாக மிகவும் அன்பாக மிகவும் பொறுமையான புரிந்துணர்வுடன் கலந்து பேசுங்கள். உங்கள் எதிர்பார்ப்புக்கள், ஆதங்கங்கள் பற்றி தெளிவாக அமைதியாக எடுத்துக் கூறுங்கள். 'கணவனுக்கு வேறு பெண் ணுடன் ஏற்படும் தொடர்புகளால், AIDS போன்ற ஆபத்தான நோய்கள் கூட வரலாம் என்பதைப் புரியவையுங்கள். ஏன் தேவையற்ற எதிர்பால்த் தொடர் புகள் காரணமாக நீதிமன்றங்கள், சிறைச்சாலைகளைக் கூட சந்திக்க வேண்டி வரலாம் என்பதைப் புரிய வையுங்கள். இன்னும் சொன்னால் சட்டத்துக்கும், சமூக நியதிக்கும் புறம்பான எதிர்பால்த் தொடர்புகள் கொலையிலோ, அல்லது தற் கொலையிலோ தான் முடிவுக்கு வரும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.


காதல் செய்து கரம் படித்த உங்கள் கணவன் உங்களுடன் மகிழ்வாக வாழ்வதும் உங்களிடம் இருந்து துலீர விலகுவதும் நுலீறிற்கு 75 % உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதை மறக்க வேண்டாம்.

உங்களுக்கு இன்னமும் இது தொடர்பாக உதவி தேவையெனில் நல்ல ஒரு மனநல ஆலோசகரை நாடுங்கள். எல்லாம் இனிதே நடக்கும் கவலை வேண்டாம்.

**உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்**

**மனமே நலமா?**

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர்
deepamdesk@gmail.com



வாரத்தில் சில நாட்கள் மட்டுமே வேலை நாட்கள்
ஆனால் மாத்தில் 40,000.00ரூபா வரை சம்பாதிக்கலாம்
இளைஞர்கள், யுவதிகள் விண்ணப்பங்களை
அனுப்பலாம், உயர்கல்வி கற்றக்கும் மாணவர்களுக்கும்
பகுதி நேர வேலை வாய்ப்பு

விண்ணப்ப முடிவு திகதி 31/08/2017

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

நிர்வாகப் பணிப்பாளர் (தீபம் வாரமலர்)
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட்
989/1 பருத்தித்துறை வீதி ,கல்வியங்காடு
நல்லூர். யாழ்ப்பாணம் 0768255560,0214927561

WELLA

ஆண், பெண் இருபாலரும் சிறந்த
முறையில் சிகை அலங்காரத்தை
செய்து கொள்ள...

* Facial
* Strighting
* Bleaching
* Face Massaging
* Threading

WELLA
Hair dressing
LADIES/GENTS
08, New Market, Kalvijankadu, Jaffna
077 658 4453, 021 205 4116

தீபம்
செய்திகள்



இப்போது புதிய வடிவமைப்புடன் விறு விறுப்பான
செய்திகளுடன் வாரத்தில் எழு நாட்களும் (24 X 7)
வலம் வருகின்றது.

தீபம்

நீங்கள் உடனுக்குடன் பார்வையிட
www.deepamtv.asia

தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247

கிளைக் காரியாலயங்கள்
வேலணை, வங்களாவடிச் சந்தி
021 221 5472
மல்லாகம். கே.கே.எஸ் வீதி
021 224 3393
சங்கானை, ஒடக்கரை வீதி
021 225 1664

சசிகா
லேணர்ஸ்



இல. 821C
மணிக்கூட்டுக் கோபுர வீதி.
யாழ்ப்பாணம்
தொலைபேசி
021 222 8004

விளம்பரத் தொடர்புகளுக்கு 076 825 5567, 077 152 1586







இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 03.09.2017 அன்று வெளியிடப்பட்டது.